
பக்கங்கள்: 12

Registered as a Newspaper

தரமான உதிரிப்பாகங்களை கொண்டு தயாரிக்கப்படும்




நியூரோன் வாட்டர் பம்புகளை வாங்குங்கள்

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ. 5-00

PUMP With Standard Accessories Select



NEWTONE Water Pumps

மலை: 5 சுக்கில ஞூ மாசி மீ 19 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 05 (03—03—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 4

# தமிழீழக் கோரிக்கைக்கு இந்தியா ஆதரவில்லை!

## திட்டவட்டமாக அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 3

''இலங்கையில் தமிழர்களின் எந்த ஒரு குழுவும் எந்த ஒரு வடிவிலும் ஈழத்திற்காக விடுக்கும் வேண்டுகோளை இந்தியா ஆதரிக்க வில்லை.''

— இதனை இந்திய அரசு தெளிவுபட தெரிவித்திருப்பதாக புதுடில்லியில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணசபை தன்னை சுதந்திர ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக பிரகடனப்படுத்திய தீர்மானம் பற்றி கருத்து வெளியிடுகையிலேயே அந்த அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை சந்தேகத்துக்கு இடமின்றி இந்தியா எப்போதும் ஆதரித்து வருகிறது என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

இந்தியத் தரப்பில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த அறிவிப்பு வடக்கு, கிழக்கு மாகாணசபையின் ஈழப் பிரகடனத்துக்கு இந்தியா ஆதரவளிக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (உ-எ)

## வரதரின் நிலையை விசாரிக்க ஆளுநர் திருமலை சென்றார்!

திருகோணமலை, மார்ச் 3

இலங்கை ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக நேற்றுக் காலை திருகோணமலைக்குச் சென்ற வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனிவிரத்ன அங்கு திரு. வரதராஜப்பெருமாளைச் சந்தித்து ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவை பிரகடனம்'' பற்றிக் கேட்டறிந்தார்.

சுதந்திரப் பிரகடனம் பற்றி திரு. வரதராஜப்பெருமாள் தீவிரமாக இருக்கிறாரா என்பதை கண்டறிவதே ஆளுநரின் விஜயத்தின் நோக்கமாக இருந்தது.

ஆளுநர் நளின் செனவிரத்ன நேற்றே கொழும்பு திரும்பிவிட்டார்.

ஆளுநருடனான நேற்றைய சந்திப்புக் குறித்து திரு. வரதராஜப்பெருமாள் சஞ்சீவிக்குத் தெரிவித்ததாவது:-

''வியாழனன்று நாங்கள் நிறைவேற்றிய தீர்மானம் குறித்துக் கேட்டறியவே ஜனாதிபதி ஆளுநரை அனுப்பியிருந்தார்.

முழு விபரங்களையும் அவரிடம் எடுத்துக்கூறி, தீர்மானத்தின் ஒரு பிரதியையும் அவரிடம் கொடுத்து இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தேன்.

ஒன்றில் எமது 19 கோரிக்கைகளையும் ஸ்ரீலங்கா அரசு

(3ஆம் பக்கம் பார்க்க)

## படையினருடன் ஆலோசனை நடத்த ஜெனரல் ரணதுங்க விரைவு!

கொழும்பு, மார்ச் 3

''சுதந்திர ஈழ ஜனநாயகக் குடியரசு பிரகடனத்தை அடுத்து எழுந்துள்ள நிலைமைகள் பற்றி ஆராய்வதற்காக கொழும்பில் இருந்து உயர் அதிகாரிகள் குழுஒன்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தலைமையில் நேற்றுக் காலை திருகோணமலைக்கு விரைந்தது.

அடுத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவே ஜெனரல் ரணதுங்க திருகோணமலைக்குச் சென்றார். அங்கு அவர் இலங்கை இராணுவ அதிகாரிகளைச்சந்தித்து ஆலோசனை நடத்தினார் என்றும் சொல்லப்பட்டது.

ஜெனரல் ரணதுங்க நேற்று இரவே கொழும்பு திரும்பி ஜனாதிபதிக்கு நிலைமையை விளக்க இருந்தார்.

சுதந்திர ஈழப்பிரகடனம் குறித்து இலங்கை அரசுடன்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## நெல்லியடி, பருத்தித்துறை வங்கிகளில் பணக்கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச். 3

நெல்லியடி, பருத்தித்துறை வங்கிகளிலும் பணக்கொடுப்பனவு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் யாழ். நகர் பகுதி வங்கிகளிலும் காங்கேசன்துறை இலங்கை, மக்கள் வங்கிக் கிளைகளிலும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதால் பணக்கொடுப்பனவு வேலைகள் இடம்பெற்று வந்தன.

தற்சமயம் நெல்லியடி, பருத்தித்துறை வங்கிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## மகாராஷ்டிர மாநிலத்தில் இ.காங்கிரஸ் வெற்றிநடை!

புதுடில்லி, மார்ச் 3

மத்தியப் பிரதேசத்திலும் இமாசலப் பிரதேசத்திலும் பாரதிய ஜனதாக் கட்சி தனித்து அரசு அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை பெற்றுள்ளது.

ராஜஸ்தானிலும் குஜராத்திலும் ஜனதா தளமும் பாரதிய ஜனதாவும் சேர்ந்து அரசு அமைக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

குஜராத் மாநிலத்தில் ஜனதாதளம் தனித்து அரசு அமைக்க உள்ளது.

மகாராஷ்ர மாநிலத்தில் மீண்டும் இந்திரா காங்கிரஸ்

(3ஆம் பக்கம் பார்க்க)

## சுப நேரம்

3. 3. 1990
சனிக்கிழமை
சுப நேரம்:
3 .27 முதல் 4 . 57 வரை
ராகுகாலம்:
09. 27முதல் 10 .57 வரை
கார்த்திகை விரதம்

## பி.பி.ஸி. மீண்டும் சிங்களத்தில்!

லண்டன், மார்ச் 3

பி.பி.ஸி. செய்திச் சேவை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் மீண்டும் சிங்கள சேவையை நடத்த உள்ளது.

''சந்தேசிய'' என்ற இந்த நிகழ்ச்சியில் தென்கிழக்காசிய செய்திகள் இடம்பெறும்.

கடந்த 14 வருடங்களுக்கு மேலாக தடைப்பட்டிருந்த இந்தச் சேவையை என். விஜயராஜா என்பவரே தொகுத்து வழங்க உள்ளார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் இரவு 9-00 மணிக்கு இந்த நிகழ்ச்சி இடம்பெறும். [உ. 9]

## மட்டக்களப்பில் நெடுமாறன்

மட்டக்களப்பு: மார்ச் 3

தமிழ்நாட்டுப் பிரமுகர் பி. நெடுமாறன் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பலபகுதிகளுக்கும்சென்று இந்திய இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட சேதங்கள் பாதிப்புக்களை அவர் கேட்டறிவார். [ஒ]

## வென்றவர் காலமானார்

ஓரிஸ்ஸா மாநிலத்தில் தம் நகர் சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற ஜனதாதள வேட்பாளர் ஹிருதானந்தமல்லிக் அடுத்த நாட்காலை மரணமானார். அவருக்கு வயது 67.

அவர் நான்கு முனைப் போட்டியில் 18 ஆயிரத்துக்கு அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருந்தார். (உ-9)

## ஸ்ரீநகரில் ஊரடங்கு

ஸ்ரீநகர், மார்ச் 3

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டத்தை இந்திய அரசாங்கம் நேற்றுப் பிறப்பித்தது.

இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்க இந்திய இராணுவம் சுட்டதில் இறந்தோர் எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது.

அதனைத் தொடர்ந்தே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. (ஒ-எ)

## முனியப்பர் கோவிலில் கொள்ளை!

யாழ் கோட்டை முனியப்பர்கோவில் மடப்பள்ளி அறை உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாயிரவு இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. (உ-3)

★ பயிலுநர் ஆசிரியர் தெரிவு:

## கல்வி அமைச்சு அங்கீகரித்த பின்பே பட்டியல் வெளியாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 3

பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் பட்டியலை கொழும்பு கல்வி அமைச்சிற்கு அனுப்பி அங்கீகாரம் பெற்ற பின்னரே அதனை வெளியிட வேண்டும் என சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடபகுதியில் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப்பட்டியல் கல்வி அமைச்சின் அங்கீகாரத்திற்காக நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் விடுக்கப்பட்ட ஒரு சுற்று நிருபத்தில் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர் பட்டியல்கள் மாகாண அரசின் அங்கீகாரம் பெற்றே வெளியிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்படி வடபகுதியில் யாழ். மாவட்டம் தவிர்ந்த

(3ஆம் பக்கம் பார்க்க)

## காப்புறுதிக் கட்டணத்தை பணமாக செலுத்தலாம்

யாழ்ப்பாணம் மார்ச் 3

யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அடுத்தவாரம் முதல் பணம் செலுத்தி காப்புறுதிப் பத்திரங்களைப் பெறலாம்.

கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் திரு. ஏ. அப்புத்துரை இத்தகவலைத் தெரிவித்தார்.

வாகனக் காப்புறுதி தீ களவு போன்றவற்றிலிருந்து காப்புறுதி ஆகியவற்றை வழங்கும் வேலைகள் கடந்த 28 ஆம் திகதியே ஆரம்பிக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு படைவிலகல் வியாழன் பூர்த்தி?

யாழ்ப்பாணம், மார்ச் 3

வடபகுதியில் நிலைகொண்டுள்ள இந்தியப் படையினர் எதிர்வரும் வியாழக்கிழமை (8 ஆம் திகதியன்று) பூரணமாக விலக்கிக்கொள்ளப்படுவார்கள் என நம்பகமாகத் தெரியவந்தது.

வடக்கிலிருந்து முற்றாக வெளியேறுவதற்கான நடவடிக்கைகளில் இந்தியப் படையினர் தற்போது ஈடுபட்டிருக்கின்றனர்.

பலாலியைச் சுற்றியிருந்த முகாம்கள் அனைத்தையும் இந்தியப் படையினர் தற்போது படிப்படியாக மூடி வருகின்றனர்.

பலாலி எல்லைப் பகுதியிலும் காங்கேசன்துறை, கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது காவல் அரண்கள் மட்டுமே உள்ளன.

பலாலியில் தற்போது சொற்ப எண்ணிக்கையான இந்தியப் படையினரே நிலைகொண்டிருப்பதாகக் குறிப்பிட்ட அமைதிப்படை அதிகாரி ஒருவர்—

'எந்த ஜவானின் பெயர் எந்த நேரத்தில் அழைக்கப்பட்டாலும் உடனே புறப்படத் தயாரான நிலையில் இருக்கவேண்டும்' என ஜவான்களுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

திருகோணமலையிலிருந்து எதிர்வரும் 15ஆம் திகதிக்கும் 17ஆம் திகதிக்கும் இடையில் படைவிலகல் இடம்பெறும் எனத் தெரியவந்தது. (உ-9)

## மட்டுநகரில் நாளை புலிகளின் மாபெரும் பொதுக்கூட்டம்

### பாலசிங்கமும் உரையாற்றுவார்

மட்டக்களப்பு, மார்ச். 3

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பகிரங்க பொதுக்கூட்டம் நாளை மாலை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறும்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் பங்குபற்றும் முதலாவது பகிரங்க பொதுக்கூட்டம் இதுவாகும்.

இந்தப்பொதுக்கூட்டத்திற்கு முன்னணியின் பிரதித் தலைவர் திரு .எஸ் .கரிகாலன்

(3ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை நகரில் நேற்று 35 லட்சம் ரூபா கொள்ளை!

கொழும்பு, மார்ச் 3

திருகோணமலை நகரில் நேற்று இடம்பெற்ற பெரும் கொள்ளைச் சம்பவம் ஒன்றின்போது 35 லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டது. பொலீஸார் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொரு பொலீஸ் கான்ஸ்டபிள் காயமடைந்தார்.

நேற்று நண்பகல் திருகோணமலை நகரில் உள்துறைமுகப் பகுதியில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

திருகோணமலையில் உள்ள இலங்கை கடற்படை முகாமில் இருந்து பொலீஸ் ஜீப் ஒன்றில் சம்பளப்பணம் எடுத்துவரப்பட்டபோது கடற்படை முகாமுக்கு வெளியே வைத்து அந்த ஜீப் மீது திடீர் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

தாக்குதலையடுத்து பணம் கொள்ளையடிக்கப் பட்டதாகவும் முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

திருமலை நகர வங்கி ஒன்றுக்கு எடுத்துவரப்பட்ட அல்லது வங்கியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பணமே கொள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பு கருத்து வெளியிடப்படவில்லை

சுதந்திர ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவை பிரகடனம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் உடனடியாக கருத்து எதும் வெளியிடவில்லை.

இலங்கை அரசினதும் இந்திய அரசினதும் நிலைப்பாடுகள் என்ன என்பதைத் தெரிந்துகொண்ட பின்னர், பிரகடனம் குறித்து விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிடக்கூடும் என்று தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுதுமலை தெற்கு மானிப்பாயில் எச்சாட்டி வைரவர் கோவிலடியில் கிணற்றுடன் கூடிய வீடும், 8 பரப்பு காணி சகல பிரயோசனத்துடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க பீற்றர், எச்சாட்டி வைரவர் கோவிலடி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (2664)

அல்சேஷன் சுத்த தனிச் சாதி நாய்க்குட்டிகள் 1½ மாதம் உடன் விற்பனைக்கு உண்டு. பழைய நம்பர் 181, கோவில் வீதி, நல்லூர். (11931)

1ஸ்ரீ தொடர் இலக்க Ford prefect கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: S. Mariaratnam (Master) No.9, Cathedral Street, Jaffna. (2659)

'35' நீளம் 20' அகலம் செற். 15 பிணைச்சல் 30 சேற் தகரம் 9'-27, 7'-30, 6'-36, 7½ அடி நீளம், 6½ அடி உயரம் 3 கடைக் கதவு, நிலையுடன் 7' நீளம் 3' அகலம் 2 தட்டு கோழிக்கூடு 150புசல் நெல்போடக் கூடிய பெட்டகம், கோழித்தீன் ரின் ஆகியன விற்பனைக்கு உண்டு. சி. கந்தசாமி, நவாலிவடக்கு நாச்சிமார்கோவிலடி, மானிப்பாய் (11941)

Honda Reconditioned C 09, MD90, CD 90 Yamaha மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. Anton Enterprises 390, Main Street பஸ்ரியன் சந்தி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (11939)

Bangkok giant gauvas பாங்கொக் கொய்யாக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தாய் மரத்தை பழங்களுடன் பார்க்கலாம். பழம் ஒவ்வொன்றும் 1 கிலோ நிறைக்குக் கூடுதலான பழம் இனிமையானது. யோ. பத்நாதன், டச்வீதி, உடுவில். (2694)

### புத்தகம்

பங்குனி அம்புலிமாமா, சித்திரக்கதைகள், (50க்கு மேற்பட்ட ரகம்) கண்ணதாசன் எழுதிய நூல்கள், பொக்கட் கலண்டர்கள் சேதுராமனின் அதிஷ்ட விஞ்ஞானம், வேறு பல எழுத்தாளர்களின் எண்சோதிடங்களும் விற்பனை ஆகின்றது. ராஜன் புத்தகசாலை, 12, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (11927)

### கோழிக்குஞ்சு விநியோகம்

3மாதம் நிறைவு செய்த Golden Comet பிறவுண் பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா& பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (2657)

Hyline வெள்ளை' சிவப்பு, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள், Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா& பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (2656)

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள உயர்குல கனடாவில்தொழில் புரியும் பட்டதாரி கணக்காளர், 38 வயது ஆணுக்கு அதே இனத்தைச் சேர்ந்த பட்டதாரி அல்லது உ.த படித்த அழகிய மணமகள் தேவை. கிரகபாவம்இல்லாதவர்கள் குறிப்பு முழுவிபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும் சி. துரைராசா, நெற்கொழு ஒழுங்கை, வல்வெட்டித்துறை. (2808)

### மணமகள் தேவை

கிறிஸ்தவ வேளாள குலத்தைச் சேர்ந்த அழகும், படிப்பும், நற்குணமும் வாய்ந்த ஐரோப்பிய நாடொன்றின் வங்கியில் தொழில் புரியும் 30 வயதான பட்டதாரி மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர் ஜாதகம் தேவையில்லை. சீதனம் எதிர்பார்க்கப்படும். விளம்பர இல. 105, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (11926(

யாழ் இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த பெற்றோர் தங்கள் 29 வயது செவ்வாய் பாவம் குறைந்த லண்டனில் படித்துக்கொண்டு நல்ல தொழில் பார்க்கும் நற்குணமுடைய அழகிய மகனுக்கு மணப் பெண் தேடுகிறார்கள் பெண் லண்டனில் இருப்பின் முதலிடம் கொடுக்கப்படும். குறிப்பு. முழு விபரங்களுடன்தொடர்பு கொள்ளவும், No: 630 C/o உதயன். (2680)

### உடன் தேவை

அச்சகத்திற்கு தேவைப்படும் கையால் இயக்கும் பேப்பர் வெட்டும் இயந்திரம் (Paper Cutter) உடன்தேவை. தொடர்பு கொள்ளவும்: செல்லத்துரை யோசப், டயானா இன்டஸ் றீஸ், ஆஸ்பத்திரி வீதி, மன்னார். (2689)

### பெண் லிகிதர் தேவை

அனுபவம் மிக்க பெண் கணக்கு லிகிதர் மின்தறி நெசவாலைக்கு உடன்தேவை அனுபவச் சான்றுகளுடன் 7-3-90 காலை 9 மணிக்கு நேரில் சமுகம் கொடுக்கவும். சிறிராஜ் றெக்ஸ், இன்டஸ் றீஸ், வட்டு கிழக்கு, சித்தங்கேணி. (2802)

### போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளலாம், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆரூட மாந்திரீகமுறைப்படி அரச அங்கீகாரம் பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: "சக்தி சரவணா 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்து கல்லூரி மைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (2641)

### காஸ்குக்கர் திருத்த

உங்களுடைய GAS குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப்பாகங்கள் மாற்றவேண்டுமா? எதுவாயினும் மிகத்திறமையான முறையில்குறித்ததவணையில திருத்திக்கொடுக்கப்படும்- நீங்கள் நாடவேண்டிய இடம் Mr'ka Enterprise 309 Stanley Road, Jaffna. (11919)

### German Language Classes

பட்டப்படிப்புக்களைத் தொடர்வதற்கு உதவும் முகமாக மேற்படி வகுப்புக்கள் 05-3-90இல் ஆரம்பமாகின்றன. கால, நேரம் காலை 6மணி- 8. 00 மணி, மாலை 4. 90 மணி -6. 00 மணி இப்பாசையுடன் தொடர்புள்ள மொழி பெயர்ப்புகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு, Director of, studies, German Cultural Association, 33, Kandy Road. Jaffna. (11893)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabrasamy & Co அருகாமையில்) (சி/3451)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சனி, ஞாயிறு காலை 9. 00, மாலை 4. 00 மணிக்கு ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றது. தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். எஸ். ஜெயராஜா, கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம், (2583)

G.C.E.(O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்பஅறிவே இல்லாதவர்களுக்கும்தொடர் வகுப்புக்கள் மூலம் 23 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்பஅறிவிலிருந்து விஷேட சித்திக்கு ஒரு மாதத்திற்குள் சகல போசன்களும் நிறைவேற்றப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (2700)

### சோதிடம் Palmist & Astrologer

பிறநாட்டுப் பிறப்புச் சாதகங்கள் பிரயாணம். குறைந்த சலாரில் சிறந்த திருமணப் பொருத்தங்கள், செவ்வாய் தோஷ நிவர்த்தி விதிகளுக்கமைய பெறவும்; காதல், கல்யாணம், மாப்பிள்ளை விபரங்களுடன் அறியவும். எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்க்கமான திடமான ஆலோசனை பெற அழைக்கின்றோம். செ. இராசேந்திரன், "திருவுளம்" அச்சுக் கூடஒழுங்கை, ஸ்ரேசன் றோட், கொக்குவில். (2801)

### போட்டோஸ்ரட்

தங்கள் சகல பத்திரங்களையும் மிகவும் தெளிவான முறையில் போட்டோஸ்ரற் செய்து கொள்ளவும், ஆங்கிலத் தட்டெழுத்து செய்து கொள்ளவும் வாணி வீடியோ ஹோம், கே. கே. எஸ். வீதி, வல்வெட்டித்துறை. (2588)

## முதலுதவிப் பயிற்சி கருத்தரங்கு

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சார்பில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்குச் சனசமூகநிலையங்களின் பிரதிநிதிகளுக்கான முதலுதவிப் பயிற்சிக் கருத்தரங்கு சிவன் பண்ணை வீதி சம்மேளனப் பணிமனையில் தலைவர் திரு இ. தவகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ 30)

## சனசமூகநிலைய சம்மேளன கூட்டம்

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் நாளை 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொட்டடி சிவன் பண்ணைவீதியில் உள்ள சம்மேளனப் பணி மனையில் தலைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

இக் கூட்டத்தில் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் செயற்திட்டங்கள் பற்றியும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சமாசங்கள் செயல்பாடுகள் பற்றியும் ஆராயப்படஉள்ளதாக நிர்வாகச் செயலாளர் தெரிவித்தார். (இ-30)


## ஏழாலையில் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 3

ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாசாலையில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த14 மாணவர்களுக்கும்பாராட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கின்றது.

வித்தியாசாலை அதிபர் திரு. சி. . நா. நடேசன் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் கோட்டக் கல்வியதிகாரி திரு. க. குலசேகரம் பிரதம விருந்தினராகவும் ஏழாலைக் கொத்தணி அதிபர்திரு. டானியல்சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (இ-3)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



## திரு. K. S. திரவியம்

தோற்றம்: 26.03.1909 மறைவு: 03.02.1990

அன்பின் தந்தாய் நீர் எங்கும் என்றும்
ஓர் உயர்ந்த மனிதன்.
எம் கண்முன்னே உருவத்தில் மாத்திரம்
நீர் உயர்ந்த மனிதனல்ல.
உம் பிள்ளைகள்மேல் கொண்ட பாசததால் அவர்கள்
உள்ளத்திலும் நீர் உயர்ந்த மனிதன்.
உம் பிள்ளைகள் உள்ளத்தில் மாத்திரமல்ல
நீர் கருத்தறிவித்த உம் மாணாக்கர் உள்ளத்திலும்
நீர் உயர்ந்த மனிதன்.
அயலிலும் நீர் அறிந்தவர்கள் மத்தியிலும்
நீர் உயர்ந்த மனிதன்.
திருச்சபை மேல் நீர் கொண்ட பற்றினால்
திருஅவை மக்கள் உள்ளத்திலும் நீர்
உயர்ந்த மனிதன்.

அன்னாரின் அஞ்சலிக் கூட்டங்களிலும், ஆராதனைகளிலும் பங்குபற்றியும் முன்நின்று நடாத்தி ஆறுதலும், தேறுதலும் ஈந்து உதவிகள் பல செய்த பெரியபுலம் பழைய மாணவர், ஆசிரியர்கள், மாணவர்கள், திருச்சபை நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள், குருமார் ஆகிய அனைவருக்கும் எமது நன்றியை கூறிக் கொள்கின்றோம்.

அன்பின்

பிள்ளைகளும், குடும்பத்தினரும். (சி/3423)

# 90 ஆம்நாள் நினைவு அஞ்சலி



அமரர் திரு.

## கிஷ்ணபிள்ளை சுந்தரம்பிள்ளை

(சைவம், பத்திரிகை விற்பனையாளர் பண்டத்தரிப்பு)

தோற்றம்: 14-04-1910 மறைவு: 4-12-1989


"வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன்
வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்"
—திருக்குறள்

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு. (சி/3417)

# 31ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும் நன்றிநவிலலும்



அமரர்

## திரு. அருளையா சின்னையா

அன்பின் திருவுருவாய், அருளின் உறைவிடமாய், வாய்மையின் சிரமாய் விளங்கி எம்மை வழி நடத்திய அன்புத் தந்தையே தாங்கள் ஞானவைரவர் ஆலயத்திற்கு ஆற்றிய சமயத்தொண்டும் முத்துக்குமாரசுவாமி மகா வித்திலயாலயத்துக்கு ஆற்றிய அளப்பெரும் சேவையும் நினைவு கூற வைக்குமன்றோ! தங்கள் ஆத்மா சந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். அன்னாருடைய மரணச்சடங்கில் கலந்தும், மலர் வளையங்கள் அனுப்பியும், வேறு பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்து நடக்கவிருக்கும் அவருடைய அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன். வேண்டுகின்றோம்.

மகன், மகள், மருமகன்,
உறவினர்கள்.

"செல்வவாசா"
கைதடி. (2637)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



லெப்டினன் கேணல்

## ச. சதானந்தன் (டிக்கி, இம்றான்)

முன்னாள் யாழ் பிராந்திய தளபதி

ஆண்டவன் படைப்பு: 20-01-1961 அன்னியன் அழிப்பு: 03-03-1988

காற்றோடு காற்றாய் கலந்து சென்றாயோ!
இன்றோடு இன்றாய் ஈராண்டு தேடுகிறோம்
வென்றெடுப்பேன் வென்றெடுப்பேன்
என்று புறப்பட்டாய்
சுற்றில் கொன்றனர் அன்னியர் – ஆனால்
நீ சாகவில்லை, எம்மவர் இதயங்களில் நிறைகின்றாய்,
அன்று தமிழீழவிடிவிற்காய் தலை நிமிர்ந்து சென்றாய்
சிங்களப் படைகளை சீறியே விரட்டினாய்
இந்தியப் படைகளை நிலை குலையவைத்தாய்
சதி செய்த வேலை உன் விதியை மாற்றியது
விதிதான் மாறியது உன் இலட்சியம் மாறவில்லை
உன் இலட்சியம் நிட்சயம் நிறைவேறும் மீள்வாயா?

அம்மா, சகோதரர்கள், அத்தான்,
மருமக்கள், நண்பர்கள்.

பிரம்படி லேன்,
கொக்குவில். (2710)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்பியூட்டர் கல்வி

BASIC PROGRAMMING COURSE

Commencing on: 3 - 3 - 1990 (Sat & Sun) 9 a.m.

**IDP COMPUTER CENTRE**

342, K.K.S. Road, Jaffna.

(சிவன் கோவிலடி) (சி/3947)



★ சவூதி அரேபியா

## வேலை வாய்ப்பு - SOMC

1. Civil Engineer ...B.Sc. — 1800 SR
2. Mech Engineer ...B.Sc. — 2500 SR
3. Electric/Electronic Engineer ...B.Sc. — 2500 SR
4. Telephone Technician ...Dip — 900 SR
5. General Electrical Technician ...Dip — 900 SR
6. Electronics Technician ...Dip — 900 SR
7. Auto Electrical Technician ...Dip — 800 SR
8. Pump Mechanic ...Dip — 700 SR
9. General Technician ...Dip — 700 SR
10. Plumper ...Dip — 600 SR
11. Painter — 500 SR
12. Electrician ...Dip — 600 SR
13. Female Cleaners ...Dip — 400 SR
14. Sheet Metal Worker — 600 SR
15. Washer — 300 SR
16. Laundry Press Labourers — 700 SR
17. Laundry Labourer — 300 SR
18. Tailor — 600 SR
19. Labourers — 300 SR

✶ நேர்முகப்பரீட்சை 06-03-1990 கொழும்பில் நடைபெறும்.

**A. தவச்செல்வம்**
B. Sc Hons
நெல்லியான் றோட்,
சுழிபுரம்.

[C-3454]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி. இரத்தினம் நல்லதம்பி

பிறப்பு: 11.5.1916 இறப்பு: 1.2.1990

"நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்"

— சங்கீதம் 90 : 12

பிரிவால் துயருறும்

கணவன் S. D. நல்லதம்பி
(இளைப்பாறிய ஆசிரியர்)

பிள்ளைகள் ந. இரத்தினராஜா (கனடா)
ந. நவரத்தினராஜா
ந. தர்மராசா (கனடா)
ந. சவுந்தரராஜா
வி. இரத்தினேஸ்வரி

மருமக்கள் ஞானி, சந்திரிக்கா, ஜெபதேவி, தேவமணி, வி. ஜயகுலசிங்கம்.

சின்னப்பா வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய். (2626)

## கல்வி அமைச்சு - - - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய மாவட்டங்களின் பட்டியல்கள் மாகாணசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரம் பெறப்பட்டு வெளியிடத் தயாரான நிலையில் இருந்தது.

ஆனால் நேற்று திடீரென வானொலி தொடர்பு அறிவித்தல் ஒன்றின் மூலம் பிரஸ்தாப பட்டியல்கள் மத்திய அரசின் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே வெளியிடப்பட வேண்டும் என பணிக்கப்பட்டது.

அத்துடன் பிரஸ்தாப பட்டியல்களில் மாகாணசபை செய்யும் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்றும் பணிக்கப்பட்டுள்ளதாம்.

பயிலுனர் ஆசிரியர் பட்டியல் மத்திய அரசின் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே வெளியிட வேண்டும் என்ற பணிப்பு வடக்கு, கிழக்கு மாகாண சபையின் கீழ் வரும் கல்வி மாவட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் அறிய வருகிறது. (உ-9)

## காப்புறுதி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டன.

தற்போதுஇந்தக்காப்புறுதி பெறுவதற்கு காசோலை, அல்லது மணியோடர் மூலமே கட்டணம் அறவிடப்பட்டது.

ஆனால் அடுத்த வாரம் முதல்பணமாக கட்டணத்தை ஏற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தினமும் 100க்கு மேற்பட்டவர்கள் வாகனங்களுக்குரிய காப்புறுதிகளைப் பெற்றுவருகின்றனர். (உ-3)

## படையினருடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புடைய வட்டாரங்கள் தகவல்கள் வெளியிட்டன.

சுதந்திர ஈழப்பிரகடனம் குறித்து இந்திய நிலைப்பாடு பற்றி அறிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்ற கேள்விக்கு "இந்திய நிலைப்பாட்டை அறிய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை ஆனால் இந்திய - இலங்கை உடன்பாட்டின் கீழ் இலங்கையின் ஒற்றையாட்சி முறையை பாதுகாக்கும் கடமை இந்தியாவுக்குண்டு".

முதலமைச்சர் பதவி நீக்கம் செய்யப் படுவாரா? என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் கொழும்பு திரும்பிய பின்னர் ஜனாதிபதிக்கு ஜெனரல் ரணதுங்காவும் ஜெனரல் நளின் செனவிரத்னாவும் கொடுக்கும் தகவல்களின் தன்மைமையைப் பொறுத்தே அது அமையும்" என்று அந்த வட்டாரம் தெரிவித்தது. (ஒ-எ)

## மகாராஷ்டி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி ஏற்படுகிறது.

பீஹார் மாநிலத்தில் எந்தக் கட்சியும் தனித்து அரசு அமைக்கும் நிலை ஏற்படாது என்றும் சொல்லப்படுகிறது.

அருணாசலப் பிரதேசத்தில் இதுவரை வெளிவந்த தேர்தல் முடிவுகளின்படி இந்திராகாங்கிரஸ் முன்னணியில் நிற்கிறது.

## வரதரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்ற வேண்டும். அல்லது ஈழத்திலிருந்து தமது படைகளை இலங்கை அரசு ஒரு வருடத்திற்குள் வாபஸ் பெறவேண்டும் என்பதை ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறும்படி கேட்டுக்கொண்டேன்.

இலங்கையின் ஜனாதிபதி எப்போதும் ஒரு நாட்டில் அந்நிய நாட்டுப் படைகள் இருப்பதை விரும்புவதில்லை. ஆகவே ஈழத்திலும் அந்நியப் படைகள் இருப்பதை அவர் விரும்பமாட்டார் என நம்புகிறேன். அந்நிய ஸ்ரீலங்கா படையை அவர் வாபஸ் பெறச் செய்வார் என்றும் எதிர்பார்க்கிறேன்.

எமது 19 கோரிக்கைகளையும் நிறைவேற்றமுடியா விட்டால் ஈழத்தில் உள்ள ஸ்ரீலங்கா படையை புரிந்துணர்வுடன் ஒருவருட காலத்துக்குள் வாபஸ்பெற நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் தெரிவிக்குமாறு ஆளுநரைக் கேட்டுக்கொண்டேன்.

புரிந்துணர்வுடன் படைகளை வாபஸ் பெற்றால் ஈழமும் ஸ்ரீலங்காவும் எப்போதும் நட்புநாடாகச் செயற்படலாம். அவர் வாபஸ்பெற மறுத்து சுதந்திரமும் தன்னாதிக்கமும் உள்ள ஈழக் குடியரசு என்றமுறையில் நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டி வந்தால் அதன் விளைவு என்றும் பகை நாடாக நாங்கள் செயற்பட வேண்டிய கட்டாயத்தை உருவாக்கும் என்பதையும் ஆளுநர் மூலம் நான் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தினேன் என்றார். (உ)

## மட்டுநகரில்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை வகிப்பார்.

இந்தக் கூட்டத்தில் முன்னணியின் தலைவர் திரு கோ. மகேந்திரராஜா (மாத்தயா) டாக்டர் அன்ரன் பாலசிங்கம் கவிஞர் .காசி ஆனந்தன் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு ,அம்பாறை பிராந்தியத் தளபதி திரு கருணா முன்னணியின் உகவிச் செயலாளர் செல்வி சுந்தரி தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு,செங்கதிர் மௌலவி முகமட் (மூதூர்) ,கே.மதுரநாயகம் (களுவாஞ்சிக்குடி) ஜனாப் சேகு அலி(செயலாளர்) ஆகியோர் உரையாற்றுவர் (உ- 21)


ஜோதிட ஜோதி

முன்வினை - முயற்சி - திருவருள்

## மாசி இதழ்
### வெளிவந்துவிட்டது!

✶ சனிப் பெயர்ச்சியும் உங்கள் பலனும்
✶ உங்களுக்கு இம்மாதம் எப்படி?
✶ பிரயாணம் செய்ய நல்லநேரம்
★ எண் தத்துவம் 6 — 7
✶ சோதிடம் பயில்வோம்
✶ ரமண மகரிஷியின் சாதகக் குறிப்பு
✶ சுபயோகங்கள்

**இன்னும் பல அம்சங்கள்....**

பிரதி விலை ரூ. 10/-

உதயன் முகவர்களிடம் பிரதிகளை வாங்குங்கள்!

[சி-3416]


## ஈராண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பையா சோதிலிங்கம்

(சோதி - நட்டாங்கண்டல்)
முன்னைநாள் கிராமோதய சபைத் தலைவரும்,
சமாதான நீதவானும் (J. P.)

மலர்வு: 20 - 12 - 1951 பறிப்பு: 24 - 03 - 1988

திதி : 03 - 03 - 90

பறிக்கப்பட்டு ஈராண்டுகள்தான்
இதயத்தில் உன்நினைவுகள் பசுமையானவையே
எம் குடும்பத்தின் சோதியாய் பிரகாசித்து
அணைந்துபோன உன் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கும்

அன்பு,
அப்பா, மனைவி, பிள்ளைகள்,
சகோதரங்கள், மாமா, மாமி.

நட்டாங்கண்டல்,
மாங்குளம்.
(11946)

# கலைஞரின் சமரச முயற்சி தோல்வியடைந்து விட்டது

## வாழப்பாடி இராமமூர்த்தி கூறுகிறார்

இலங்கைத் தமிழர் அமைப்புக்களுடன் முதலமைச்சர் கருணாநிதி நடத்திய சமரசப்பேச்சுக்கள் தோல்வி அடைந்து விட்டன. இது தான் உண்மை.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி முன் கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பேச்சுக்களில் தோல்வி ஏற்பட்டதை மறைக்குமுகமாக பேச்சுக்களில் தடங்கல் ஏற்பட்டிருப்பதாக முதலமைச்சர் அறிக்கை விடுகிறார். ஆனால் உண்மை நிலைவரம் அது அல்ல.

ஏற்பட்டது தடங்கல் அல்ல; தோல்வியே என்று வாழப்பாடி இராமமூர்த்தி சொன்னார். (ஒ- 9)


## விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கருகாமையில் றோட்டில் இருந்து இரண்டாவது காணியான கட்டிடத்துடன் 2¼ பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

S. சண்கந்தையா
செல்வபதி
உடுவில், சுன்னாகம்.

[2711]



சென். ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்

## தேவை

மின்னியல், பைப்திருத்தல் (Electrician cum Plumber) ஆகிய துறைகளில் தகைமை பெற்றவர் உடன்தேவை.

விண்ணப்ப முடிவு திகதி:- 9-3-1990

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

அதிபர்
27-2-1990

(C/3940)


## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பிதழ்



### திருமதி. ஈஸ்வரி வடிவேலு

தோற்றம்: 05 - 07 - 1909 மறைவு: 05 - 02 - 1990

அந்தியேட்டிக் கிரியை 06 - 03 - 1990 செவ்வாய்க் கிழமை காலையும், சபிண்டீகரண கிரியைகள் 07 - 03 - 1990 புதன்கிழமையும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. S. K. வடிவேலு,
திருமதி. சீதாதேவி சச்சிதானந்தன்,
திரு. திருமதி. V. நாகேந்திரன்.

'தங்கம்'
டச் றோட்,
மீசாலை தெற்கு,
மீசாலை.

(2708)


## DIPLOMA IN NURSING தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு உகந்த வகையில்

★ செய்முறைப் பயிற்சி ★ பார்மஸி பயிற்சி ★ ஆங்கில வகுப்புக்கள் அடங்கியது

பிரபல விரிவுரையாளர் குழுவினால் நடாத்தப்படுகிறது.

புதிய பிரிவில் சேர உள்ளவர்கள், விபரங்களுக்கு:-

**North Ceylon Technical Institute,**
14, St. Peters Lane, Hospital Road,
JAFFNA.

(சி/3455)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிக்கனமே சிறந்த செல்வம்"
பாவனைக்கு மில்க்வைற் சோப் வாங்கும் போது பயனுள்ள பரிசுக்கும் உரியவர்களாகிறீர்கள்.
★
மில்க்வைற் மேலுறையிலிருந்து 25 திருக்குறள் அனுப்பி ஒரு அப்பியாசக் கொப்பியைப் பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற், யாழ்ப்பாணம்.

சஞ்சீவி

03-03-1990 சனிக்கிழமை

மில்க்வைற் விற்பனையாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி
★ மில்க்வைற் நீல சோப்,
★ மில்க்வைற் பார் சோப்
கட்டிவரும் தாள்களைச் சேகரித்து 100 தாள்களுக்கு ஒரு பெட்சீற் பெறுங்கள்
தொடரும் பரிசுத்திட்டம் இது.
மில்க்வைற், யாழ்ப்பாணம்.

# தமிழீழத்திலிருந்து ஸ்ரீலங்காப்படை வெளியேறும்படி வரதர் கோரிக்கை!

## இந்தியாவையும் சாடுகிறார்

கொழும்பு, மார்ச். 3

சுதந்திர ஈழ ஜனநாயக குடியரசுக்கு உரிய பிரதேசத்தில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேறும்படி கோரப்போவதாக வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

40ஆண்டு காலமாக உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழருக்கு உரியதைப் பெற்றுக் கொடுக்க இந்தியா தவறிவிட்டது என்றும் அவர் சாடியுள்ளார்.

கொழும்புப் பத்திரிகை 'த ஐலண்ட்' க்கு அளித்த பேட்டியிலே திரு. வரதராஜப் பெருமாள் மேற்கண்ட தகவல்களை கூறியுள்ளார்.

ஜனநாயக ஈழம் குடியரசு பிரதேசத்தின் உள்ள வெளிச் சக்திகள் வெளியேறும்படி கேட்கப்படும்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் 15 ஆயிரம் பேர் வரையில் எமது பிரதேசத்தில் உள்ளனர். இது இன்னொரு நாட்டின் ஒருமைப்பாடு, இறைமைஆகியவற்றை மீறுவதாகும் என்றும் திரு. வரதராஜப்பெருமாள் 'ஐலண்ட்' பேட்டியில் சொன்னார்.

இந்திய அமைதிப்படை இருப்பது பற்றி கேட்கப்பட்டபோது, திரு. வரதராஜப் பெருமாள் ''இந்திய இராணுவம் எமக்கு உதவலாம்'' என்று சொன்னார்.

திரு. வரதராஜப்பெருமாள் மேலும் சொன்னதாவது;

எமது பிரகடனத்துக்கு ஆதரவு தேடும் வகையில் வெளிநாடுகளில் ராஜதந்திர பிரசார இயக்கம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

40 ஆண்டுகாலமாக உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழருக்கு உரியதைப் பெற்றுக் கொடுக்க இந்தியாவும் தவறிவிட்டது. அதனால் தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

நான் ராஜினாமாச் செய்யவில்லை. வடக்கு, கிழக்கு மாகாணசபை கலைக்கப்படவும் இல்லை. அப்படி ஒன்றும் இடம்பெறவில்லை.

என்னை அதிகாரத்தில் இருந்து நீக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தால் பதில் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் முயற்சி செய்து பார்க்கட்டும்.

தமிழர் போராட்டத்தில் விடுதலைப்புலிகளும் சேர்ந்து கொள்ள வேண்டும். அவர்களும் ஈழம் கோரிக்கைக்கு ஆதரவானவர்களே. இலங்கை அரசின் தவறான வழிநடத்தலுக்கு அவர்கள் ஆளாகக் கூடாது – என்றார்.

இதேவேளை திரு. வரதராஜப்பெருமாள் சஞ்சீவிக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:–

ஈழப் பிரகடனத்துக்கு முன்னோடியாக கடந்த வியாழன்று திருகோணமலையில் செய்யப்பட்ட பிரகடனத்தை விடுதலைப் புலிகள் உட்பட எல்லாத் தமிழ் மக்களும் ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம்.

அதிகாரத்தை பகிர்ந்தளிக்குமாறு கேட்டு இலங்கை ஜனாதிபதியுடன் நான் பதினைந்து தடவைகளுக்கு மேல் சந்தித்துப் பேசிவிட்டேன்.

விடுதலைப் புலிகள் இப்போதுதான் பேசத்தொடங்கியிருக்கிறார்கள். எங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் தான் அவர்களுக்கும் கிடைக்கும். முடிவு ஒன்றுதான் ஆனால் காலம்தான் தாமதமாகும்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் நாடகத்திற்கு ஈழத் தமிழர்கள் இரையாவதுதான் கவலையைத் தருகிறது.

ஒரு பக்கம் பேச்சுவார்த்தை என்று கூறிக்கொண்டு மறுபக்கம் அவர்கள் சிங்களக் குடியேற்றத்தை நடத்துகிறார்கள்.

சுதந்திர ஈழத்தை நாங்கள் தான் அமைக்க வேண்டும்; அது எமது வேலை. வேண்டுமானால் இந்தியா எமது பக்க நியாயங்களைப் புரிந்து கொண்டு எமக்கு உதவலாம். ஆனால் ஈழத்தை அவர்கள் பெற்றுத்தர முடியாது.

மார்ச் 15, 16, 17 அளவில் இந்தியப்படை திருமலையிலிருந்து வெளியேறிவிடும்.

அதற்குப்பின்னர் திருகோணமலையில் சிலவேளை நாங்கள் இல்லாமல் போகலாம். ஆனால் ஈழத்தில் ஏதோ ஒரு காட்டுப்பகுதியிலேனும் நாம் இருந்துகொண்டு போராடுவோம். – என்றார்.

### யுனிசெப் பிரதிநிதிகள் இங்கு வருவர்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ் மாநகரசபை எல்லைக்குள் மேற்கொள்ளப்படும் யுனிசெப் வேலைத் திட்டங்களைப் பார்வையிட யுனிசெப் அமைப்புப் பிரதிநிதிகள் எதிர்வரும் ஆறாம் திகதி இங்கு வரவிருக்கின்றனர்.

நகரப்பகுதியில் மேற்கொள்ளப்படும் நீர்விநியோகத் திட்டம், சுகாதாரத்திட்டம் உட்படப் பல திட்டங்களின் செயற்பாடுகளை அவர்கள் பார்வையிடுவார்கள்.

யாழ் மாநகரசபையில் நடைபெறும் கலந்துரையாடல் ஒன்றிலும் அவர்கள் கலந்து கொள்வார்கள். [உ-3]

### வல்லிபுர குறிச்சி மக்களுக்கு

## பருத்தித்துறை வங்கியில் நாளை ஆயிரம் ரூபா நிவாரணம்

### நெல்லியடியில் ரூ.4000கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச் 3

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையில் நாளை ஞாயிற்றுக்கிழமை மீளக் குடியமர்தல் நிவாரணம் ரூபா ஆயிரம் வழங்கப்படவிருக்கிறது.

வல்லிபுர குறிச்சி கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 623 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

**நெல்லியடி வங்கியில்**

இலங்கை வங்கி நெல்லியடி கிளையிலும் நாளை நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

சுயதொழில் முயற்சிக்கான ரூபா 4 ஆயிரத்தை இதுவரை பெறாதவர்களுக்கு நாளை இந்த வங்கியில் கொடுப்பனவு வழங்கப்படும்.

நிவாரணம் பெறவுள்ளோரின் எண்ணிக்கையும் கிராம சேவையாளர் பிரிவுகளும் வருமாறு:–

கரவெட்டி மேற்கு -17, கரவெட்டி கிழக்கு -02, கரவெட்டி வடக்கு -05, கரணவாய் தெற்கு -04, கரணவாய் மேற்கு -07, கரணவாய் மத்தி -01, கப்புது -02.

உடுப்பிட்டி-15, உடுப்பிட்டி வடக்கு -19, வல்வெட்டி -23, இமயணன் -29, துன்னாலை கிழக்கு -03, துன்னாலை மேற்கு -20, அல்வாய் கிழக்கு -03. [ஓ]

## சுப்பிரமணியம் பூங்காவை அழகுபடுத்த முயற்சி!

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ் சுப்பிரமணியம் பூங்காவை மீண்டும் அழகுற அமைக்கும் முயற்சியில் யாழ் மாநகரசபை ஈடுபட்டிருக்கிறது.

இப் பூங்கா அமைந்துள்ள பகுதியில் கடந்த காலத்தில் நிலவிய சூழ்நிலை காரணமாக இப்பூங்கா கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டது. அதனால் இது சுடுகாடு போல காட்சியளிக்கிறது.

தற்போது பூங்காப் பகுதியில் உள்ள குப்பை, கூழங்களை அகற்றும் வேலைகளை மாநகரசபை ஊழியர்கள்மேற் கொண்டுள்ளனர்.

பூங்காவை அழகுறஅமைக்க விசேட திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாக அறியவந்தது. (உ-3)

## வீடமைப்புத் திட்டங்களை அதிகாரிகள் பார்வையிடுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்களைப் பார்வையிட யு. எஸ். உதவி அமைப்பு அதிகாரிகள் நாளை மறுதினம் இங்கு வரவிருக்கின்றனர்.

குடாநாட்டில் வன்செயல்களின்போது சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க 'யு. எஸ். எயிட்' அமைப்பு உதவிகள் வழங்கி வருவது தெரிந்ததே.

'யு.எஸ்.எயிட்' அமைப்புப் பிரதிநிதிகள் யாழ். அரசாங்க அதிபருடனும் பேச்சுக்கள் நடத்துவார்கள். (உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 3- 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பத்திரிகையாளர் சொய்சா ஜே. வி. பி. தீவிரவாதியாம்!

கொழும்பு, மார்ச் 3

இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு, பின்னர் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்சா ஒரு ஜே. வி. பி. தீவிரவாதி என்பது பொலீஸ் விசாரணையில் தெரியவந்திருப்பதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

ஜே. வி. பியின் இராணுவப் பிரிவுடன்ரிச்சர்ட்டி.சொய்சா தொடர்பு கொண்டிருந்தார் என்றும் ஜே. வி. பியின் சார்பில் மக்களைப் பயமுறுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதில் இவரும் ஈடுபட்டிருந்தார் என்றும் பொலீஸ் அதிகாரி ஒருவர் லங்காபுவத்திடம் தெரிவித்தார்.

இன்டர்பிரெஸ் சேர்விஸ் நிறுவனத்தைப் பயன்படுத்தி மனிதஉரிமைமீறல் பற்றித் தவறான தகவல்களை வெளிநாடுகளுக்கு இவர் அனுப்பிவந்திருந்தார் என்றும் அந்த பொலீஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-எ)

## பாக். வெளியுறவு அமைச்சர் கொழும்பு வருகிறார்

கொழும்பு, மார்ச் 3

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகூப் கான் சில தினங்களில் கொழும்புக்கு விஜயம் செய்வார்.

பங்களாதேஷ், பூட்டான் ஆசிய நாடுகளுக்குச் சென்று விட்டே அவர் கொழும்பு வருவார்.

சார்க் உச்சி மாநாட்டை எங்கே நடத்துவது? என்பது பற்றி ஏனைய நாடுகள் தெரிவித்த கருத்துக்களை பாகிஸ்தான் அமைச்சர் இலங்கைக்கு தனது கொழும்பு விஜயத்தின்போது தெரிவிப்பார் என்று தெரியவருகிறது. [ஓ-எ]

## புதுவையில் அரசு அமைக்க தி. மு. கவுக்கு ஆளுநர் அழைப்பு

புதுவை, மார்ச் 3

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் அரசு அமைக்கும்படி தி. மு. க. சட்டசபைக் கட்சித் தலைவர் திரு. டி. இராமச்சந்திரனை பிரதேசத் துணை நிலை ஆளுநர் திருமதி சந்திராவதி அழைத்திருக்கிறார்.

அமைச்சரவையில் இடம் பெறுபவர்கள் பற்றி தீர்மானிக்க திரு. இராமச்சந்திரன் முதலமைச்சர் கருணாநிதியுடன் ஆலோசனை நடத்த இன்று (சனி) சென்னை செல்கிறார் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## நிலாவரையிலிருந்து மீண்டும் குடி தண்ணீர் வழங்க ஏற்பாடு

### விரைவில் வேலைகள் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 3

நிலாவரை கிணற்றில் இருந்து யாழ். மாவட்டத்துக்குக் குடி தண்ணீர் வழங்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படவுள்ளது.

1980ஆம் ஆண்டு இத்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வந்தன.

வடபகுதியில் தொடர்ந்து இடம்பெற்று வந்த அசம்பாவிதங்களை அடுத்து இந்த வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டன என்பது தெரிந்ததே.

இத்திட்டத்துக்கு முதல் கட்டமாக ஒதுக்கப்பட்ட பணம் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் மிகுதிப் பணமும் கிடைத்தவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என யாழ். மாநகர சபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-10)

## தமிழக மக்கள் தம் தவறை உணர்ந்து விட்டார்களாம்!

### பாண்டிச்சேரி வெற்றி குறித்து கலைஞர்

தவறை மக்கள் உணர்ந்து விட்டார்கள். அதன் எதிரொலி தி. மு. கவுக்கு பாண்டிச்சேரியில் கிடைத்தவெற்றி.

தமிழக முதலமைச்சரும் தி. மு. க. தலைவருமான திரு. மு. கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த மாற்றம் பாண்டிச்சேரியில் மட்டுமல்ல, பழனியிலும் தெரிகிறது.

பழனியில் காங்கிரஸுக்கு 1984இல் கிடைத்த பெரும்பான்மை இப்போது இல்லை. 2 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் பழனியைப் பிடித்த காங்கிரஸ் இம்முறை 80 ஆயிரம் வாக்குகளையே பெரும்பான்மையாகப் பெற்றுள்ளது.

தி. மு. க. கூட்டணிக்கு பாண்டிச்சேரி மக்கள் வெற்றி அளித்துள்ளதால் 1989 நவம்பர் தேர்தலில் பாண்டிச்சேரி நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற இந்திரா காங்கிரஸ் எம். பியை இராஜினாமாச் செய்யச்சொல்லிக்கேட்க மாட்டேன்.

சட்டசபைத் தேர்தல்வேறு; நாடாளுமன்றத் தேர்தல் வேறு — என்று சொன்னார் கருணாநிதி. (உ-9)

### விடுதலை

இந்தியப்படையினரால் திருமலை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு, அம்பாறை வாசிகள் சகலரும் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

**திருமலை. . . .**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளையிடப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

எனினும் இத்தகவல் குறித்து ஊர்ஜிதமான மேலதிகசெய்தி ஒன்றையும் செய்தி அச்சுக்குப் போகும் வரை பெற்றுக் கொள்ளமுடியவில்லை. (உ)

## அமைதிக்கான திட்டங்களை திரட்டுவதற்கு அரசு முயற்சி

கொழும், மார்ச் 3

வடக்கு – கிழக்கு பகுதியில் அமைதி ஏற்படுத்துவதற்கான எதிர்கால திட்டங்கள் பற்றி அபிப்பிராயங்களை அறியும் பொருட்டு நாட்டிலுள்ள பல்வேறு அமைப்புக்கள் மற்றும் குழுக்களிடம் இருந்தும் கருத்துக்கள் அறியப்பட உள்ளன.

சமாதானக் குழுத் தலைவரும் அமைச்சருமான ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீது இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

முதல் கட்டமாக அமைச்சர் ஹமீத் நேற்று முன்தினம் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜனாப். ஏ. அஸீஸ், திரு. வி. பி. கணேசன் ஆகியோரடங்கிய குழு ஒன்றுடன் பேச்சு நடத்தினார்.

பேச்சுக்களின் போது அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம் குறித்தும் மற்றும் பல்வேறு பிரச்சினைகள்குறித்தும் ஆராயப்பட்டன. (ஓ-9)

### நகரில் நொறாட் பிரதிநிதி

யாழ்ப்பாணம், மார்ச் 3

''நொறாட்'' அமைப்பைச் சேர்ந்த திருமதி கிருஸ்டி கேட் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நோர்வையைச் சேர்ந்த இவர் நேற்றுக் காலை யாழ் தொடர்பகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார்.

யாழ்–உளவள நிலைய ஆதரவில் இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது. இந்நிலையத்தில் பயிற்சியை முடித்தவர்களுக்கான சான்றிதழ்களையும் அவர் வழங்கினார். (உ-3)

### இன்று 75பேர் விடுவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்டவர்களிலும், சரணடைந்தவர்களிலும் ஒருபகுதியினர்–சுமார் 75 பேர்வரை–இன்று விடுக்கப்பட உள்ளனர்.

இன்று பிற்பகல் 4 மணியளவில் யாழ். நாச்சிமார் கோவிலடியில் வைத்து இவர்கள் விடுவிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### அஞ்சலிக் கூட்டம்

கடந்த 88 ஆம் ஆண்டில் வீர மரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ். மாவட்டத் தளபதி லெப்டினன்ட் கேணல் இம்ரானிற்கு(சங்கரப்பிள்ளை சதானந்தன்) அஞ்சலி செலுத்துமுகமாக அஞ்சலிக் கூட்டமொன்று இன்றிரவு 7 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### நாகம்மா கிருஷ்ணபிள்ளை

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நாகம்மா கிருஷ்ணபிள்ளை 1 – 3 - 90 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வெண்டரசர் தில்லைப்பிள்ளையின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (மலேசியா), மங்கையற்கரசி, நாகபூசணி, சரஸ்வதி, மீனா ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற அருணாசலம், கனகநாயகம், பாலக்கிருஷ்ணன், குமாரதேவர் அவர்களின் அன்பு மாமியும், மாலினி வரதராசா, யமுனா புண்ணியசீலன், ஜயந்தா சிவநாதன், கஜேந்திரா சிவலோகநாயகி, குகேந்திரா, மகேந்திரா, விசாகன் வாலி, கலாயினி மகேந்திரன், ஜீவகன், ஆகியோரின் அன்புப் பேத்தியும், கௌசனி, அபிரா, கேதார்ணி, அனித்திரி, யூடி, ஜெனி, அஞ்சு, கஜென் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 3 – 03 – 90 சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் மயானத்துக்கு பிற்பகல் 3 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

(11940)

### திருமதி இராசையா அன்னபூரணம்

யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க வீதியைச் சேர்ந்த திருமதி இராசையா அன்னபூரணம் அவர்கள் 02-03-1990 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. தம்பு இராசையாவின் அன்பு மனைவியும், இரஞ்சிதாதேவி, இராஜினிதேவி, இரவீந்திரன், தயானி(அவுஸ்திரேலியா), சாந்தினி (பிரான்ஸ), சோதினி (லண்டன்), கேதீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், க. சந்திரமோகன் (நல்லூர் பிரதேச சபை), ந. இராஜகோபால் (நீர்ப்பாசனத் திணைக்களம், புத்தளம்), த. லோகநாதன் (அவுஸ்திரேலியா), பெ. சிவசுப்பிரமணியம் (பிரான்ஸ்), ந. ஜனராஜராஜன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், சிவசம்பு, காலஞ்சென்ற முத்துக்குமாரு (முன்னாள் அதிபர்), தெய்வேந்திரம் (முன்னாள் இ. போ. ச. பரிசோதகர்), சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற இராஜரட்ணம், பரமேஸ்வரி, சிவபாதம் (கமநல சேவை நிலையம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03-03-1990 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
மா. தெய்வேந்திரம்

ஞானபாஸ்கரோதய சங்க வீதி,
கல்வியங்காடு.

[11894]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SKYLINES**

For Quality Photostat Copying,
Electronic Typewriting
and
Roneo works
281 B, CLOCK TOWER ROAD,
JAFFNA.

சஞ்சீவி
# சஞ்சிகை

03 - 03 - 1990 சனிக்கிழமை

தரமான
★ போட்டோ ஸ்ரற்
★ றோனியோ
★ எலக்ரோனிக் ரைப்பிங்
வேலைகளுக்கு
**ஸ்கைலைன்ஸ்**
281 பி, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,

# மற்றவரின் வெற்றியை மதிப்பதே தோல்வியைத் தவிர்க்க ஓரே வழி

**நாம்** வாழ்க்கையில் சந்திக்கும் அனைவருமே வெற்றி பெற்றவர்களாக இருப்பதில்லை.

ஒரு சிலர் தான் வெற்றி பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

இப்படிச் சிலர் வெற்றியடைந்திருக்க, வேறு சிலர் தோல்விகளைத் தழுவுவது ஏன் என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அப்படிச் சிந்திப்பது நமக்கு நல்லது.

வெற்றி பெற்றவர்கள் எப்படி வெற்றி பெற்றார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது மிக நல்லது.

அதைவிட, தோற்றுப் போனவர்கள் எதனால் தோற்றார்கள் என்பதை அறிந்து, அதைத் தவிர்ப்பது மிக மிக நல்லது.

தோற்றுப் போனவர்களை உன்னிப்பாகக் கவனித்தால் ஒன்று நிச்சயம் புலப்படும்.

அவர்களிடம் ஒரு தேவையற்ற குணம் இருப்பதை நாம் காண முடியும்.

அதுதான் பொறாமை!

மற்றவர்களுடைய வெற்றியைப் பார்த்துப் பொறாமைப்படும் குணம் பலரிடம் இருக்கிறது.

இது வெற்றியைத் தடுக்கும் தடைக்கல் என்பதைப் பலர் புரிந்து கொள்வதே இல்லை.

மற்றவர்கள் பெறும் வெற்றி உண்மையான உழைப்பின் அடிப்படையில் தான் கிடைத்திருக்கும் என்பதைப் பலர் நம்புவதில்லை.

குறுக்கு வழிகளில் தான் வெற்றி பெற்றிருப்பார் என்று பலர் தவறாக நினைத்து விடுகிறார்கள்.

என்ன குறுக்கு வழி என்பதைக் கண்டுபிடிக்க முனைவதிலும், அப்படி எந்த வழியும் தெரியாவிட்டால் கற்பனையாகச் சில குறுக்கு வழிகள் இருந்ததாகக் கூறுவதிலுமே பலர் மகிழ்ச்சியடைகிறார்கள்.

மற்றவர்களைப் பற்றிக் குறை சொல்வதற்குப் பலர் கூச்சப்படுவதே இல்லை.

மிக இயல்பாக, மிக விரைவாக மற்றவர்களைப் பற்றிக் குறை சொல்லி விடுகிறோம். இது சரியில்லை.

ஒரு மனிதரின் வெற்றியையோ, தோல்வியையோ எடை போட முயலும் போது மேம்போக்காக அதைச் செய்து விடக் கூடாது.

அந்த வெற்றியால் கிடைக்கும் பயனை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதுதான் முறை.

## ஒரு மனிதரின் வெற்றி

உங்களுக்கு இதனால் ஏதேனும் பாதகம் ஏற்பட்டதா?

சமூகத்துக்கு இதனால் ஏதேனும் துன்பம் நேர்ந்ததா?

இந்த இரண்டு வகைகளிலும் பட்டியல் போட்டுப் பார்த்துத்தான் மற்றவர்களுடைய வெற்றியைப் பற்றி நாம் கருத்துச் சொல்ல வேண்டும்.

நம்மை எந்த வகையிலும் பாதிக்காதபடி ஒருவர் வெற்றி பெற்றால் அதைப் பற்றி நாம் ஏன் குறை கூறவேண்டும் என்பதை யோசிக்கவேண்டும்.

நமக்கு இழப்பு இல்லை சரி.

சமூகத்துக்கு அதனால் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டதா? இன்னாரின் வெற்றியால் இன்னார் இந்த அளவு துன்பம் அடைந்தார் என்று நம்மால் பட்டியல் போட முடிந்தால், உண்மை விவரங்களைச் சுட்டிக் காட்டி அத்துன்பம் கண்டிப்பாக நேர்ந்தது என்பதை நிரூபிக்க முடிந்தால் அப்போது அந்த வெற்றியைப் பற்றி நாம் குறை சொல்லலாம்.

அதை விட்டு விட்டு அவர்கள் பெற்ற வெற்றியைப் பார்த்துப் பொறாமைப்படுகிறோம்.

பொறாமை என்பது நம்முடைய வெற்றியைப் பாதிக்கும் குணம் என்பதைப் பலர் மறந்து விடுகிறார்கள்.

''அழுக்கற்று அகன்றாரும் இல்லை; அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்'' என்று சொல்கிறார் வள்ளுவர்.

பொறாமைப்படுபவர் பெரிய மனிதனாக உயர முடியாது என்பது வள்ளுவர் வாக்கு.

பொறாமையை விட்டுவிட்டவன் கண்டிப்பாகப் பெரிய மனிதனாக வருவான். அதைத் தடுக்க முடியாது என்கிறார் அவர்.

இப்படித் தெள்ளத் தெளிவாக ஆணி அடித்தது போல் அவர் சொல்வதை நாம் மனதில் பதித்துக் கொள்ள மாட்டோம் என்கிறோம்.

இரவும் பகலும் திருவள்ளுவரைப் பற்றிப் பேசுகிறோம். வள்ளுவமும், தமிழும் தான் எம் மூச்சு என்கிறோம்.

ஆனால் அவர் சொன்ன இப்படிப்பட்ட சின்னச் சின்ன கருத்துக்களைக் கூட நாம் நடைமுறைக்குக் கொண்டுவரத் தவறிவிடுகிறோம்.

## சாதனைகள்

மற்றவர்களைக் குறை சொல்வதை விட்டுவிட்டு நாம் என்ன சாதித்துவிட்டோம் என்பதைச் சிறிது எண்ணிப் பார்த்தாலே போதும். இந்தத் தீய குணம் நம்மை விட்டுப் போய்விடும்.

நம்முடைய சாதனைகளை வரிசையாக எண்ணிப் பார்ப்போம்.

நம்மால் சமூகத்துக்கு, நாட்டுக்கு, உலகுக்கு என்ன நன்மை ஏற்பட்டது என்று யோசிப்போம்.

இப்படிப்பட்ட 'பொஸிடிவ்' சிந்தனை நம் மனதில் தோன்றிய உடனேயே பொறாமை என்ற 'நெகடிவ்' சிந்தனை நம்மைவிட்டுப் போய்விடும்.

நாம் எதையும் சாதிக்கவில்லையே, எதையாவது சாதிக்க வேண்டுமே என்ற வேகம் எழுந்த உடனேயே பிறருடைய சாதனைகள் நமக்கு வழிகாட்டிகளாக மாறத் துவங்கிவிடும். நம்மை ஊக்குவித்து வழி நடத்திச் செல்ல ஆரம்பிக்கும்.

ஒரு அமெரிக்கனோ, ஒரு ஜப்பானியனோ வெற்றி பெற்றவனைப் பார்த்தால் பொறாமைப்படுவதில்லை.

என்ன குறுக்கு வழியில் வென்றான் என்று யோசித்துச் சேற்றைப் பூச முற்படுவதில்லை.

அந்த வெற்றியின் அடிப்படையில் என்ன உழைப்பு இருந்தது, எவ்வளவு சிந்தனை இருந்தது என்று பார்க்கிறான்.

அதுபோல் நாமும் உழைத்து, நாமும் சிந்தித்து அதுபோல் வெற்றிபெறுவது எப்படி என்று ஆலோசிக்கிறான். காரியத்தில் கவனம் செலுத்தித் தானும் உயர முயற்சிக்கிறான்.

வெற்றி சுலபமாகக் கிடைக்கிறது என்று யாரும் எண்ணிவிடக் கூடாது.

அதன் பின்புலத்தில் நிறைய இன்னல்கள் உண்டு. கடினமான உழைப்பு உண்டு. கணக்கிட முடியாத தியாகங்கள் உண்டு. அப்படித் துன்பங்களையும், இன்னல்களையும், தியாகங்களையும் தாங்கிக் கொண்டால்தான் வெற்றி கிடைக்கும்.

## எங்கிருந்து வந்தோம்?

நாம் எங்கிருந்து வந்தோம்?

தெரியாது.

நாம் இந்த வாழ்வின் முடிவில் எங்கே போவோம்?

அதுவும் தெரியாது.

ஆனால் இன்றைய இந்த வாழ்க்கை மட்டும் என்ன என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும்.

இப்படிக் கிடைத்துள்ள இந்த வாழ்க்கையைப் பொறாமை போன்ற குணங்களால் வீணடித்துவிடாமல், மற்றவர்களுக்கு உதவும் வகையில் சாதனை புரியப் பயன்படுத்துவதே சிறந்தது.

வெற்றியை நோக்கி நடைபோடுபவர்கள், மற்றவர்கள் குறை சொல்வதாலோ, குற்றம் கண்டு பிடிப்பதாலோ தயங்கப் போவதில்லை. கலங்கி நின்றுவிடப் போவதில்லை. தங்கள் முயற்சிகளைக் கைவிட்டுவிடப் போவதில்லை.

பெரியவர்கள் இதைப்பற்றித்தான் சொன்னார்கள்.

குலைக்கிற நாய்கள் குலைத்துக் கொண்டிருக்கட்டும். அதற்காக ஊர்வலத்தை நிறுத்திவிட முடியாது என்று. Let the dogs bark. The Caravan moves on.

நம்முடைய சிந்தனைகளை ஆக்கபூர்வமாகச் செலவிட்டால் நல்லது. மற்றவர்களுடைய குறை கூறல்களைக் கேட்டுத் துவண்டு விடாமல் மேலே மேலே முயற்சிகளில் ஈடுபடுவதே வெற்றி பெறவழி.

வெற்றி பெற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதோ, குறை சொல்லித் தூற்றுவதோ நன்மை பயக்காது.

அதைத் தவிர்ப்பதுதான் நம் வெற்றிப் பயணத்தைப் பயனுள்ள வகையில் தொடர ஓரே வழி. அப்போதுதான் நமக்கு வெற்றி கிடைக்கும். ★

**- டாக்டர் பி. ஜி. பெரியசாமி -**

கருத்துக் கலசம் — மயூரா

## அறிவை வளப்படுத்தி வழிப்படுத்துங்கள்!

உலகில் கோடானு கோடி உயிரினங்கள். இவற்றுள் உயர்ந்த உயிரினம் எது? மனிதன்.

இந்த உயிரினங்கள் எல்லாவற்றினதும் கடந்த காலத்தைச் சற்றுத் திரும்பிப் பாருங்கள். இவற்றின் விருத்திப் பாதையில் எத்தனை மாற்றங்கள்?

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யானையும், பூனையும், எலியும், புலியும், குயிலும், மயிலும் இன்னும் அப்படியேதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் வாழ்க்கைப் போக்கில் மாற்றம் அதிகமில்லை.

ஆனால் மனிதனின் வரலாறு அப்படியல்ல.

காட்டிலும், குகையிலும் வாழ்ந்தவன்; கல்லிலும் முள்ளிலும் திரிந்தவன். இன்று கட்டிலிலும் ஜாகையிலும் காலத்தைக் கழிக்கிறான். காரிலும் விமானத்திலும் பறக்கிறான்.

சரித்திரத்தை மாற்றி இன்று உயர்ந்த உயிரினமாக நவீன உலகில் நாகரீக வசதிகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் அவன்.

இந்தக் குறுகிய காலத்தில் அவனை இத்துணை உயர்வுக்கு இட்டுச்சென்று இந்தப் பூவுலகில் மேலாதிக்கத்தை அவனுக்கு அள்ளித் தந்தது யார்?

அவனின் உயர்வுக்கு உறுதுணையாய் அமைந்தது அவனது அறிவுதான். ஆறாவது அறிவு என்ற பகுத்தறிவுதான் அவனை வளப்படுத்திய சக்தி.

குறுகிய காலத்தில் இந்த உலகில் எல்லையில்லா ஆயுத விருத்திக்கும். அணுக்குண்டுப் பயங்கரத்திற்கும், கொம்பியூட்டர் கருவிகளின் சாதனைகளுக்கும் கருவூலமாய் அமைந்தது இந்த அறிவே.

அறிவு மனிதனின் சிந்தனையைத் தட்டி எழுப்பியது. சிந்தனையில் எண்ணங்கள் மலர்ந்தன. எண்ணங்கள் முயற்சிக்கு வித்திட்டன. முயற்சி செயல்களுக்கு வழிகாட்டின. செயல்கள் சாதனைகளை உருவாக்கின. சாதனைகள் உயர்வுக்கும், தாழ்வுக்கும் வழிவகுத்தன.

நல்ல நோக்கை குறிவைத்தும் செய்யப்பட்ட சாதனைகள் நல் வளர்ச்சிக்கு வித்திட்டன. கெட்ட நோக்கத்துடன் குறி வைக்கப்பட்ட சாதனைகள் வீழ்ச்சிக்கு வித்திட்டன.

அறிவை நன்னோக்கிற்கு வழிப்படுத்தும்போது உலகம் சுவர்க்கமாகுகின்றது; நாடு நன்னாடு ஆகுகின்றது; சமுதாயம் சிறப்புறுகிறது; இனம் உயர்வுறுகிறது.

அறிவை நல்வழியில் வழிப்படுத்தி விருத்தி செய்பவன் மேதையாகுகின்றான்.

அறிவின் உயர்வுதான் என்னே!

ஆகவே உங்கள் அறிவை அறிந்து அதனை வளப்படுத்தி நல்வழிப்படுத்துங்கள்!

★

# விவேகானந்தரின் போதனைகளால் ஆட்கொள்ளப்பட்ட ரஷ்ய இளவரசர்

**ர**ஷ்யாவில் நீண்ட நெடுங்காலமாக இந்திய மதங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளது.

1788 ஆம் ஆண்டு ரஷ்ய மொழியில் 'பகவத் கீதை' மொழிபெயர்க்கப்பட்டது. அது ரஷ்யக் கலாசாரத்தின் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது.

இந்து மதமானது புரட்சிக்கு முன்னர் ரஷ்யாவில் ஒரு முக்கிய ஆராய்ச்சிப் பொருளாக இருக்கவில்லை.

அப்போதெல்லாம் ரஷ்ய அறிஞர்கள் இந்தியாவின் பண்டைய வரலாறு, இலக்கியம், மொழிகள் ஆகியவற்றை ஆராய்வதில்தான் நாட்டம் கொண்டிருந்தனர்.

'கிழக்கத்திய பிராமணர்களையும் அவர்களது சடங்குகளையும் நாட்டு புறப் பழக்க வழக்கங்களையும் பற்றிய பாரபட்சமற்ற ஆய்வு' என்ற நூலை கெராசிம் லெபதேவ், 1825 ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

அவர் (1785–1797) இந்தியாவில் 12 ஆண்டுகள் தங்கியிருந்து சேகரித்த தகவல்களின் அடிப்படையில் எழுதிய நூல் அது.

இந்துமதத்தைப் பற்றி ரஷ்யர்கள் அறிந்து கொள்ள கடந்த நூற்றாண்டின் இறுதி வரை ரஷ்யாவில் கிடைத்து வந்த ஒரே நூல் இதுதான்.

19 ஆம் நூற்றாண்டு ரஷ்யர்கள் இந்துமதத்தைப் பற்றிய சில விஷயங்களைப் பத்திரிகைகளிலிருந்துதான் தெரிந்து கொண்டனர்.

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்த ஐரோப்பியர்களின் பயணக் குறிப்புகளின் மொழிபெயர்ப்பு அல்லது இந்திய மதங்களைப் பற்றிய ஐரோப்பிய ஆய்வுகளில் ஆர்வங்கொண்ட ரஷ்ய பத்திரிகையாளர்களின் குறிப்புக்கள் ஆகியவை பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவந்தன.

> 'இந்து மதம் பற்றி ரஷ்ய அறிஞர்கள் ஆராய்ச்சி, என்ற தலைப்பில் சோவியத் விஞ்ஞானப் பேரவையின் ஆசிய, ஆபிரிக்கத் தத்துவ ஞானப் பிரிவு ஆராய்ச்சியாளர் திரு. ஓ. மெசந்த்சேவா எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

அந்த சமயத்தில் ரஷ்யா இந்தியாவுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை. அந்த தொலைதூர நாட்டிற்கு ரஷ்யாவிலிருந்து செல்வது அவ்வளவு சுலபமாக இல்லை. ஒரு சில ரஷ்ய யாத்ரிகர்களே இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். இந்தியாவுக்குச் சென்றுவர வேண்டும் என்ற கெராசிம் லெபதேவின் கனவு பல சிரமங்களின் ஊடே நிறைவேறியது.

சென்ற நூற்றாண்டின் எழுபதாம் ஆண்டுகளிலும் எண்பதாம் ஆண்டுகளிலும் மூன்று முறை இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து, இந்தியாவின் பெரும்பான்மை மக்களின் மதம்குறித்து ஆராய்ச்சி மேற்கொண்ட ரஷ்யரான



விவேகானந்தர்

ஐ. பி. மினயேவ் இந்திய மதங்களைப் பற்றிய குறிப்புகளை சென்ற நூற்றாண்டில் வெளியிட்டார். அவர் பல சுவையான குறிப்புக்களை எழுதியுள்ளார்.

இந்துமதத்தின் விசேட அம்சங்களையும் பல்வேறு இந்து மதப் பிரிவினரின் நடைமுறைகளையும் பற்றிய குறிப்புக்களே அவை.

1894 ஆம் ஆண்டு செர்கோவ்னி வெஸ்த்னிக் என்ற கிறிஸ்துவ சமய சஞ்சிகையில் முதல்முறையாக சுவாமி விவேகானந்தரின் பெயர் குறிப்பிடப்பட்டது.

ரஷ்ய திருச்சபையின் அதிகாரப்பூர்வமற்ற பிரதிநிதியாக இளவரசர் செர்கி வோல் கோன்ஸ்கி சென்ற நூற்றாண்டின் 90ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் நடைபெற்ற உலக மதங்களின் மாநாட்டில் கலந்து கொண்டார். அங்கே சுவாமி விவேகானந்தர் அறிமுகமானார்.

இருவரும் நண்பர்களாயினர். பல ஆண்டுகள் இருவரும் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இளவரசர் வோல் கோன்ஸ்கி மிகுந்த புலமை வாய்ந்தவர்; கீழ்த் திசை நாடுகளின் மதங்களின்மீது மிகுந்த நாட்டம் கொண்டிருந்தவர்; ரஷ்யாவில் விவேகானந்தரின் போதனைகளை ஊக்குவித்தவர்.

கடந்த நூற்றாண்டின் மத்தியில் ஐரோப்பிய அறிஞர்கள் 'ரிக்வேதத்தைப்' படிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். ஐரோப்பா முழுவதும் இந்த ஆர்வம் பரவியிருந்தது எனலாம். மதம்உட்பட பண்டைய கால வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் 'ரிக் வேதம்' பிரதிபலித்தது எனப் பல அறிஞர்கள் கருதினர்.

மதநம்பிக்கைகளின் வளர்ச்சிப் போக்கை ஒருவர் புரிந்து கொள்வதற்கு, ரிக் வேதம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது, ஐரோப்பியர்களுக்கு ரிக் வேதம் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது போலவே இந்தியர்களுக்கு பைபிள் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. சமஸ்கிருத மொழிபெயர்ப்பு 1819 ஆம் ஆண்டில் வெளி வந்தது. பின்னர் சுமார் 40 இந்திய மொழிகளில் பைபிள் மொழி பெயர்க்கப்பட்டது.

கிழக்கு, மேற்கு நாடுகளின் தலைசிறந்த மத இலக்கியத்தைப் பரஸ்பரம் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியதன் விளைவாக மத ஒப்பாராய்ச்சி தோன்றியது.

கிறிஸ்துவத்துக்கும் கிறிஸ்துவமல்லாத பிற மதங்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றியும், மிகவும் புராதனமான கண்ணோட்டங்களிலிருந்து சிக்கலான மதக் கருத்துக்கள் தோன்றி வளர்ந்ததைப் பற்றியும், மக்களின் மதஉணர்வு வளர்ச்சியடைந்ததைப் பற்றியும் ஆராய்ச்சி செய்யப்பட்டது.

கீவ் நகர இறைமையில் கழகத்தைச் சேர்ந்தவரும் கீவ் நகரிலுள்ள செயிண்ட் விளதிமிர் பல்கலைக் கழகப் பேராசிரியருமான ஓரேஸ்த் நொவித்ஸ்கி, எம். ஏ., 1860 ஆம் ஆண்டில் தமது முக்கிய நூலான ''பண்டைக் காலத்தில் கீழ்த் திசை நாடுகளின் மதமும் தத்துவமும்'' என்ற நூலை வெளியிட்டார்.

''தத்துவமும் மதமும் அடிப்படையில் பல பொது அம்சங்களைக் கொண்டுள்ளன'' என அதில் குறிப்பிட்டுள்ளார்.

''மத நம்பிக்கைகளைப் பற்றிய விளக்கமே தத்துவ ஞான வளர்ச்சிக்கும் பல்வேறு தத்துவ ஞானப் பிரிவுகளும் அமைப்புக்களும் தோன்றுவதற்கும் ஆரம்பமாக இருந்தது'' என்று ஓ. கிரிசான்ப் (வி. என். ரெதிவ்த்சேவ்) தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அவர், ''கிறிஸ்துவத்துடன் தொடர்புடைய பண்டைய உலக மதங்கள்'' என்ற நூலை 1875 ஆம் ஆண்டில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் வெளியிட்டார்.

விவேகானந்தரின் இருபது கட்டுரைகள் ரஷ்யமொழியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன.

இந்துமதக் கொள்கை பற்றிய எங்களது ஞானம் விரிவடைந்து வருகிறது.

**- ஓ. மெசந்த்சேவா -**

— நன்றி: சோவியத்நாடு பெப்ரவரி - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு செய்க!



நேரம் அதிகாலை ஐந்து மணி இருக்கும் வெள்ளிக்கிழமை. அந்த நேரமே பிள்ளையார் கோயில் ஒலி பெருக்கி ஊரெல்லாம் பக்தியைப் பரப்பத் தொடங்கி விட்டிருந்தது.

இரவு முழுவதும் உறக்கம் இல்லாமல் இப்போதுதான் சற்றுக்கண்ணயர்ந்த வசந்தன் அந்தப் பாட்டுச் சத்தத்தில் அடியுண்டவனாக திடுக்கென்று விழித்தான்.

அலுப்புடன் படுக்கையை விட்டு எழுந்தவன் எரிந்து கொண்டிருந்த விடிவிளக்கை அணைத்துவிட்டு வெளியே வந்தான். வெளியில் ஒரே குளிர். இளங்காலங்களில் அவனுக்கு மார்கழிமாதமும், இந்தப் பனிக்குளிரும் மிகவும் பிடிக்கும்.

விடிய, விடிய மூடிக் கொண்டு படுத்துத் தூங்குவான். இப்போதெல்லாம் பனிக்குளிரும் உடம்புக்கு ஒத்துவருவதில்லை. நிம்மதியான தூக்கமும் அவனிடமிருந்துவிடைபெற்றிருந்தது.

தான் வழக்கமாக அமரும் அந்த சாய்மனைக் கதிரையில் வந்திருந்து, வசதியாகப் படுத்துக்கொண்டு, கால்களை நீட்டிச் சோம்பல் முறித்தான்.

என்றும் மாறாமல் அவனுக்குத் துணையாக இருப்பது இந்தக் கதிரை ஒன்றுதான். கடந்த சில காலமாகவே இனம்புரியமுடியாத மனச்சஞ்சலம் அவனை ஆட்டிப்படைக்கிறது.

தான் தனிமரமாகிவிட்டது போல, உறவினர்கள், நல்ல நண்பர்கள் என்று யாருமே தனக்கு இல்லாதது போல...... ''இவ்வளவுக்கும் இந்த ஊரிலையே சகல வசதியோடையும் இருக்கிறன். அந்தநேரம் என்ரை அப்பாவுக்கு இந்த ஊரும், உறவும் காட்டின அன்பிலை ஆதரவிலை பாதிகூட இப்ப எனக்கில்லையே'' வசந்தன் தன் மனதுக்குள் அங்கலாய்த்துக் கொண்டான்.

''மற்றவையள் உன்னோடை எப்பிடி நடக்க வேணும் எண்டு நீ விரும்புறாயோ, அவையளோடை அப்படி நீ நடந்துகொள்ள வேணும் வசந்தன்''.

அவன் அப்பா அவனுக்கு அடிக்கடி சொல்லித் தந்த பாடம்தான் இது. அப்பாவின் அறிவுரையைக் கேட்டு அதன்படி இவன் நடப்பதற்கு அவனது பூஜயா விட்டால் தானே!

மனித வாழ்வின் சகல பிரச்சினைகளுக்கும் அன்பின்மையே காரணமாகின்றன! இதை உணரவேண்டிய சந்தர்ப்பங்கள் இப்போதெல்லாம் அடிக்கடி இவனுக்கு உண்டாகின்றன. நேற்றும் இப்படித்தான். தன் சகோதரி மகனின் திருமணத்துக்குப் போகவேண்டியிருந்தது.

மூன்றாம் ஆள் மூலம் வந்திருந்த அழைப்பிதழ் காரணமாக மனம் கசந்து போயிருந்தான். வேண்டா வெறுப்பாக அந்தத் திருமண வீட்டுக்கு தன் மனைவியுடன் சென்றிருந்தான் வசந்தன். அங்கு நடைபெற்ற சடங்கு, சம்பிரதாயம் எதிலும் இவர்கள் கலந்துகொள்ளாமல் ஒரு பக்கமாக 'யாரோ' போல உட்கார்ந்திருந்தனர்.

திருமண வீட்டிலிருந்து திரும்பும் நேரம், 'வந்திருந்தோம்' என்று காட்டிக் கொள்ளவேணும் யாரிடமாவது விடைபெறவேண்டியிருந்தது. அது சமயம் தம் பக்கமாக வந்த சகோதரியிடம், 'அக்கா எங்களையும் நினைச்சு அழைப்பு அனுப்பினது சந்தோஷம்' தன் வழக்கமான பாணியில் வார்த்தைகளால் குத்தினான் வசந்தன்.

சிறுவயதில் ஒன்றாக ஓடியாடி விளையாடி, சேர்ந்து புகைப்படங்கள் பிடித்து, இவன் சைக்கிள் ஓட்டப் பழக்க அவள் ஓடிப்பழக...... அந்த அக்கா இவனை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தாள்.

அந்தப் பார்வையில் எதையோ உணர்ந்தவனாக தலை கவிழ்ந்தான் வசந்தன். ''நான் எதையுமே மறக்க

- சந்திரா தனபாலசிங்கம் -

மாட்டன் தம்பி'' கண்களில் திரண்டுவிட்ட கண்ணீருடன் இவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவைத்தாள் அக்கா.

அக்காவின் அந்தப்பதில் இப்போதும் இவன் நெஞ்சைச்சுட்டது. ''ச்சீ......அந்த நேரம் என்ன மடத்தனமான காரியம் பாத்திட்டன்'' மனதுக்குள் மறுகினான் வசந்தன்.

அக்காவுக்கு திருமணம் நடந்த அந்தச் சமயத்தில் மாப்பிள்ளையான அத்தானைப் பற்றி அவனது பூஜயா நிறையவே சொல்லியிருந்தார்.

''வந்திருக்கிறவர் லேசுப்பட்ட ஆளில்லை. அந்த ஊர்க்காரரே ஒரு மாதிரியானவை. நீ கவனமாக இல்லையெண்டால் உன்ரை அப்பாவையும் ஏமாத்திப் போட்டு எல்லாத்தையும் சுருட்டிப்போடுவினம்'' முன் பின் தெரியாத தயாளசீலனைப் பற்றி முற்றும் தெரிந்தவர்போல் கதையளந்தார் பூஜயா.

''அட......இந்தப் பூஜயாவுக்குத்தான் எவ்வளவு விஷயங்கள் தெருஞ்சிருக்கு!'' என்று மனதில் வியந்து கொண்டான் வசந்தன்.

அன்றிலிருந்து தயாளன் தங்கள் சொத்துக்களையெல்லாம் கொள்ளையிட வந்தவன் போலவே இவன் கண்களுக்குத் தெரிந்தான். அதனால் தன் ஒரே அக்காவிடம் தனக்கிருந்த ஒட்டுதலை மிகவும் குறைத்துக்கொண்டான்.

இவனுடன் தயாளன் எது பற்றிப் பேசினாலும் அதில் இரண்டாவது அர்த்தம் ஏதும் உள்ளதா என ஆராய்ந்தும் பார்த்தான்.

வசந்தன் அடுத்தடுத்து தன் பெற்றோரைக் காலனுக்கு இரை கொடுத்த சமயம் அது. தன் மனைவியின் தம்பி இவன். இப்போது தனியாகி நிற்கின்றானே என்ற கழிவிரக்கம் காரணமாக, அத்தனை பொறுப்புக்களையும் தன் தலையில் போட்டுக் கொண்டு விழுந்து, விழுந்து காரியம் பார்த்தான் தயாளன்.

அந்த இணக்கத்தில் ஆறுதலடைந்தவனாக, பூஜயா சொன்னது போல அத்தான் மோசமானவரல்ல என உணரத் தலைப்பட்டான் வசந்தன். இப்போது பூஜயா விழித்துக் கொண்டார்.

'என்னத்துக்கு உந்தத் தயாளன் உனக்கு உதவி செய்யிறது போலை நடிக்கிறான் தெரியுமே. தாய், தகப்பனும் இல்லை. இவனைத் தனிய வைச்சே பொருள் பறிக்கலாம் எண்டு தான். என்னவோ நான் உன்ரை நல்லதுக்குத் தான் சொல்லுறன்' இவன் கால்களைப் பிடித்து விட்டவாறே மந்திரம் ஓதியதிலை மீண்டும் உஷாரானான் வசந்தன்.

வீட்டுத் திறப்பு உட்பட தன் சகல பொறுப்புக்களையும் பூஜயாவிடம் ஒப்படைத்து விட்டுக் கொழும்புக்குப் பயணமானான். அங்கேயும் இவனுக்குச் சில காரியங்கள் ஆகவேண்டியிருந்தது.

அப்போதெல்லாம் அவனுக்குப் பூஜயா எழுதும் கடிதங்களில் கூட, தயாளன் உன்னைப் பற்றி இன்னாரிடம் இப்படிச் சொன்னான் அப்படிச் சொன்னான் என்று தன் மனதில் தோன்றுவதையெல்லாம் எழுதிக்கொண்டு தான் இருந்தார்.

அந்த நேரத்தில்தான் அந்தச் சம்பவம் நடந்தது. பூஜயா பொறுப்பில் இருந்த வசந்தனின் வீடு முற்று முழுதாகக் கொள்ளை போய்விட்டிருந்தது.

நடந்ததைக் கேள்விப்பட்டுக் கொழும்பிலிருந்து பதறியடித்துத் தன் வீட்டுக்கு ஓடி வந்தான் வசந்தன். பூஜயாவோ வெகு நிதானமாகக் களவு பேர்னதில் தயாளனுக்கும் சம்பந்தம் இருக்கக்கூடும் என்பதைச் சந்தர்ப்ப சாட்சியங்களுடன் இவனுக்கு விளக்க ஆரம்பித்தார்.

அவர் எப்படிப் பட்டவர் என்பதை இப்போதெல்லாம் உணரத் தொடங்கி விட்டான் இவன். ஆயினும், தன் வீடு கொள்ளை போய் விட்டதே என்ற எரிச்சல் இவனை ஆட்டி வைத்துக் கொண்டிருந்தது. இதன் காரணமாக களவு பற்றி விசாரிக்க வந்த தயாளன் மேல் எரிந்து விழுந்தான் வசந்தன்.

'பக்கத்திலை இருக்கிறீங்கள். உங்களுக்குத் தெரியாதோ என்ரை வீட்டிலை எப்பிடிக் களவு போனதெண்டு'' வசந்தன் தயாளனைக் கேட்டபோது அவன் அறியாமை கண்டு சிரிக்கத்தான் தோன்றியது இவனுக்கு.

''நிதானமாகப் பேசும் வசந்தன். நடந்தது களவு. களவெடுக்கிறவை அக்கம் பக்கத்திலை உள்ளவையைக் கூப்பிட்டுச் சொல்லிப் போட்டோ எடுப்பினம்'

அவன் மனம் நோகா வண்ணம் மெதுவாக எடுத்துச் சொன்னான் தயாளன்.

'எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் வந்த நாளிலே இருந்து எங்களை எப்பிடி மடக்கலாம் எண்டு தான் காத்திருந்தனீங்கள்'

''இப்படிச் சொல்லி அவனை தான் மடக்கி விட்டதாக இவன் நினைத்த நேரம், அங்கே எரிமலை வெடித்தது. ஆம்! அத்தனை நாள் பொறுத்துப் போன தயாளன், தன்மானம் சீண்டப் பெற்ற காரணத்தால் பொங்கி எழுந்தான்.

அன்றிலிருந்து இழுபறியாகவே இருந்த அந்த அக்கா - தம்பி உறவு ஒருவாறு முற்றுப்பெற்றது. இதில் மிகவும் மகிழ்ந்து போய் திருப்திப் பட்டுக் கொண்டவர் வசந்தனின் பூஜயா தான்.

இவன் பின்பு நிதானமாக எடுத்த நடவடிக்கைகள் காரணமாகத் தன் வீட்டில் திருட்டுப் போனதற்கு யார் பொறுப்பானவர் என்று கண்டு பிடித்து விட்டான்.

இருந்தும் என்ன? தன் ஒரே சித்தப்பாவின் மகளான அந்த அக்கா குடும்பத்தவரின் அன்பை மட்டும் மீட்டுக் கொள்ள முடியாதவனாகி விட்டான். நல்ல மனிதர் உறவை இழந்து விட்டேனே என்று தன் சகோதரி குடும்பத்தவரிடம் இவன் மீண்டும் நீட்டிய நேசக்கரங்களுக்கு வலு இருக்கவில்லை.

இப்போது நினைத்துப் பார்க்கையில் தனது இந்தத் தனிமைக்கு பூஜயா தான் காரணம் என்று உணர்கிறான்.

யார் இந்தப் பூஜயா? இவர் உனக்கு இன்ன உறவினர் என்று, இவனுக்கு யாரும் அவரை அடையாளம் காட்டியிருக்கவில்லை. சிறு வயதில் தன்னைத் தூக்கி வளர்த்தவர் என்பதை அறிவான். தான் பிறக்க முன்னமே தன் குடும்பத்தோடு வந்து ஒட்டிக் கொண்டவர் என்பதையும் அறிவான்.

தாய் தந்தையரையும் இழந்து, தான் காதலித்தவளையே கைப்பிடிக்க நினைத்திருந்த வேளைதான் அவரைப்பற்றி நன்கு அறிந்து கொண்டான் வசந்தன்.

பெரும் சொத்துக்கு அதிபதியான இவன் தன்னுடைய மகளில் ஒன்றையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும், வேறு யாரையும் திருமணம் செய்யக்கூடாதென்றும் அடம் பிடிக்கத் தொடங்கியிருந்தார்.

''நான் அறியப் பிறந்து வளர்ந்ததுகள், வசந்தன் அண்ணா எண்டு வாய் நிறையக் கூப்பிடுங்கள். அதுகளைப் போய்...... உங்களுக்கு என்ன பிடிச்சிருக்கு'' என்று அந்த நேரம் கத்திப் பேசி அவரை அடக்கி விட்டான் வசந்தன்.

எப்படியோ ஒருவாறு அவரைச் சமாளித்துத் தான் விரும்பியவளைக் கல்யாணம் செய்து கொண்ட போது, போதும் போதும் என்றாகி விட்டது இவனுக்கு. அதன் பின்பு தான் பூ ஜயாவின் சேட்டைகள் உச்சக் கட்டத்தையடைந்தன.

வசந்தன் மனைவியின் பலம் எது, பலவீனம் எது என நன்கு அறிந்து கொண்டார் பூ ஜயா. பண்பட்ட மொசாட் மூளையல்லவா அவருடையது.

அந்த நேரங்களில் வசந்தன் வீட்டில் இரவில் ஏதேதோ பயங்கரச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. இருந்தாற் போல் திடீரென்று இவர்கள் வீட்டு வைக்கோல் போர் தீப் பற்றி எரிந்தது.

வீட்டில் ஆரோக்கியமாக நின்ற ஆட்டுக்குட்டி ஒன்று பட்டென்று விழுந்து செத்துப் போனது. வசந்தனும் மனைவியும் பயத்தில் தவித்துப் போனார்கள். காரணம் புரியாமல் குழப்பமடைந்துள்ளார்கள்.

''இதெல்லாம் ஏன் பூ ஜயா?'' பீதியுடன் கேட்டாள் வசந்தனின் மனைவி.

''அதெல்லாம் செத்துப் போன உன்ரை மாமா, மாமியின்ரை ஆவியோடை விளையாட்டுபிள்ளை'' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லி விட்டுத் தன்பாட்டில் போய் விட்டார் அவர்.

''நாங்கள் கொழும்பு வீட்டில போய் இருப்பமே. இஞ்சை உங்கடை அப்பா, அம்மாவின்ரை ஆவியாலை ஒரே தொல்லை'' என்று வசந்தனைத் துளைத்தெடுத்து விட்டாள் அவன் மனைவி. தன் மனைவியின் மனநிம்மதிக்காகத் தொழில் முறைகளைக் கொழும்போடு மாற்றிக்கொண்டான். தப்பினோம், பிழைத்தோம் என்று கொழும்பு வீட்டுக்குக் குடிபோய் விட்டனர் இருவரும்.

பூ ஜாயவின் இட்டப்படி எல்லாம் நடந்ததில் பயங்கர வெற்றி அவருக்கே! வசந்தன் சொத்துக்களையெல்லாம் ஆளும் உரிமையைச் சுதந்திரமாகத் தானே கைப்பற்றிக் கொண்டார்.

இப்போது காலத்தின் கோலத்தால் எல்லாமே தலைகீழாக மாறி விட்டிருந்தன. மனித உயிர்கள் என்னும் பெரிய சொத்துக்கே பெறுமதி இல்லாத நிலை. கொழும்பின் அதிவேக வாழ்க்கை முறைகள் அலுத்துப் போய் வசந்தனும், மனைவியும் மீண்டும் ஊருடன் குடியிருக்க வந்து விட்டனர்.

இப்போதெல்லாம் இவர்கள் யாருடைய பேச்சையும், கதைகளையும் எளிதில் நம்பி விடுவதில்லை. விரைவில் உணர்ச்சி வசப்பட்டு விடுவதுமில்லை.

பூ ஜயா தான் ஊரில் இல்லையே. உள் நாட்டில் நிலைமை சரியில்லையாம். அதனால் அவரது அத்தனை பிள்ளைகளும் அகதிகளாக வெளிநாடுகளுக்குப் போய் விட்டிருந்தனர்.

அப்பாவுக்கு ஏதும் நடந்தால் தாங்கள் கொள்ளி வைக்க வரவேண்டியிருக்குமே எனப் பயந்து இவரையும் அகதியாக்கித் தம்முடன் அழைத்துக் கொண்டனர்.

வசந்தன் தனது ஊரே இப்போது தனக்கு அந்நியமாகி விட்டதுபோல உணர்கிறான். உறவினர்களோ பழைய பயத்தில் இவர்கள் கிட்ட வரவும் அஞ்சுகின்றனர்.

தன் தந்தை தனது இறுதிக் காலம் வரை உறவுகளின் அன்பை எப்படிக் கட்டிக் காத்திருந்தார் என்பதை நினைத்துப் பாக்கிறான் மிகவும் மனம் நோகிறான்.

என்ன செய்யலாம்? கண் கெட்டு விட்ட பின்னால் சூரிய நமஸ்காரம் செய்ய முடிவதில்லையே......!

(யாவும் கற்பனை)

சஞ்சீவி சிறுகதை

## சாதனை படைக்கும் பெண்ணின் வைராக்கியம்

● மேரி க்யூரி அம்மையார் தன் கணவருடன் சேர்ந்து விஞ்ஞான உலகுக்குப் புதிய கண்டுபிடிப்பை வழங்கினார்.

அதற்காகக் கணவன் மனைவி இருவருக்கும் இணைந்து நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அப்போது அநேகர் க்யூரி அம்மையாரின் தகுதியைப் புரிந்து கொள்ளவில்லை.

என்னவோ கணவர் உழைப்பில் இந்த அம்மையாருக்குப் புகழ் கிடைத்திருக்கிறது என்று பேசினார்கள்.

க்யூரி அம்மையாரோ தன் கணவர் மறைவிற்குப் பின் தனியே முயன்று மற்றொரு புதிய கண்டுபிடிப்பை உலகுக்குத் தந்து நோபல் பரிசு பெற்றுத் தனது திறமையை நிரூபித்தார்.

பெண்களுக்கு வைராக்கிய குணம் அதிகம் என்பதால் அவர்கள் நல்ல விஷயங்களில் வைராக்கியத்தைக் கைக்கொள்ளும்போது சாதனை படைக்காமல் இருந்தது இல்லை. ★

## முன் தோன்றிய மூத்த குடி!

● உலகத்தில் தோன்றிய மூத்த உயிரினங்களில் ஒன்று தேள்.


இது மக்கள் தோன்றுவதற்கு முன்பே வாழ்ந்து வருகிறது. தட்பவெட்ப நிலைகளால் பாதிக்கப்படுவதே இல்லை.

கடும் குளிரானாலும் சரி, வெயிலானாலும் சரி இது பாதிக்கப்படுவதே இல்லை.

தேள் பல நாள் பட்டினி கிடக்கும். இது தண்ணீர் குடிக்கவென்று அலையாது.

உண்ணும்இரையில் இருந்து கிடைக்கும் நீரைக்கொண்டு உயிர் வாழ்கிறது. ★

# சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 109
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................
விலாசம் ..............................................
..............................................

### பரிசு பெற்றவர்கள் விபரம்

**முதலாவது பரிசு:**
ரி. ராஜேந்திரன், சோமசுந்தரம் லேன், ஆனைக்கோட்டை.

**இரண்டாவது பரிசு:**
த. துரைச்சாமி, கந்தகிரி, வட்டூர், வட்டுக்கோட்டை.

**மூன்றாவது பரிசு:**
ப. தெய்வேந்திரன், 7, பேக்கரி லேன், யாழ்ப்பாணம்.

## போட்டி இல: 109

### இடமிருந்து வலம்:

1. சாவித்திரியின் கணவன் 5. இந்திராணி தலைகீழாக உள்ளது 6. பிரபலமான முருகன் ஆலயம் 9. மலையை இப்படியும் அழைப்பர் 10. ஒரு சொல் சேர்த்தால் வீடு வரும் 11. நதிகளில் ஒன்று 13. உலோகங்களில் இதுவும் ஒன்று 14. தாய்நாடு 15. கழனி 17. மயில் ஆடும், குயில் ? 18. எல்லை.

### மேலிருந்து கீழ்:

1. நதிகளின் இணைப்பு 2. அகங்காரம் 3. அவதாரங்களில் ஒன்று குழம்பியுள்ளது 4. புகலிடம் சேர்தல் 7. இலக்குமி 8. புலவர்களில் ஒருவர் 10. கை, மெய்களால் கருத்தை உணர்த்துவது குழம்பியுள்ளது 11. உடலுறுப்பு 13. அன்பு 14. கடைசிச் சொல் சேர்த்தால் பிரபலமான ஒரு கவிஞர் 15. ஒரு எழுத்து சேர்த்தால் வருமானம் 16. நெற்களின் இடையில் வளர்வது.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப் படும்.

**முடிவு திகதி: 14 - 03 - 1990**

### சொற்சிலம்பம் இல: 108 சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பரமபதம் 4. ரி. பி 5. ரகு 6. அடி 7. அமராபதி 8. சவரன் 9. கரி 10. குமரி 11. பதவுரை 12. பா 13. புதர் 14. மலைப்பு 16. கார் 17. புனை.

**மேலிருந்து கீழ்**

1. பரவசம் 2. ரகு 3. பரமன் 4. பிடி 6. அதிகரி 7. அரமாதர் 10. குளரப்பு 11. பதர் 12. பாலை 13. புகா 15. மது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை திரேஸாவின் அன்றாட பிரார்த்தனை

● நாம் சுவாமி அறையில் தினமும் பூசை செய்கிறோம். நமக்காகவே இறைவனை அப்போது நாம் வேண்டுதல் செய்கிறோம்.

உலகை உய்விக்க வந்த பெரியவர்கள் எப்படி வழிபடுகிறார்கள்?

உலக ஷேமத்துக்காகவே அவர்கள் வழிபடுகிறார்கள்.

நம் மத்தியில் இன்று வாழ்ந்து வரும் நடமாடும் கடவுளான அன்னை திரேஸாவின் அன்றாட ஜெபத்தை இனி வாசியுங்கள்:

ஆண்டவரே! உலகெங்கும் வறுமையால் வாடி மடியும் சகோதரர்களுக்குப் பணிபுரிய எம்மைத் தகுதியுள்ளவராக ஆக்கியருளும்.

அவர்களுக்கு எங்களின் கரங்களின் மூலம் அன்றாட உணவையும் எங்கள் அன்பாலும் நன் மனத்தாலும் அமைதியையும் மகிழ்ச்சியையும் ஊட்டியருள்வீராக.

இறைவா!

அமைதியின் கருவியாய் என்னை ஆக்கியருளும்.

பகையுள்ள இடத்தில் அன்பையும், தவறுள்ள இடத்தில் மன்னிப்பையும் பிளவுள்ள இடத்தில் ஒற்றுமையையும், பிழையுள்ள இடத்தில் உண்மையையும், ஐயமுள்ள இடத்தில் உறுதியையும், விரக்தியுள்ள இடத்தில் நம்பிக்கையையும், இருள் உள்ள இடத்தில் ஒளியையும் மருள் உள்ள இடத்தில்


அன்னை திரேஸா

மகிழ்ச்சியையும் நான் விதைப்பேனாக.

பிறரிடம் ஆறுதல் தேடுவதை விட பிறருக்கு நான் ஆறுதல் தரவும், பிறர் என்னைப் புரிந்திடல் வேண்டுமென்பதைவிட பிறரை நான் புரிந்துகொள்ளவும் பிறர் என்னை அன்பு செய்ய வேண்டுமென்பதை விட பிறரை நான் அன்பு செய்திடவும் அருள் புரியும்!

இப்படிபிரார்த்தனை செய்வதால் அன்னை உலக மக்களின் உள்ளங்களில் எல்லாம் குடியிருக்கின்றார் அல்லவா!

## முப்பரிமாணப் படங்களை தயாரிக்கும் கொம்பியூட்டர்

● கொம்பியூட்டரில் முப்பரிமாண (3 D) படங்களைத் தயாரிக்க முடியும் என்று அமெரிக்காவைச் சேர்ந்த எலெக்ட்ரோனிக்ஸ் நிறுவனம் ஒன்று நிரூபித்துக் காட்டியுள்ளது.

சுழலும் 'டிஸ்க்' ஒன்றில் இருந்து லேசர் 'துடிப்புக்களை' ஏற்படுத்துவதன் மூலம் கொம்பியூட்டர் திரையில் முப்பரிமாணத்தோற்றம் உண்டாக்கப்படுகிறது.

இந்த முப்பரிமாண உருவத்தின் மேற்புறம், கீழ்ப்புறம், பக்கவாட்டுப்புறம் என எதை வேண்டுமானாலும் விருப்பப்படி பார்வையிட முடியும்.

டெக்ஸஸ் இன்ஸ்றுமெண்ட்ஸ் இன்கோப்பரேட்' என்னும் நிறுவனம் இந்த முப்பரிமாணக் கொம்பியூட்டர் உத்தியை உருவாக்கியுள்ளது.

விமானநிலையம் ஒன்றின் கட்டுப்பாட்டு அறையில் உள்ள அதிகாரிகள் தங்களது விமானநிலைய வான்பரப்பை இந்த உத்திமூலம். முப்பரிமாணமாக உருவாக்க முடியும்.

விமானங்கள் வருவதையும் போவதையும் கூட அதில் குறிக்கமுடியும்.

பொறியியல் வல்லுநர்கள், கட்டட வடிவமைப்பாளர்கள், மருத்துவர்கள் போன்றோருக்கும் இந்த முப்பரிமாண கொம்பியூட்டர் ஓவியங்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

தற்போது புழக்கத்தில் உள்ள கொம்பியூட்டர்வரை கோட்டுச் சித்திரங்கள் யாவும் இரு பரிமாணப் படங்களேயாகும். ★

## 'கறுப்புப் பெட்டி'யின் நிறம் ஒரேஞ்சு

● விமான விபத்துக்கள் நடக்கையில், அதற்கான காரணம் என்ன என்று அறியப் புலனாய்வாளர்களுக்கு உதவும் சாதனத்தின் பெயர் தான் கறுப்புப்பெட்டி.

எல்லா விமானங்களிலும் இது பொருத்தப்பட்டிருக்கும்.

'கறுப்புப்பெட்டி' என்று இது அழைக்கப்பட்டாலும், இதன் நிறம் கறுப்பு அல்ல; சிலகறுப்புப்பெட்டிகள் பிரகாசமான ஒரேஞ்சு நிறத்தில் இருக்கும். சில பெட்டிகள் மஞ்சளாக இருப்பதும் உண்டு.

இது 'கறுப்புப் பெட்டி' என்று எப்படி அழைக்கப்பட்டது என்று தெரியவில்லை.

ஒரேஞ்சு நிறத்தில் பெட்டி இருப்தால், விபத்து நடந்த இடங்களில் சிதைவுகளுக்கு இடையேயும் 'பளிச்' என்று இது கண்ணில் படும்.

சில பெரிய விமானங்களில் ஒன்றுக்கு இரண்டு கறுப்புப் பெட்டிகள் இருப்பதும் உண்டு.

கறுப்புப் பெட்டியில் உள்ள 'கொக்பிட் வாய்ஸ் ரெக்கோர்டர்' என்னும் சாதனம், விமானியின் அறையில் நடக்கும் உரையாடல்களைப் பதிவு செய்யும்.

'டேட்டா ரெக்கோர்டர்' என்னும் மற்றொரு சாதனம், இந்த விமானத்தின் பல்வேறு இயக்கங்களைப் பதிவு செய்யும்.

ஒரு கறுப்புப்பெட்டியின் விலை 9,000 டாலர்களில் இருந்து 20,000 டாலர்கள் வரை இருப்பதுண்டு.

இந்தக் கறுப்புப் பெட்டிகள் மூலம், விமானம் விபத்துக்குள்ளாகும் முன்பு விமானிகள் என்ன பேசிக்கொண்டார்கள். இயந்திரங்கள் எப்படி செயல்பட்டன என்பதை அறிய முடியும்.

விமானிகள், விமான பணிப் பெண்களிடம் ஏதாவது 'குறும்பாக' பேசினால்கூட, அது இந்த கறுப்புப் பெட்டியில் உள்ள டேப்பில் பதிவாகிவிடும். ★

## ஒரு பெண்ணுக்கு ஒரே நேரத்தில் மூன்று மாற்று உறுப்பு பொருத்தல்

● அமெரிக்காவில் ஒரு பெண்ணுக்கு ஒரே நேரத்தில் இதயம், சிறிநீரகம், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

மிக முக்கியமான மூன்று உறுப்புகளை மாற்ற ஒரே நேரத்தில் அறுவை சிகிச்சை நடந்தது உலகில் இதுவே முதல் முறை.

அமெரிக்காவில் பென்சில்வேனியாவில் பிட்ஸ்பர்க் நகரைச் சேர்ந்தவர் சிண்டி மார்ட்டின்.

இந்தப் பெண்ணுக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் இதய நோய் ஏற்பட்டது. அப்போது அவருக்கு மாற்று இதயம் பொருத்தப்பட்டது. மார்ட்டினுக்கு மீண்டும் இதயக் கோளாறு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அவரது கல்லீரலும், சிறுநீரகமும் செயல் இழந்தது.

உடன் ஆபத்தான நிலையில் பிரிஸ்பிடிரியன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். மார்ட்டினுக்கு மூன்று உறுப்புக்களையும் மாற்றி வேறு புதிய உறுப்புகளைப் பொருத்த டாக்டர்கள் முடிவு செய்தனர். அறுவை சிகிச்சை ஆரம்பமானது. பல டாக்டர்கள் 22 மணி நேரம் போராடி வெற்றிகரமாக முடித்தனர். ★

## புகைப்பவர்களுக்கு பிடிக்காத நாடாக மாறும் அமெரிக்கா!

● புகைபிடிப்பவர்களுக்கு அமெரிக்கா பிடிக்காத நாடாக மாறிக்கொண்டு வருகிறது.

அமெரிக்காவில் புகைபிடிக்கும் பழக்கம் கொண்டவர்கள் மேலும் மேலும் ஒதுக்கப்பட்டவர்களாகி வருகின்றனர்.

அவர்கள் பாடு திண்டாட்டமாகி வருகிறது.

இப்போதைய நிலை நீடித்தால் புகைபிடிப்பவர்களுக்கு அமெரிக்காவில் தொழில் கிடைப்பதும் திண்டாட்டமாகி விடலாம். அமெரிக்காவில் பல துறைகளிலும் புகைபிடிப்பது தகாத செயலாகி விட்டது.

அமெரிக்க நாட்டில் உள்ள 6 ஆயிரம் அலுவலகங்களில் புகைபிடிப்பது தடைசெய்யப்பட்டுவிட்டது. தனியார் துறையிலும் இந்த நிலை நீடிக்கிறது.

சிக்காகோவில் ஒரு நிறுவனம் ஒரு படி மேலே சென்று ஊழியர்கள் தங்கள் வீட்டில் கூட புகைபிடிக்கக்கூடாது என்று மறைமுகமாகத் தடைவிதித்துள்ளது.

அதாவது புகைபிடிப்பவர்கள் அலுவலகத்துக்கு வரும் போது அவர்களிடம் சிகரெட் வாசனை வீசக்கூடாது என்று நிறுவனம் கூறியுள்ளது.

புகைபிடிப்பவர்கள் அலுவலகத்துக்கு வந்து மற்றவர்களிடம் பேசும்போது வெளிப்படும் சிகரெட் நாற்றம் மற்ற ஊழியர்களுக்கு வெறுப்பாக உள்ளதாக நிர்வாகம் இதற்குக் காரணம் காட்டியுள்ளது.

ஜோர்ஜியாவில் உள்ள ஒரு நிறுவனம் புதிதாக நியமனம் வழங்கப்படும்போது சிகரெட் புகைக்கும் பழக்கம் உண்டா? என்று கேட்டுத்தான் நியமனம் வழங்குகிறது. புகைபிடிப்பவர்களுக்கு வேலையே இல்லை என்று கூறிவிடுகிறார்கள்.

நியூயார்க் நகரில் பொது இடங்களில் யாரேனும் புகைபிடித்தால் ஆயிரம் டாலர் வரை அபராதம் விதிக்கப்படுகிறது.

இந்த ஜனவரி முதல் அமுலுக்கு வந்துள்ளது. ★

## உலகம் நிலையாக இருப்பது யாரால்?

● நன்மை செய்தோருக்குத் தீமை செய்பவர்கள் பாவிகள்.

தீமை செய்தோருக்குத் தீமை செய்பவர்கள் தீரர்கள்.

பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொண்டு ஒதுங்கிப் போகிறவர்கள் உத்தமர்கள்.

தீமை செய்தவர்க்கும் நன்மை செய்பவர்கள் உத்தமோத்தர்கள்.

தீமை செய்தவர்களைப் பொறுத்துக்கொண்டு நன்மை செய்வதுடன் நிற்காமல், அவர்களின் பாவமன்னிப்புக்காக இறைவனிடம் முறையிடுவார்கள், சான்றோர்கள்.

இத்தகைய சான்றோர்களின் பொருட்டே கடல் பொங்காமலும் பூமி நடுங்காமலும் உலகம் நிலை பெற்றிருக்கிறது.

—வாரியார்

## பாப்பரசரைக்காக்கும் பாதுகாப்புப் படை

● பரிசுத்த பாப்பரசரைப் பாதுகாப்பதற்கு 'ஸ்வீஸ் கார்ட்ஸ்' என்ற விசேட படை உள்ளது.

இந்தப்படையில் சுவிட்சர்லாந்து நாட்டவர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

1505 ஆம் ஆண்டு இப்படை இருந்து வருகிறது.

18–25 வயதுவரை திருமணமாகாதவர்கள் 6 அடி உயரத்துக்குக் குறையாதவர்கள் இப்படைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இரவு பகலாக பாப்பரசரைப் பாதுகாப்பதே இவர்கள் பணி. இவர்கள் அணிவது சரித்திரகால உடை.

மாதத்தில் 10 நாட்கள் இவர்களுக்கு விடுமுறை உண்டு. ★

## 10கோடி ஆண்டுக்கு முந்திய விலங்கு

● சுமார் பத்துக்கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உலகில்பீளீசியோசர் (Plesiosaur) என்னும் விலங்குகள் வாழ்ந்து வந்தன.

இந்த விலங்கின் கற்படிவ வடிவிலான முழு எலும்புக்கூடு இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டைனோசர் (Dinoasur) இனத்தைச் (Species) சேர்ந்த பீளீசியோசார் நீரில் வசித்து வந்த ஊர்வன பிரிவைச் சேர்ந்த விலங்காகும்.

இப்போது கண்டுபிடிக்கப்பட்ட பீளீசியோசார் குட்டையான கழுத்து கொண்டதாக சுமார் 16 அடி நீளம் இருந்திருக்க வேண்டும் என்று ஆஸ்திரேலிய குயீன்ஸ்லாந்து மியூஸிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

குயீன்ஸ்லாந்து மாநில வடமேற்குப்பகுதியில் ரிச்மாண்ட் என்னுமிடத்துக்கு அருகே பெரிய கால்நடைப் பண்ணைப் பிராந்தியத்தில் இந்த கற்படிவம் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்விலங்கு மாமிச பட்சிணியாகும். ★

## உயில் எழுதுவது

● உயில் எழுதும் முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியது யார்?

தன்னுடைய சொத்து அல்லது தனக்கு உரிமையானது இன்னொருவருக்குப் போக வேண்டும் என்று உயில் எழுதி வைக்கும் முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் ரோமானியர்கள். ★

## காட்டின் அரசன் சிங்கம் இல்லை

● காட்டின் அரசன் சிங்கமா? இல்லை. ஏனென்றால் சிங்கம் அடர்ந்த காடுகளில் வசிப்பதில்லை. திறந்த – அடர்ந்த – புல்வெளிகளிலும், புதர்கள் நிறைந்த பகுதிகளிலுமே சிங்கம் வசிக்கும். காட்டில் அல்ல.

● முதன் முதலாக விளம்பரம் ஒன்றில் தோன்றிய கிரிக்கெட் வீரர் என்ற பெருமை டெனிஸ் கொம்ப்டனுக்கு கிடைத்தது.

'பிரில்கிரீம்' விற்பனை விளம்பரத்தில் இவர் தோன்றினார். ★

## பாடசாலை மாணவிக்கு நடந்த பூணூல் அணியும் நிகழ்ச்சி

● பெங்களூர் நகரைச் சேர்ந்த விஜயலட்சுமி என்ற பள்ளிக்கூட மாணவிக்கு அண்மையில் உபநயனம் நடந்தது.

அதாவது, பூணூல் அணிவிக்கப்பட்டது. இது அபூர்வமான ஒரு சம்பவமாகும்.

பூணூல் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரித்தான ஒன்று என்று அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கையில் வேத காலத்தில் பெண்களும் பூணூல் அணிந்திருந்ததையும், சந்தியாவந்தனம் உட்பட அனைத்து அனுஷ்டானங்களையும் அவர்களும் செய்துவந்ததையும் வேத நூலில் படித்ததும் திகைப்பில் ஆழ்ந்தார், விஜயலட்சுமியின் தந்தையாரான வெங்கடேஷ்.

இது பற்றித் தனது மகளிடமும், மனைவியிடமும் பேசினார். ஆரிய சமாஜத்தையும் அணுகினார்.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் பால் வேற்றுமை தவிர வேறு வேற்றுமை எதுவும் இல்லை என்பதால் ஒருவரை உயர்த்தி, மற்றவரைத் தாழ்த்தக்கூடாது என்பது ஆரிய சமாஜத்தின் கொள்கை.

விஜயலட்சுமிக்குப் பூணூல் அணிவிக்கப்பட வேண்டும் என்பதை அந்தச் சமாஜம் வரேவற்றது. விஜயலட்சுமிக்கு முதலில் தயக்கம் இருந்தது. சந்தியாவந்தனம் செய்வதன்மூலம் ஆன்மீக வளர்ச்சியும், அறிவியல் தெளிவும் ஏற்படும் என்பதைத் தந்தையார் விளக்கியதும் சரி என்று ஏற்றுக் கொண்டார்.

பெண்களுக்குப் பூணூல் போடுவது முன்பிருந்த வழக்கம்தான். மைத்ரேயி, கார்கி, உபயபாரதி ஆகிய பெயர்கள் வேதகால நூல்களில் பேசப்படுகின்றன.

இவர்கள் எல்லாம் வேதம் பயின்ற, பூணூல் அணிந்த அறிவுஜீவிப் பெண்கள்.

விஜயலட்சுமி, பெண் என்பதால் அவருக்குப் பூணூல் போட்டுவிட பெண் புரோகிதர் தேவைப்பட்டார். ஆரிய சமாஜத்தின் தீவிர உறுப்பினரும் ஆதாரப் பள்ளிக்கூட ஆசிரியையுமான திருமதி அனுசுயாவிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ★

## பொன்மொழி

● அகப்பைக்கு குழம்பின் சுவை தெரியாது.

அதேபோல் மூடன் ஒருவன் வாழ்நாள் எல்லாம் அறிஞரோடு பழகினாலும் அறத்தை அவன் அறிவது கிடையாது.

— புத்தர்

## அதிக வருமானவரி செலுத்தும் இந்தியர்

● இந்தியாவிலேயே அதிகமான வருமானவரி செலுத்துபவர் டாட்டா, பிர்லா, கோயங்கா என்று நினைக்கா தீர்கள்.

29 வயதான அஸ்வாணி குரானா என்பவர் தான் இன்று அதிகமான வருமான வரி செலுத்துகின்றார்.

பாகிஸ்தான் பிரிவினையின் போது அகதியாக வந்த ஒரு பஞ்சாபி இந்துவின் மகனான இவருக்குக் கடந்த ஆண்டில் கிடைத்த 4 கோடி ரூபா (இந்தியப் பணம்) வருமானத்தில் 2 கோடி ரூபாவை வருமான வரியாகச் செலுத்தினார்.

பிரபல தொழிலதிபர்கள் மற்றும் நட்சத்திரங்கள் இவரைவிட அதிகமாகச் சம்பாதித்த போதிலும் அதிக அளவில் வருமான வரி கட்டியவர் என்ற பெருமை இவருக்குக் கிடைத்துள்ளது.

21 ஆவது வயதில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபா வருமானமாகப் பெற்ற இவர் 26 ஆவது வயதில் ஒரு கோடி ரூபாயை வருமானமாகப் பெற்றார்.

இவர் செய்யும் தொழில், லொத்தர் டிக்கட்டுக்களை விற்பது. சுமார் 1600 கோடி ரூபாய்க்கு டிக்கட்டுகளை அகில இந்தியாவிலும் விற்பனை செய்து வருகிறார். ★

## கம்பரின் ஆனந்த நடனம்!

● கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு தாம் பாடிய இராமாயணத்தை அரங்கேற்ற ஏழு வருஷங்கள் எடுத்தன.

கம்பராமாயணத்தை அரங்கேற்றிய இடம் ஸ்ரீரங்கம் கோயிலில் உள்ள மேட்டழகிய சிங்கர் கோயில்.

அரங்கேற்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஸ்ரீராம சரித்திரத்தில் நூற்றுக்கு ஒரு செய்யுளில் கம்பரை ஆதரித்த வெண்ணை நல்லூர் சடையப்ப முதலியாரைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது.

அரங்கேற்றம் நடந்த சபையில் இருந்த அறிஞர்கள் இதனை ஆட்சேபித்தார்கள்.

பலத்த விவாதத்தின் பின்னர் ஆயிரத்துக்கு ஒரு செய்யுளில் சடையப்ப வள்ளலைப் பற்றிச் சொல்ல அனுமதிக்கப்பட்டது.


கம்பர்

உடனே கம்பர் ஆனந்தப் பரவசப்பட்டுக் கூத்தாடினாராம்.

ஏன் ஆனந்த நடனமாடுகிறீர்கள்? என்று கம்பரைக் கேட்டனர்.

''நான் சடையப்ப வள்ளலை நூற்றில் ஒருவராக நினைத்திருந்தேன். ஆனால் நீங்கள் அவரை ஆயிரத்தில் ஒருவராக எண்ண அனுமதியளித்துவிட்டீர்களே. அந்த மகிழ்ச்சி தான் என் பரவசத்துக்குக் காரணம்''—

இப்படி கம்பர் காரணம் கூறினார்

-ஆதாரம்: நமது யாதவம்.

## கும்பகர்ண பறவை

● ஆண்டில் ஒன்பதுமாதங்கள் தூங்கும் ஒரு பறவை இருக்கிறது.

இதனைக் கும்பகர்ணப் பறவை என்றழைக்கின்றார்கள்.

மலைக்குகைக்குள் இருந்து வெளியே இழுத்து எடுத்தாலும் இதன் தூக்கம் கலைவதில்லை.

மஞ்சள் நிறமுடைய இப்பிராணியின் பெயர் கோபர் (Gopher) என்பதாகும்.

## பெட்ரோல் விரயத்தைத் தடுக்கும் மின் சக்திக்கார்

● ஒரு குறிப்பீட்ட வேகம் வரை மின் சக்தியால் இயங்கும்; அதற்குமேல் பெட்ரோலினால் ஓடும். இப்படி ஒரு காரை கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

அதற்கு அருகே ஒரு மின்சார மோட்டாரும் அதை இயக்க சுமார் 360 கிலோ எடையுள்ள மின்கலங்களும் இருக்கும்.

சாரதி அருகே அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சின்னஞ்சிறு கொம்பியூட்டர் இவைகளைக் கட்டுப்படுத்தும்.

எப்போது பெட்ரோலைக் கொண்டுஓட்டுவது, எப்போது மின் மோட்டாரைக்கொண்டு ஓட்டுவது, எப்போது இரண்டையும் பயன்படுத்தலாம் என்பதை தீர்மானிப்பது இந்த கொம்பியூட்டர்தான்.

இந்தக் காரில் 65 கிலோ மீட்டர் வரை மின் சக்தியை பயன்படுத்தலாம். அதற்கு மேலான வேகத்தில் செல்ல பெட்ரோல் என்ஜின் நல்லது.

நகரப்போக்குவரத்து நெரிசலில் மின்சக்தி மோட்டாரை பயன்படுத்துவதனால் பெட்ரோல் விரயம் தவிர்க்க முடிகிறது. ★

## சுருக்கமாக....

● உலகம் முழுவதும் 1500 வகையான சுருக்கெழுத்து (Short hand) முறைகள் உள்ளன.

நாம் இன்று பயன்படுத்தும் சுருக்கெழுத்து முறையைக் கண்டு பிடித்தவர் ஐசக் பிட்மன் ஆவார். ★

## பஞ்சாமிர்தம்

## விஞ்ஞானியின் விபரீத யோசனை!

● அந்த இளம் விஞ்ஞானிக்கு வயது பன்னிரெண்டு இருக்கும்.

ஒரு நாள் வானத்தின் காட்சி அவரிடம் ஓர் சிந்தனையைக் கிளறிவிட்டது.

வானத்தில் பறவைகள் பறந்து கொண்டிருந்தன.

இவற்றைக் கண்ட அந்த இளம் விஞ்ஞானி மனிதர்களும் ஏன் இப்படிப் பறக்கக்கூடாதா? என்று கேள்வியை தனக்குள் கேட்டுக் கொண்டார்.

விஞ்ஞானிக்கு அருமை நண்பனாக இருந்தவன் மைக்கல். அவனையே தம் பரிசோதனைக்குப் பயன்படுத்த எண்ணினார். காற்றைவிடவும் மனித உடல் லேசானால் தானே காற்றில் பறக்கமுடியும்?

இதற்காகச் சில ரசாயனப் பொருட்களை மைக்கலுக்கு கொடுத்து விழுங்கச் செய்தார். ஆனால் பலன் விபரீதமானது. வயிற்றில் ஏகப்பட்ட எரிச்சல் ஏற்பட்டு மைக்கல் கதறினான். இந்தக் கூச்சலைக் கேட்ட விஞ்ஞானியின் பெற்றோர்கள் ஓடி வந்தனர்.

மைக்கலின் ஆபத்தான நிலையை உணர்ந்து உடனேயே அதற்கு வேண்டிய சிகிச்சைகள் செய்ததால் அவன் உயிர் பிழைத்தான்.

இளம் விஞ்ஞானியின் தந்தைக்கோ மகனின் விபரீத போக்கால் மிகச் சீற்றமும், கவலையும் ஏற்பட்டது.

அதனால் மகனின் ஆய்வு கூடத்தை உடனே கலைத்து விட அவரிடம் கட்டளையிட்டார். விஞ்ஞானியின் ஆராய்ச்சியுள்ளம் இதற்கு எப்படி இணங்கும்? தந்தையின் கட்டளையால் பிஞ்சு உள்ளம் தடுமாறியது.

அப்போது அவரது தாய் அங்கு வர இளம் விஞ்ஞானி ''அம்மா இனி நான் இப்படிப்பட்ட விபரீத சோதனைகளை மனிதர்கள் மீது செய்ய மாட்டேன்'' என்று கெஞ்சினார்.

மகனின் ஆராய்ச்சி உள்ளத்தை புரிந்துகொண்ட தாய் அவனுக்காக தகப்பனாரிடம் பரிந்துரைத்தார். இதன் பின்பே விஞ்ஞானக் கூடம் பிழைத்தது.

மேற்படி விபரீத சோதனை செய்து தந்தையின் சீற்றத்துக்குள்ளான விஞ்ஞானி யார் தெரியுமா? தோமஸ் அல்வா எடிசன் தான்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதை கூறும் யோகங்கள்

## இந்துநாகரிகம்: பகவத்கீதை

ஜி. சி. ஈ. உயர்தர மாணவருக்குரியது

**- அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை -**

(பி. ஏ. இலங்கை, கல்வி டிப்ளோமா)




(சென்ற வாரத் தொடர்ச்சி)

### விஷாத யோகம்

பாரதப் போர் தொடங்குவதற்கு முன்பு, பாண்டவ கௌரவ சேனைகள் குருசேத்திரப் போர்க்களத்தில் அணிவகுத்து நிற்கின்றன. வில்வித்தையில் சிறந்தவனாகிய அருச்சுனன் தன் எதிரணியில் நிற்பவர்களைப் பார்க்கிறான். பாட்டனார் என்று சொல்லக்கூடிய பீஷ்மர், குருவாகிய துரோணர் சகோதர உறவு சொல்லத்தக்க கௌரவர்கள், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் - எல்லோரும் நிற்கிறார்கள்.

இவர்களை யெல்லாம் போர் செய்து கொல்லவேண்டுமா? இந்த இராச்சியத்தைப் பெறுவதற்காகவா இவர்களையெல்லாம் கொல்வது? அப்படிக்கொன்று இந்த இராச்சியத்தைப்பெற்றுத்தான்என்ன பயன்? இவர்கள் கொடியவர்களாக இருக்கலாம் அப்படியாக இருந்தாலும் அவர்களைத்தண்டிக்க நான் யார்? இவர்களையெல்லாம் கொன்றால்,அந்தப் பழி என்னைச் சூழாதா?'

இப்படிப்பல ஐய வினாக்கள் அருச்சுனனது உள்ளத்தில் எழுகின்றன. அவன் உள்ளத்தில் சஞ்சலம் என்ற பேய்க் காற்று சுழன்றடிக்கிறது. அருச்சுனனுக்கு ஏற்பட்ட இந்த மனக் குழப்பத்திற்கான அடிப்படையை விளக்கிக் கூறுவது பகவத் கீதையின் முதல் அதிகாரம். இது **விஷாதயோகம்** எனப்படும்.

சஞ்சலம் உற்ற அருச்சுனன், மனம்சோர்ந்து, உடல் தளர்வடைகிறான். இவ்வளவு பாவங்களைச் செய்து, இராச்சியத்தை அடைய வேண்டுமானால் எனக்கு இராச்சியமே வேண்டாம் என்கிறான். தனது வில்லாகிய காண்டீபத்தையும் நழுவ விடுகிறான், வீரனாகிய அருச்சுனன். இப்படிக் கோழையாகிவிட்ட அருச்சுனனுக்குஅந்த நேரத்தில் அவனது தேர்ப்பாகனாக இருந்த பகவான் கிருஷ்ணர் பகவத் கீதையை உபதேசிக்கிறார்.

### சாங்கிய யோகம்

மனச் சஞ்சலமுற்றுப் போர் புரிய மறுக்கும் அர்ச்சுனனுக்குப் பகவான் முதலில் சாங்கிய யோகத்தை அருளுகிறார். இதில் ஆன்மாவின் இயல்பு விளக்கிக் கூறப்படுகிறது.

''அர்ச்சுனா நீ எதிரிகளின் ஆன்மாவைப்பற்றி வருந்துகின்றாயா? அல்லது அவர்களின் உடலைப்பற்றி வருந்துகின்றாயா? இரண்டும் சரியல்ல. ஆன்மா என்றும் அழிவற்றது. அதற்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை. அதனை மனிதர்களோ, ஆயுதங்களோ துன்புறுத்தவும் முடியாது. அழிக்கவும் முடியாது. உண்மையில் மனிதன் என்பவன் உடலுக்குள் குடியிருக்கும் ஆன்மாவே. நாம் ஆடையை மாற்றி மாற்றி அணிவது போல, ஆன்மாவும் மாறி மாறி வெவ்வேறு உடல்களைத் தரித்துக் கொள்கிறது. உன்னை யாரும் கொல்லவும் முடியாது. நீ யாரையும் கொல்லவும் முடியாது. இறப்பது உடம்பே தவிர ஆன்மா அல்ல. ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டாம்.

''அறப்போரைக் காட்டிலும் உயர்ந்ததொரு நன்மை மன்னர்க்கில்லை. இத்தகைய போர் கிடைக்கப் பெறும் மன்னர் இன்பமுடையார்! எனவே போர் செய்வதற்கு நீ தயங்க வேண்டியதில்லை. நீ என்ன நோக்கத்திற்காக இந்தப் பூவுலகத்திற்கு வந்தாயோ, அந்த நோக்கத்தை நிறைவேற்று! சரீர சம்பந்தமான உறவுகளால் கோழையாகி, நீ உனது கடமையைச் செய்யப் பின்வாங்கினால் உன்னைப் பழிபாவங்கள் வந்து சூழும். வெற்றி பெற்றால் நீ அரச போகத்தை அடைவாய். கொல்லப்பட்டாலும் சுவர்க்க நிலை உனக்குக் கிட்டும்.

''பற்றுப்பாசங்களெல்லாம் உடலுக்கு உரியவை. அவை மனிதனைக் கோழையாக்குகின்றன. ஆன்மாவிற்கும் உடலுக்கும் இடையில் உள்ள உறவைச் சரியாகப் புரிந்து கொண்டவனே நிறைஞானி.

எவனொருவன் துன்பத்தினால் வருத்தமும் இன்பத்தினால் களிப்பும் கொள்ளாத நிலையை அடைகிறானோ அவனே நிறைஞானி. அவனே ஐம்புலன்களையும் அடக்கி ஆள வல்லவன். உலகை வெற்றி கொள்ளும் சக்தி அவனுக்கு உண்டு.

யோகத்தில் நின்று, பற்றை நீக்கி, வெற்றி தோல்விகளை நிகரெனக்கொண்டு தொழில் செய்! நடுநிலையே யோகம் எனப்படும். அச்செயலைச் செய்யும் பொழுது நாம் செய்யவேண்டியதைச் செய்கிறோம். அதுவும் ஈசுவரப் பிரீதியாகவே என்று எண்ணிச் செய். இதனால் ஆத்மஞானம் பெருகி, அதில் நிலைபெற்று நற்கதியடைவாய்'' என்கிறார்.

### கர்ம யோகம்

அடுத்து கர்மயோகத்தைப் போதிக்கிறார் பகவான்.

''கர்மயோகம் என்பது தன்னலமற்ற சேவை மார்க்கம். கர்மம் என்பது செயல். கர்மயோகம் என்பது முழுமையை அடைவதற்குச் செயலைக் கருவியாகக் கொள்ளுதல், ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு. அதை நாம் அனுபவித்தே தீரவேண்டும். ஆனால் பலனை எதிர்பார்த்துச்செய்யும்செயலே. எம்மை வந்தடையும்பற்றற்ற செயல் எம்மைத் தளைக்காது.

செயல் புரிதலே மனித இயற்கை. ஒருவரும் செயல் புரியாது இருக்கக்கூடாது. செயல் புரியாது இருப்பவனுக்கு அவனது உடலே ஒரு பாரமாகும். மூன்றுலகத்திலும் எனக்கு யாதொரு கடமையும் இல்லை. எனினும் நான் தொழிலிலேதான் இயங்குகின்றேன்.

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் அவரவர் நிலைக்கேற்ப கடமைகள் அமைந்துள்ளன. அவற்றை நாம் பலனை எதிர்பாரது செய்தல் வேண்டும். அர்ச்சுனா, நீ எதைச் செய்வதாக இருந்தாலும் அதை எனக்குக் காணிக்கை ஆக்கிவிடு! அதற்கும் உனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று எண்ணிக்கொள். இதே எண்ணத்துடன் சஞ்சலம் ஏதும் இன்றி யுத்தத்தில் இறங்கு!

''இறுதியில் ஒரு நிறைஞானி அடையும் லட்சியமும் ஒரு கர்மயோகி அடையும் லட்சியமும் ஒன்றே. கடமையை ஓர் இறைவழிபாடாகச் செய்பவனுக்கு இறுதியில்முத்திகிட்டும். எல்லாவற்றிலும் உயர்ந்தது ஆன்மா. அதை அறிந்து உறுதிப்படுத்திக் கொண்டு பகையை அழித்திட வீரத்துடன் எதிர்த்து நில்!'' என்கிறது கர்மயோகம்.

### ஞானகர்ம சந்யாச யோகம்

அடுத்து ஞானகர்ம சந்யாச யோகம் புகட்டப்படுகிறது. இது கீதை கூறும் நாலாவது யோகமாகும். இது கர்மத்தை மேலும் விளக்குகின்றது.

''கர்மம் செய்யும் பொழுது 'இதை நான் செய்கிறேன்' என்ற உணர்வு இன்றிச் செய்தால் அக்கர்மம் அகர்மம் ஆகின்றது. எவனொருவன் கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்கிறானோ, அவன் யோகி என்கிறார் பகவான்.

''ஆசையை அகற்றி, மனதையும் உடலையும் அடக்கி, வினைபுரியும்போது வெறும் உடலால் மட்டுமே செய்தால், கர்மம் செய்தவனைப் பாவம் சென்றடையாது. ஆசையோ பற்றோ கொள்ளாமல் செயற்படும் ஒருவனைத்தான் ஞானி என்று கூறுவார்கள்.

கர்மம் எல்லாம் முற்றிலும் ஞானத்தில் முடிவு பெறுகிறது. எனக்கு மிகவும் விருப்பமானவன் ஞானி. ஞானியும் நானும் ஒன்றே.

''எல்லா வினைகளையும் எரிக்கக்கூடிய நெருப்பு ஞானமே. நன்கு கொளுத்துண்ட தீ விறகுகளைச் சாம்பராக்கிவிடுதல் போலவே அர்ச்சுனா! ஞானத் தீ எல்லா வினைகளையும் சாம்பராக்கிவிடும். அகத்தில் பிறந்த ஐயங்களையெல்லாம் அறிவாயுதம் அறவே ஒழிக்கின்றது. பாவிகளில் மிகப் பெரிய பாவியைக்கூட எல்லாத் தடைகளையும் கடக்கச் செய்கிறது. ஞானத்தைப் போலத் தூய்மைப்படுத்தும் வேலையைச் செய்பவர் இப்பூவுலகில் எவரும் இல்லை' என்று கூறும் பகவான் ஞானத்தை அடையும் வழியையும் கூறுகிறார். பயிற்சியினால் ஞானம் கிட்டும். மன அமைதி தன்னடக்கம் துறவு மனம் மேற்கொள்ளுதல், பொறுமை மனத்தை ஒருமுகப்படுத்துதல், நம்பிக்கை ஆகிய பண்புகளை வளர்த்தலே அதற்கு வழி. அர்ச்சுனா ஞானத்தால் சந்தேகம் என்ற மாயையை அறுத்தெறிந்துவிட்டு யோக நிலை அடை. மனத்தெளிவுடன் எழுந்து நில்! என்று உபதேசித்த கண்ணன் பின்பு தனது அவதார தத்துவத்தையும் அர்ச்சுனனுக்கு விளக்குகிறார்.

''எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்துபோய், அதர்மம் எழுச்சிபெறுமோ அப்பொழுதெல்லாம் நான் என்னைப் பிறப்பித்துக் கொள்ளுகிறேன். நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகம் தோறும் பிறக்கிறேன்.

### சந்யாச யோகம்

பகவத்கீதையின் ஐந்தாவது யோகம் சந்யாசயோகம்

இதில் பகவான் கூறுவது: ''கர்மயோகமின்றி ஞான யோகத்தைப் பெற இயலாது. சுக துக்கங்களைப் பொருட்படுத்தாமல் கர்மயோகத்தையே தழுவியிருந்தால் பலனைக் கடுகப்பெறலாம். எல்லா ஆத்மாக்களும் ஒரே மாதிரியானவை. கண்ணுக்குத் தெரியும் வேறுபாடுகளெல்லாம் தேக சம்பந்தத்தால் வந்தவை என்ற உணர்வு வேண்டும்.

(மிகுதி அடுத்த வாரம்)

## அறிவியல் வினா-விடை

கோயில் மதில் சுவர்களில் வளரும் மரம் செடிகளுக்கு உணவும் நீரும் எப்படிக் கிடைக்கப் பெறுகின்றன?

கோவில் மதில் சுவர்களில் வளரும் மரம் செடிகளுக்குத் தேவையான உணவை ஒளிச் சேர்க்கையில் மூலம் தயாரித்துக் கொள்கின்றன. தேவையான நீரை வளிமண்டலத்தில் இருந்து பெற்றுக்கொள்கின்றன. ★

## உங்களுக்குத் தெரியுமா?

● மாடுகளின் வயதை அதன் பற்களைப் பிடித்து கணக்கிடுவது போல, கலைமான்களின் வயதை அதன் கொம்புகளை வைத்து கணக்கிடுகிறார்கள்.

● கோழி முட்டைக்குள் வெள்ளை, மஞ்சள் ஆகிய இரு பகுதிகள் உள்ளன அல்லவா? அதிலே கோழிக் குஞ்சாக மாறுவது வெள்ளையாக இருக்கும் பகுதிதான். முட்டைக்கரு மஞ்சள் பகுதியைத் தனக்கு உணவாக உட்கொண்டு வளர்கிறது.

● நமக்குக் கிடைக்கும் வெப்பத்தின் பெரும் பகுதி பூமிக்குள்ளிலிருந்து வெளிவருவதுதான். அந்த வெப்பம் மேலே கிளம்பிப்போக விடாமல் தடுப்பது பூமி மீது நிற்கும் காற்றுமண்டலமாகும்.

● தலைமுடியின் குறுக்கு வெட்டுத்தோற்றம் தட்டையாக இருந்தால் முடி சுருளாக இருக்கும். ★

# கடல் காகம் எங்கே கூடு கட்டுகிறது?

பறவைகளிலேயே நீரில் நீந்தாமல், மிதந்தவாறே மீனைப் பிடித்துத் தின்னும் பறவை கடல் காகம்தான்.

இது நிலத்தில் வாழும் கருநிறக் காக்கை உருவத்திலும், புறா உருவத்திலும், கருநிறத்தில் முதுகை உடைய பெரிய கழுகு உருவத்திலும் காணப்படுகின்றது.

இந்தப் பறவைகள் உணவு தேடும் விதம் அதிசயமானது.

கடலில் உள்ள மீன்கள், கரையோரமாகக் காணப்படுகின்ற புழு, பூச்சிகள், அழுகிக்கிடக்கிற நத்தைகள்தான் இவைகளின் உணவு.

ஆனால் கருநிறத்தில் முதுகை உடைய பெரிய கழுகு மட்டும், முயல் போன்ற விலங்குகளைத் தன் கூர்மையான அலகினால் கொத்தித் தின்னுகிறது.

இந்த விலங்கினங்கள் அதற்குக்கிடைக்கவில்லை என்றால் அது ஒரு தந்திரத்தைக் கையாளுகிறது.

கடல் காக்கையோ கடல் குருவிகளோ உணவைத்தேடி பறந்து செல்லும்போது, இந்தக் கழுகும் அவைகளைப் பின் தொடர்கிறது.

கடல் ஓரங்களிலும், சதுப்பு நிலங்களிலும் உள்ள புழு, பூச்சிகளை அந்தக் குருவியும், காகமும் கிளறி அவற்றைத் தன் அலகில் கௌவும்போது குபீரென்று அந்தக் கழுகு அவைகளிடமுள்ள புழு, பூச்சிகளைப் பிடுங்கிக்கொண்டு போய்விடுகிறது.

இந்தத் தந்திரமும் அதற்குப் பலிக்கவில்லை என்றால், கூட்டில் உள்ள பிற கடல் காகக்குஞ்சுகளையே தன் அலகினால் கொத்தித் தின்னுகிறது.

'கடல் காகம் தன் கூட்டை எங்கே கட்டுகிறது?'

கடல் ஓரமாக உள்ள மலைகளிலும் 'பெருசிலி' போன்ற பாலை வனங்களிலும், பனிப்பிரதேசத்திலும் இவை கூடு கட்டுகின்றன.

இந்தப் பனிப்பிரதேசத்தில் கூடு கட்டுகின்ற காக்கையின் மேனி முழுவதும் வெண்மை பளிச்சிடும்.

இந்த இனப் பறவைகள் அங்கு கிடக்கிற ஐஸ்கட்டிகளைக் கொண்டே கூடு கட்டுகின்றன. அந்தக் கூடு பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும்.

பாலைவனத்தில் கூடுகட்டுகின்ற கடல் காக்கையின் மேனி முழுவதும் சாம்பல் நிறம் பளிச்சிடும். இது கடும் வெயில் வேளையில் தான், தன் அலகினாலும் கால்களாலும் பாலைவனத்தில் பள்ளம் தோண்டி அதில் முட்டையிடுகிறது.

அந்த முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சுகளால் கடும் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலை உருவானால், தாய்ப்பறவை நின்றவாறே தன் இறக்கைகளை விரித்துக் குஞ்சுகளுக்கு நிழல் கொடுக்கும்.

கடல் காகங்களின் குஞ்சுகள், தன் பெற்றோர்களிடம் உணவு கேட்கும் விதம் அதிசயமானது!

பொதுவாகக் குஞ்சுகளின் பார்வைக்குச் சிவப்பான பொருள்கள்தான் மிகத் தெளிவாகத் தெரியும். கடல் காக்கையின் அலகு மஞ்சள் நிறத்திலிருக்கும். அதில் சிவப்புப் புள்ளி மிளிரும். தாய்ப் பறவை கூட்டிற்கு வந்தவுடன், குஞ்சுகள் அதன் அலகில் உள்ள சிவப்புப்புள்ளி இருக்குமிடத்தில் தன் சிறிய அலகினால் மாறி மாறிக் கொத்தி உணவை ஊட்டச் சொல்லிக் கேட்கும். பின் தாய்ப்பறவை தான் சேகரித்து வந்த உணவை உற்சாகமாகக் குஞ்சுகளுக்கு ஊட்டும்' ★

# தவறை ஒப்புக்கொண்ட காந்திஜி

காந்திஜியின் சேவா கிராம ஆசிரமத்தில் பசுக்களைப் பராமரிக்கும் பொறுப்பு பல்வந்த்சின்கா என்ற ஆசிரமவாசியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

நாளுக்கு நாள் பசுக்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்ததும், பல்வந்த்சின்கா காந்திஜியிடம் பெரிய அளவில் ஒரு பசுத்தொழுவம் கட்ட வேண்டும் என்று கூறினார்.

ஆனால் காந்திஜியோ, 'மக்களிடம் இருந்து வாங்கும் பணத்தில் தான் இந்த ஆசிரமத்தை நடத்தி வருகிறோம். எனவே அநாவசியமாகவோ ஆடம்பரமாகவோ எந்தச் செலவும் செய்வது தவறு. அதனால் தற்போது இருக்கும் தொழுவத்தைச் சரி செய்து பயன்படுத்துங்கள்' என்று கூறிவிட்டார்.

அடுத்த ஒரு சில நாட்களில் பெரும் மழையும் புயல் காற்றும் வீசியதால் பசுத்தொழுவம் முழுவதும் நீர் நிறைந்து விட்டதுடன், மேற்கூரை பல இடங்களில் ஒழுக ஆரம்பித்து, இதனால் பசுக்களும் கன்றுகளும் ஈரத்தில் நனைந்து குளிரால் நடுங்கின.

இதைப் பார்த்த பல்வந்த்சின்காவுக்கு அளவற்ற வருத்தமும், கோபமும் ஏற்பட்டு விட்டது. உடனடியாகக் காந்திஜிக்கு காரசாரமாக ஒரு கடிதம் எழுதி விட்டார்.

'பாபுஜி...! உங்களைப் போன்றவர்களைக் கவனிக்க ஆயிரம் தொண்டர்கள் இருக்கிறார்கள். தாங்கள் ஒழுகாத கூரைக்கு அடியில் நிம்மதியாக இருக்கிறீர்கள். ஆனால் இங்கு பசுக்களும் அவற்றின் கன்றுகளும் மழையில் நனைந்து குளிரால் நடுங்கி செத்துக் கொண்டிருக்கின்றன. என் யோசனைப்படி புதுத்தொழுவம் கட்டி இருந்தால் வாயில்லாத இந்த ஜீவன்கள் இப்படி வேதனை அனுபவித்து இருக்காது.

இக்கடிதத்தைக் கண்ட காந்திஜிக்கு அளவிட முடியாத மனவருத்தம் ஏற்பட்டது. 'மகாத்மாவாகி விட்ட எனக்கு எல்லா சௌகரியங்களும் கிடைத்து வருகின்றன. அதனால்தான் பசுக்களின் சிரமத்தை அறியாமல் இருந்து விட்டேன். நான் பெரிய தவறு செய்து விட்டேன். இந்த விஷயத்தில் சின்கா சொன்னதுதான் சரி'.

-என்று தன் தவறுக்காக வருந்திய காந்திஜி மறுநாளே ஒரு பொறியியலாளரை அனுப்பி உடனடியாகப் புதுத் தொழுவம் கட்ட ஏற்பாடு செய்தார். ★




# பெண் இனத்தின் விடுதலையே மானுடத்தின் விடியல்!

பெண் ஆணுக்குச் சமமானவள்; ஆணுக்குரிய உரிமைகள் அனைத்தும் பெண்ணிற்கும் உண்டு; அவள் சுதந்திரமாகச் செயல்பட முடியும்; அவளுக்கும் அறிவு, ஆற்றல், ஆளுமைத்திறன் உண்டு; வீட்டைப் பற்றிய அக்கறையோடு நாட்டைப் பற்றிய அக்கறையும் அவளுக்குண்டு.

அவள் வீட்டில் மட்டுமன்றி வெளியிலும் திறம்படச் செயல்பட முடியும் - செயல்பட வேண்டும் என்ற பெண் பற்றிய கோட்பாடுகளை இச்சமூகம் புரிந்து செயல்பட இன்னும் நாம் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும்.

அதற்கான காலம் இதுவே; அதற்கான நாளும் இன்றே.

பெண்ணைப் பெண்ணாக மதித்துச் செயல்படும்போது தான் மண்ணில் புதைந்திருக்கும் வித்து மண்ணைக் கீறிக் கொண்டு வெளிவருவது போல், அர்த்தமற்ற மரபுவழிச் சிந்தனைத்தளையை உடைத்தெறிந்து அவள் நிமிர்ந்து நிற்க முடியும்.

அவள் நிமிர்ந்து நிற்கும் போது மானுடமும் நிமிர்ந்து நிற்கும்.

அப்போது அது பெண்ணினத்தின் விடியலாக மட்டுமன்றி மானுடத்தின் விடியலாக இருக்கும்.

பெண்ணுரிமை இயக்கங்கள் உலகெங்கும் உரிமைக் குரல் கொடுத்தும் மாற்றம் நத்தை வேகத்தில் தான் நிகழ்கிறது என்பது அவலத்துக்குரிய விஷயம்.

அனைத்துலகப் பெண்களும் கல்வி நிறுவனங்களும் ஆங்காங்கே முனைந்து நின்று செயல்பட்டாலொழிய விடிவெள்ளி, பெண்ணினத்திற்கு இல்லை.

சமத்துவம் மலர வேகத்தோடு செயல்படுவோம்.

விடியலைக்காண வாருங்கள்.

பெண்களே, உங்களுக்கு ஒன்று சொல்கிறோம். அடிமைத்தளை நீங்க. நீங்கள் தான் முதலில் விழிப்படைய வேண்டும்.

சுதந்திரமாய்ச் சிறகடித்துப் பறக்க நீங்கள் வெளியுலகத்திற்கு வாருங்கள்.

பெண்களே வெளிச்சத்திற்கு வாருங்கள். ★

## சமையல் செய்வோம்

### கொக்கோ பிஸ்கட்

**தேவையான பொருட்கள்:**

1½ சுண்டு (தலைதட்டி) கோதுமை மா
1½ சுண்டு மாவாக்கிய சீனி.
5/1 கிராம் மாஜரின்
சிறிது பால்
3 தேக்கரண்டி (தலைதட்டி) கொக்கோபவுடர்.

**செய்முறை:**


மா, சீனி, மாஜரின் ஆகிய ஒவ்வொன்றையும் இரு சம பங்குகளாகப் பிரித்துக் கொள்க. ஒரு பங்கு மாவுடன் கொக்கோ பவுடரைக் கலந்து அரித்து வைக்கவும்.

ஒரு பங்கு மாஜரின், சீனி என்பவற்றை ஒன்றாகப் போட்டு கரகரப்பில்லாமல் நன்றாகக் கடைந்து இதில் தனியாகவுள்ள மாவைப் போட்டுக் குழைக்கவும். குழைக்கும் போது இடைஇடையே 4-6 தடவைகள் கையைத் தண்ணீரில் நனைத்து மாவை பசுந்தாகத் தேய்த்துக் குழைக்குக. ஒரு மா பூசிய பலகையின் மீது போட்டு உருளையினால் உருட்டி ¼ அங்குல கனதியில் நீள்சதுரமாக உருட்டி எடுக்கவும்.

மிகுதியாகவுள்ள மாஜரின், சீனி என்பவற்றைக் கரகரப்பில்லாமல் நன்றாகக் கடைந்து இதில் கொக்கோ பவுடர் கலந்த மாவைப்போட்டு முன்பு செய்த அதேவிதமாகக் குழைத்து எடுத்துத் தட்டில் போட்டு உருட்டி ¼ அங்குல கனதியில் முன்பு செய்த அதே அளவாக நீள்சதுரமாக வெட்டி எடுக்கவும். இனி முதல் வெட்டி எடுத்த நீள்சதுரத்தின் மேல்புறத்திற்கு சிறிது பாலைப் பூசி இதன்மேல் இரண்டாவதாக உருட்டி வைத்த நீள் சதுரத்தை சரிவரப் பொருத்தி இரண்டையும் சேர்த்து நேர்த்தியாகச் சுருட்டி ½ அங்குல கனதியுள்ள வட்ட பிஸ்கற்றுகளாக குறுக்கே வெட்டி மாஜரின் பூசிய தட்டில் இடைவெளிவிட்டு அடுக்கி பொன்னிறமாக வரும்வரை 'பேக்' பண்ணவும்.

- தேவி -

## மாதம் ஒரு கோலம்



இக்கோலம் தளவிரிப்புக் கோலம் ஆகும். இதனைப் பொதுவாக எல்லா வைபவங்களுக்கும் போடலாம். இதனை மாத்தூவி மாக் கரைத்து அல்லது மாவினால் அடைத்தும் போடலாம். மாதூவி அடைப்பதானால் வெள்ளை மாவும் செங்கல் பொடியையும் தூவி அடைக்கவும். புள்ளி இட்ட பகுதிக்கு ஒரு நிறமும் புள்ளி இடாத பகுதிக்கு இன்னொரு நிறமுமாகப் போட்டுக் கொள்ளவும். புள்ளி வைப்பது முதலில் 19 புள்ளிகள் நேராக 3 நிரைக்கு வைத்துப் பின்னர் இருபக்கத்திலும் 2 புள்ளிகளை விட்டு நேராக 2 நிரைக்குப் புள்ளியை வைக்கவும். திரும்பவும் இருபக்கத்திலும் 2 புள்ளிகளை விட்டு நேராக 2 நிரைக்கு புள்ளியை வைக்கவும். இப்படியே 3 புள்ளி 2 நிரைக்கு வைத்ததும் நிறுத்தவும். இதே போன்று மேற்பக்கமும் புள்ளியைப் போட்டுக் கோலத்தை இணைத்துக் கொள்ளவும்.

— திருமதி
நா. சோமசுந்தரக்குருக்கள்

**நங்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுலகுக்கு பெருமை சேர்க்க 'தமிழ்த் தாத்தா' படம் தயாரிப்பு

யார் இந்த 'தமிழ்த் தாத்தா'?

1887 ஆம் ஆண்டு - ஆவணித் திங்கள் - ஆவணி அவிட்டநாள் கும்பகோணம் கல்லூரியில் ஒருவாரம் விடுமுறை.

அதனைப் பயனுள்ளதாக்க விரும்பினார் ஒரு பெரியவர்.

நெல்லைப் பகுதிகளில் பரம்பரை வித்துவான் வீடுகளில் 'பத்துப்பாட்டு' ஏடுகளைத் தேடலாம் என்று எண்ணினார்.

தந்தையார் தடுத்தும் அவர் கேட்கவில்லை.

'பத்துப்பாட்டு தான் எனக்குப் பெரிது' என்று மனதில் எண்ணியவராய் தந்தையிடம் தக்க சமாதானம் சொல்லிப் பயணத்தைத் தொடங்கினார்.

ரயில் நிலையத்துக்கு ஒற்றை மாட்டுவண்டியில் போகும்போது, வண்டி குடை சாய்ந்தது; கீழே விழுந்தார் அப்பெரியவர். அவர் மேல் தகரப்பெட்டி. அப்போதும் மனம் தளரவில்லை.

எப்படியோ ரயிலில் ஏறிவிட்டார். தஞ்சையைத் தாண்டியது வண்டி. காட்டு வழியில் நின்றது.

கீழே இறங்கி வேறு பெட்டியில் ஏறுங்கள்'-என்றார் அதிகாரி.

முன்னால் இருந்த ரயில் பெட்டி தீப்பற்றிக் கொண்டதால் இந்த ஏற்பாடு என்பது பின்னர்தான் தெரியவந்தது.

அந்தப் பெரியவர் ஒருவழியாக நெல்லை போய்ச் சேர்ந்தார்.

இப்படி எல்லாம் சொல்லொணாத் துயரங்களை எல்லாம் பொருட்படுத்தாமல் ஏடுகளைத் தேடி, அழியவிருந்த தமிழ் இலக்கியக் கருவூலங்களை அழியாமல் பாதுகாத்துத் தமிழுலகுக்கு



உ. வே. சாமிநாதஐயர்

வழங்கிய அத் 'தமிழ்த் தாத்தா' உ. வே. சாமிநாத ஐயரைத் தவிர வேறு யாராக இருக்கமுடியுமா?

இத்தமிழ்த் தாத்தாவின் வாழ்க்கை வரலாறு திரைப் படமாகத் தயாரிக்கும் பணி ஆரம்பமாகிவிட்டது.

இப்படத்தைத் தயாரித்து வருபவர் தென்னிந்தியத் திரைப்பட இயக்குநரான திரு. ஏ. ஜகந்நாதன்.

படத்தின் தலைப்பே 'தமிழ்த்தாத்தா'

இந்தியப் பயணத்தில் இருபது லட்சம் ரூபா செலவில் சுமார் 2½ மணி நேரம் ஓடும் இந்தப் படத்தில் நடிப்பதற்கான நடிகர், நடிகைகள் யாவரும் இதுவரை தேர்ந்தெடுக்கப்படவில்லை.

படத்தயாரிப்பு பற்றி திரு. ஜகந்நாதன் கூறுவதாவது;

பழந்தமிழ் இலக்கிய நூல்களின் ஓலைச் சுவடிகளை கண்டெடுப்பதற்காக உ. வே. சாமிநாத ஐயர் கஷ்டப்பட்டு அலைந்த இடங்களுக்குச் சென்று தகவல்கள் திரட்டப் பட்டுள்ளன.

அவருடன் பழகி இன்னும் உயிருடனிருப்பவர்கள், அவரது வழித்தோன்றல்கள் மாணவர்கள் என்று பல்வேறு தரப்பினரைச் சந்தித்தும், செய்திகள் சேகரிக்கப் பட்டும் உள்ளன.

உ. வே. சா. எழுதிய 'என் சரித்திரம்', அவரது மாணவரான வித்துவான் கி. வா. ஜகந்நாதன் எழுதிய 'என் ஆசிரியர் பிரான்' போன்ற பல்வேறு நூல்களில் கிடைத்த செய்திகளை வைத்துக்கொண்டு சுமார் ஓராண்டு காலமாக உருவாக்கப்பட்டது இந்தத் திரைப்படத்தின் கதை, உரையாடல் ஆகும்.

இசைக்கு முக்கியத்துவம் அளித்து சாதாரண மக்களும் ரசிக்கும் வகையில் இப்படம் உருவாகும்.

உ. வே. சா சங்கீத ஞானம் உள்ளவர்.

இந்தப் படத்துக்காக உ. வே. சா பிறந்த ஊரான சூரியமூலை (தஞ்சைமாவட்டம்) உத்தமதானபுரம், கும்பகோணம், பட்டீஸ்வரம், மதுரை, மிதிலைப் பட்டி, திருவாவடுதுறை, தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் மடங்கள் உட்பட பல இடங்களுக்குச் சென்று தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

படத்தின் கதை, உரையாடல் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தொண்டாற்றியவரின் படம் என்பதால் மாநில, மத்திய அரசுகள் சலுகை அளிக்கும் என்று நம்புவதாக திரு. ஜகந்நாதன் குறிப்பிட்டார்.

உ. வே. சாமிநாத ஐயரின் 136 ஆவது பிறந்த தினம் சென்ற மாதம் 19 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அப்போது முன்கண்ட தகவல்கள் வெளியாகின.

(எ-4)

வெள்ளித்திரையில்

# 'இரும்புத்திரை' நாடுகளில் 'வெள்ளித்திரை'யின் வளர்ச்சி

கம்யூனிச நாடுகள் இதுவரை இரும்புத்திரை நாடுகளாக கருதப்பட்டு வந்தன.

அந்த நாடுகளில் நடைபெற்று வந்த சம்பவங்கள் வெளியே தெரியாமல் இருந்து வந்தன.

கம்யூனிஸ்ட் ஆட்சி கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்று வந்ததே இதற்குக் காரணம்.

கடந்த ஆண்டு கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டது.

ஜனநாயகம் மற்றும் சிந்தனைச் சுதந்திரம் வேண்டும் என்று மக்கள் கிளர்தெழுந்தனர்; வெற்றியும் கண்டனர்.

இரும்புத்திரை கிழித்தெறியப்பட்டது. ஏனைய நாடுகளுடன் தங்கள் நாடுகளிலான வருங்காலத் தொடர்புகள் பற்றி கலந்துரையாடுவதில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

அரசியல் ரீதியில் தொடர்புகளை மேற்கத்திய நாடுகளுடன் ஏற்படுத்தக் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முன்வந்துள்ளன.

கலாசார ரீதியிலும் தொடர்புகளைப் பலப்படுத்த இந்த நாடுகள் முயற்சிக்கின்றன.

திரைப்பட வளர்ச்சியிலும் மேற்கு நாடுகளின் ஆலோசனைகளைப் பெறுவதில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டு உள்ளன.

40 ஆவது பெர்லின் சர்வதேச திரைப்படவிழா இந்த ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி இடம் பெற்றது. அச்சந்தர்ப்பத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் திரைப்பட வளர்ச்சித்துறை அதிகாரிகள் மேற்கு நாடுகளின் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

உலக திரைப்பட வளர்ச்சியில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் பங்கு ஏற்பது குறித்து அப்போது ஆராயப்பட்டது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்பட்டு வந்த திரைப்படங்களை உலகின் ஏனைய பகுதி மக்கள் கண்டு களிக்கும் சந்தர்ப்பம் முன்னர் கிடைக்கவில்லை.

ஹொலிவூட்படங்களையே பார்த்துக் களைத்துப்போன கண்களுக்கு 'இரும்புத்திரை'க்குப் பின்னால் இருந்த நாடுகளின் திரைப்பட வளர்ச்சியைக் காணும் வாய்ப்பு இனிக் கிடைக்கப் போகின்றது.

உலக திரைப்படச் சந்தையைக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இனிப் பயன்படுத்த உள்ளன.

ஹொலிவூட் படங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வாழும் மக்களுக்குக் கிடைக்கவுள்ளன. ★

## இன்றைய தமிழ் சினிமாவில்..

1935 ஆம் ஆண்டு நடிக்க ஆரம்பித்தவர்தான் பிரபல வில்லன் நடிகர் எம். என். நம்பியார்.

54 ஆம் ஆண்டுகளில் 750க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து, இன்று தொடர்ந்து நடித்து வரும் நம்பியாருக்கு 70 வயதாகி விட்டது.

அவர் சினிமா பற்றிக் கூறுவதை வாசியுங்கள்.

''சினிமா பெரிய ஓர் ஆயுதம். அதனால் நல்லதும் செய்யலாம், கெட்டதும் செய்யலாம்.

ஆரம்பத்தில் நன்றாகப் பாடத் தெரிந்தவர்கள்தான் நடிக்க முடியும். பின்னர் நல்லாகப் பேசத் தெரிந்தவர்கள் தான் நடிக்கமுடியும் என்ற நிலைஏற்பட்டது.

இப்போது அந்தப் பிரச்சினையே கிடையாது.


பாடத் தெரியாதவர், பேசத் தெரியாதவர் எல்லாம் இப்போது நடிக்கக் கூடியதாயிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் பின்னணிக் கலைஞர்கள் இருக்கிறார்கள் அல்லவா!

இப்படிக் கூறினார் நம்பியார். (எ-4)

★ நம்பிக்கை
★ நாணயத்தின்
★ சின்னம் ⟶ ஷப்ரா

நிலையான முதலிடுகள்
கீழ்க்கண்ட வட்டி வீதங்களில் வரவேற்கப்படுகின்றன.




நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 8,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.492 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி | | | |
| " செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,879 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

பணிப்பாளர் சபை:

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B (Lond) முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்
A. I. B. (Lond) பொதுமுகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

மேலதிக விபரங்களுக்கு:-

ஷப்ரா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி இல. 589310 & 500570

★ இன்றைய சேமிப்பு நாளைய சந்ததியின் பாதுகாப்பு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவித்துளி

### நிறையும் நினைவுகள்!

நாட்காட்டித்தாள்கள்
குறைந்து போக ...
நெஞ்சில்
நினைவுகள் ஏனோ
நிறைந்து போகின்றது.

- கே. தாஸ்

### கவிஞன் உள்ளம்

தமிழ்வானம் பொழிகின்ற
கவியாகுவேன் – அந்த
அமிழ்தான கவிபாடி
அலைமோதுவேன்.

மயிலோடும் மானோடும்
உறவாடுவேன் – நான்
குயிலோடும் கிளியோடும்
குழைந்தாடுவேன்.

மொட்டாகிச் சிரிக்கின்ற
மலராகுவேன் – முடிவில்
மட்டாகி மலர்தோறும்
மருந்தாகுவேன்.
(மட்டு – தேன்)

பாலோடு தேன்சேர்ந்த
பழ மாகுவேன் - தமிழ்
நூலோடு நுகர்கின்ற
சுவையாகுவேன்.

சங்கோசை தருகின்ற
தமிழாகுவேன் – நீலப்
பொங்கோதக் கடல்பேசும்
மொழியாகுவேன்.

இசையாளர் அமைக்கின்ற
இசையாகுவேன் என்றன்
தசையோடு நரம்போடும்
தமிழ் பேசுவேன்.

பொட்டோடு பூச்சூடும்
பெண்ணாகுவேன் உயர்ந்த
பட்டோடு பணிபூணும்
தயாகு வேன்.

விரலோடு விளையாடும்
பண்ணாகுவேன் – வீணைக்
குரலோடு வருகின்ற
குயி லாகுவேன்.

பணிவான தந்தைக்கு
மகனாகுவேன் – மேலும்
கனிவான அன்னைக்கு
மகவாகுவேன்.

கட்டேதும் இல்லாத
காற்றாகுவேன் – வானில்
சிட்டாகப் பறந்தோடி
சிறை மீறுவேன்.

- சிங்கை ஆழியான்

# 'மனந்திரும்பி விசுவாசியுங்கள்'; இறைவனின் அழைப்பு இதுவே!

எங்கும் உள்ள எல்லா ஆத்மாக்களையும், அன்பான மனதுள்ள கடவுள், மென்மையான வார்த்தைகளால் கூப்பிடுகிறார்.

தமது வசனத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும், தமது ஊழியர்கள் மூலமாயும், வாழ்க்கையின் கடினமான சம்பவங்களினாலும், துக்க நிகழ்ச்சிகளினாலும், அவர் நம்மை அழைக்கிறார்.

இந்த அழைப்புகள் எப்பொழுதாவது வரலாம், எங்கேயாவது வரலாம், ஆனால், அவைகள் ஏதோ ஒரு நேரத்தில் ஏதோ ஒரு இடத்தில் நிச்சயமாக வரும்.

மனிதனுக்கு விடும் அழைப்பைக் கடவுள் சுருக்கமாக 'வா' என்று ஒரு வார்த்தையில் அடக்கியிருக்கிறார்.

'வந்து பானம் பண்ணுங்கள்', 'வந்து புசியுங்கள்', 'வந்து இளைப்பாறுங்கள்', கடைசியாக 'வீட்டிற்கு வாருங்கள்' என்பதை நாம் கேட்கிறோம்.

இந்த 'வா' என்னும் வார்த்தை எல்லாத் தலைமுறைகளுக்கும், எல்லா இடத்திற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் சில வேளைகளில் சில இடத்தில் இதை நமக்கென்று பிரத்தியேகமாய்க் கேட்கிறோம்.



நாம் கேட்கும் முதல் அழைப்பு 'மனந்திரும்பு' என்பதுதான். 'மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்' மாற்கு 1 : 15, என்று சொல்லி இயேசு தம்முடைய ஊழியத்தை ஆரம்பித்தார்.

அவர் நம்மைப் பாவ ஜீவியத்திலிருந்தும், நிர் விசாரமான ஆசைகளிலிருந்தும், மாமிசத்தின் கிரியைகளிலிருந்தும் அழைக்கிறார்.

கடவுள் நமது ஆத்மாவுக்கு விடும் அழைப்பை எண்ணவும் விபரிக்கவும் முடியாதபடி, நாம் சந்தேகமின்றி உணருகிறோம்.

நமது மனதில் நாம் பரிதாபகரமாகக் கைவிடப்பட்டோம், என்றும் தனித்து விடப்பட்டவர்களாய் இருக்கிறோம், என்ற விபரிக்கமுடியாத ஓர் ஆசை நம்மை இழுப்பதையும், பூரணப்படாதவர் என்பதையும் நாம் உணருகிறோம்.

அருமையானவர்களே......! இந்த அழைப்பு உங்கள் காதில் கேட்கிறதா...? 'இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதிருங்கள்'. எபி. 3 : 7 – 8

உன்னுடைய வெறுமையான விருப்பமுள்ள ஆத்மாவைத் திருப்தி செய்ய, தம்முடைய கரங்களை நீட்டி உன்னை ஏற்றுக்கொள்ளக் காத்திருக்கும் கர்த்தராகிய இயேசுவண்டை இப்போதே வா.

'உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள், கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்மா பிழைக்கும்.' ஏசா 55 : 3.

உன்னுடைய வசதியான காலத்திற்காகக் காத்திருக்க வேண்டாம். ஏனென்றால், நாளைக்கு என்று காத்திருக்கும் நாள் நமக்கு இல்லாமல் போய்விடும்.

★

# இறந்த மனிதனின் தோலைப் பயன்படுத்தும் புதியவழி!

பல்வேறு விலங்குகளின் தோலானது மனிதனுக்கு எவ்வளவோ வகையில் பயன்படுகிறது.

ஆனால் மனிதன் இறந்தால் அவன் தோல் எதற்கும் லாயக்கில்லை.

இப்போது மனிதன் இறந்தால் அவனது தோலைப் பயன்படுத்த பிரிட்டிஷ் டாக்டர் ஒருவர் வழி கண்டுபிடித்திருக்கிறார்.

இறந்த ஒருவரின் தோலை 48 மணி நேரத்துக்குள்ளாக எடுத்தால், கடும் தீப்புண் காயங்களினால் பாதிக்கப்பட்டவருக்குப் பயன்படுத்த முடியும் என்று ரோய் சாண்டர்ஸ் என்னும் டாக்டர் கூறியிருக்கிறார்.

கடும் தீப்புண் காயங்களால் பாதிக்கப்பட்டவருக்குத் தோல் வெந்துபோன இடத்தில் ஒட்டுவதற்கு இப்போது அவரது தோலே பயன்படுத்தப்படுகிறது.

அதாவது வேறு பகுதியில் இருந்து ஆரோக்கியமான தோல் எடுக்கப்பட்டு, தோல் வெந்த இடத்தில் ஒட்டப்படுகிறது.

எனவே தோல் ஒட்டுவது என்பது புதிதல்ல. ஆனால் உயிரிழந்தவரின் தோலை ஒட்டுவதுதான் புதிது.

தீப்புண் காயமடைந்தவரது தோலையே ஒட்டும் போது இடையிடையே உயிரிழந்த ஒருவரின் தோலையும் வைத்துப் பொருத்துவதற்கான முறையை இப்போது டாக்டர் சாண்டர்ஸ் உருவாக்கியுள்ளார்.

சம்பந்தப்பட்டவரின் உடல் அந்நியத் தோலை நிராகரிக்க முற்படுவதைத் தடுக்க அவருக்கு சைக்கிளோஸ்பிரின் (Cyclosprin) கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

சைக்கிளோஸ்பிரின் பாதகமான விளைவுகளை உண்டாக்கக் கூடியது என்பதால் ஒரு நோயாளிக்கு 3 மாதத்துக்கு மேல் இதை அளிக்க முடியாது. ஆனால் தீப்புண்களைக் கொண்ட ஒருவர் குணமடையப் பொதுவில் 3 மாத காலம் போதுமானது. இதற்குள்ளாகத் தோல் வளர ஆரம்பித்து விடுகிறது.

(எ – 4)




## நீரிழிவைக் கட்டுப்படுத்தும் வெந்தயக் கஞ்சி!

கேள்வி: நீரிழிவு நோயை வீட்டு வைத்தியத்தால் குணப்படுத்தமுடியுமா?

பதில்:– வெந்தயம் நீரழிவை கட்டுப்படுத்தக் கூடியது. இன்சுலின் ஊசி போட்டுக்கொள்கிறவர்களுக்கும் பயன்தருகிறது. வெந்தயம் மோருடன் சேர்த்து உட்கொண்டால் இன்சுலின் அளவைக் குறைத்து உபயோகிக்கலாம்.

வெந்தயத்தை உணவுக்கு முன்பு கஞ்சிபோல் உட்கொண்டால் அதிக பலன் கிட்டும். உணவுடனும், இட்லி, வடை, அப்பம், பலகாரம், கஞ்சி, பொங்கல், ரசம் என்று எந்த உருவிலும் பயன்படுத்தலாம்.

ஒரு நாளைக்கு இப்படி 25 கிராமுக்குக் குறையாமல் உட்கொள்ள வேண்டும். நீர்– இரத்தத்தில் சர்க்கரை மிகுதியாக உள்ளவர்கள் சுமார் 100 கிராம்வரை உட்கொள்ள வேண்டும். இவ்வாறு நோய்க்கு ஏற்ப வெந்தய அளவை நிர்ணயித்து உட்கொண்டால் குணம் பெறலாம்.

வெந்தயத்தில் நார்ச்சத்து மிகுதி. எனவே மலச்சிக்கலையும் நீக்கும். நார்ச்சத்துமிகுதியாக இருப்பதால் சர்க்கரைச் சத்து குடலில் இருந்து இரத்தத்தில் அதிகம் சேரவிடாமல் தடுத்துவிடுகிறது.

வெந்தயத்தில் உள்ள புரதமும், வைட்டமின் 'பி'யும் தாதுப் பொருட்களும் ஈரலுக்கு நன்மை தருபவை. நீரிழிவு நோய்க்கு ஈரலின் குறைபாடும் ஒரு காரணம். வெந்தயத்தை நீரிழிவுக்கு வீட்டுமருந்து என்று துணிந்து கூறலாம்.

★

## முருங்கை இலைச் சூரணம் செய்வது எப்படி?

முருங்கை இலைச் சூரணம் செய்வது எப்படி?

நன்கு சுத்தம் செய்யப்பட்ட முருங்கைக் கீரையைக் கைப்பிடி அளவு எடுத்து, அதில் பாதியளவு சாப்பிடும் உப்பு சேர்த்து சுத்தமான மண் சட்டியில் இட்டு அடுப்பில் வைத்து வறுக்க வேண்டும்.

இலை கருகிச் சாம்பலாகும் வரை வறுக்க வேண்டும். பின்னர் அச் சாம்பலை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தச் சூரணம் உஷ்ண பேதிக்கு நல்ல மருந்து. வயிற்றுவலியுடன் அடிக்கடி குழம்பு போல பேதியாவது தான் உஷ்ண பேதி என்று சொல்லப்படுகிறது.

இவ்வாறு பேதியாகும் போது தேக்கரண்டி அளவு முருங்கை இலைச்சூரணத்தை வாயில் இட்டு சிறிது வெந்நீர் குடித்து விட்டால் உடனே பேதி நிற்கும். வயிற்று வலியும் அடங்கி விடும்.

★

## பொது அறிவுப்போட்டி இல. 34

1. திரு. மண்டேலாவின் சிறைவாசம் எத்தனை ஆண்டுகள் நீடித்தன? ... ... ... ... 35 ஆண்டுகள் / 27 ஆண்டுகள்
2. அண்மையில் உடைக்கப்பட்ட சரித்திரப் புகழ் பெற்ற சுவர் எது? ... ... ... ... ... சீனப்பெரும்சுவர் / பெர்லின்சுவர்
3. நட்சத்திரங்களில் இதுவும் ஒன்று? ... ... ... ... துருவன் / சிவாஜி
4. மஞ்சள் நிற ஆறு ஓடுவது எங்கே? ... ... ... ஜப்பானில் / சீனாவில்
5. இதற்கும் உருவம் இல்லை? ... ... ... ... ... நீர் / இறைவன்
6. இமயமலை அடிவாரத்தில் உள்ள மாநிலம் எது? ... ... பஞ்சாப் / மகாராஷ்டிரம்
7. 2 ஆம் உலகப் போரில் 3 ஆவது அணுக்குண்டு போடப்பட்ட இடம்? ... ... ... ... ஜப்பானில் / ரஷ்யாவில்
8. இவரைப் பிச்சைக்காரர்களின் சக்கரவர்த்தி என்றும் கூறுவர்? ... ... ... ... ... நேரு / காந்தி
9. சில சமயங்களில் இதுவும் துள்ளும்? ... ... ... ... மான் / மனம்
10. உலகில் மிகப் பெரிய விமானசேவை எங்கு உள்ளது? ... ... ... ... ... ரஷ்யாவில் / அமெரிக்காவில்
11. சூயஸ்கால்வாய் எங்கு உள்ளது? ... ... ... ... இத்தாலி / எகிப்து
12. இங்கும் மீன் பிடிக்க முடியும்? ... ... ... சஹாராபாலைவனம் / குளம்

பெயர்:– ..............................
விலாசம்:– ..............................
..............................

பொது அறிவுப்போட்டி இல: 34
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம்தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 7 – 03 – 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றாம் பரிசு: 25 ரூபா




1. வான்பரன் உன்னிடத்தில் – புகுந்தேன்
நான்சரண் ஆகையினால்
என்னைநீ காக்கவேண்டும் – என்று
2. உன்னை நான் வேண்டுகின்றேன்
நீயிங்கு இன்றிவேறு – எனக்கு
யாருண்டு ஆதரிக்க
3. உண்மையில் தெய்வபக்தி – நிறைந்தோர்
மேன்மையின் செயலுடையோர்
அச்செயல் கொண்டோரது – நட்பை
நிச்சயம் வேண்டுகிறேன்
4. மண்ணக மீதெனக்கு – அனைத்தும்
விண்ணவ னே அவரோ
நான்இங்கு சுதந்தரித்து – பெற்ற
சீர்பொங்கு நல்லசொத்தாய்
பானமாய் நல்லுணவாய் – விண்ணாம்
வானத்துப் பேரின்பமாய்
இருப்பது மட்டுமல்ல – எனது
இருப்பினில் உள்ளதையும்
சீரோடு காத்தும்வைப்பார் – 6, தெளிந்த
நீர்ஓடு பூம்புனலும்
சித்திரப் புலத்தரையும் – எனது
சொத்தென நான்பெறவே
வழிஇனி தாய்ச்செய்கின்றார் – இந்தப்
புவியினி லெனக்குரித்தாய்
பரன்தந்த உடைமைகளோ – ஆறா
பிரமிக்கத் தக்கனவே
5. எனக்குநல் ஆலோசனை – வழங்கும்
எனதுவல் ஆண்டவனை
போற்றுவேன் எனக்குஅவர் – இரவில்
ஏற்றநல் ஞானந்தந்து
சாற்றுவார் நான்எதனை – இங்கு
ஆற்றுதல் வேண்டுமென்று
6. அவரைஎன் றுந்துதிப்பேன் – ஆமாம்
அவரேஎன் பக்கம்எந்தன்
அருகினில் உள்ளதனால் – எந்தன்
வலத்தினில் இருப்பதனால்
7. இடறிநான் விழுவதில்லை – எனவே
உடலினால் மட்டுமல்ல
எந்தனின் இதயத்தாலும் – இன்னும்
எந்தனின் ஆவியாலும்
நான்இன்பங் கொண்டிடுவேன் – அரிய
வான்இன்பங் கண்டிடுவேன்
8. ஏன்என்றால் இறந்தோர்களில் – ஒன்றாய்
நீஎன்றால் என்னைத்தள்ளாய்
உன்னைஅன் பால்விரும்பும் – உனது
உண்மையின் அடியார்களை
சவக்குழிக் குள் அழுகி – மணந்து
அவத்தினிற் போகவைக்காய்
9. என்னோடு கூடநீதான் – இறைவா
எப்போது முள்ளதனால்
நல்ஜீவ மார்க்கந்தன்னை – எனக்கு
என்தேவ நீகாட்டுவாய்
உன்னுடை சமுகம்என்றும் – என்னில்
உள்உறைந் திருப்பதனால்
ஏற்படும் இன்பத்தையும் – வாழ்வில்
தென்படும் நித்தியநல்
ஆனந்தக் களிப்பினையும் – அரிய
பேரின்ப மகிழ்ச்சியையும்
நான்இங்கு அனுபவிக்க – இறைநீ
தான்நன்கு ஆக்கிவைத்தாய்.

வேதாகம சங்கீதம்
தமிழ்வடிவம்: நவாலியூர் சி. என். செல்லத்துரை

# நிலை ஊன்றிப் பார்!



அவன் — முத்திழைபார் மேகமெனும் அற்புதநற் சேலைகளை
எத்தனைபார் நிறமடியோ ஈதென்ன விந்தையடி?
அத்தனையும் ஆகாயக் கொடிதனிலே காய்கிறதே!
வித்தையினை விளைகின்ற வியப்பினைநீ பாராயோ!

அவள் — ஓடுகின்ற நிலாக்குழவி ஓராடை யில்லாமல்
வாடுகின்ற நிலைபோக்க வண்ணமிடும் ஆடைகளை
கைகளிலே கொண்டுஅரும் காற்றுஎனும் அன்னையவள்
எய்துகிறாள் பின்னவளை எழிற்காட்சி பாரீரோ!

அவன் — துகிலிழந்து பாஞ்சாலித் துயருழலும் நிலவினுக்கு
அருகிருந்து அருள்கூட்டும் கண்ணபிரான் தானேயிக்
காற்றென்று நானுரைக்கின் கருத்தினிலே பிழையுளதோ?
ஆற்றென்று மாமாயன் அருளுகின்ற கோலமிதே!

அவள் — இன்னொருகால் விழிதிறந்து இயற்கையினைப் பாரீரோ
இன்னலும் மதிகளிக்க ஓங்குமுகிற் சேலைகளை
கொண்டுதரும் காற்றேதான் கலைப்பதுவும் அதுவன்றோ
இன்திரட்டை வேடங்கள் அதுபுனைதல் தேரீரோ?

அவன் — அருந்தலைவீ உண்மையிதே அஹாவிப் புதுக்காட்சி
இருவரையிற் காணாமல் இருந்ததுவும் பேதமையே
கண்ணனெனும் காற்றினையாம் காதலுடன் போற்றிடுவோம்
இன்னல்தரும் சிறுதுச்சா தனக்காற்றைச் சீறிடுவோம்!



இருவரும் — ஈரம் வெறியிரண்டும் இருங்காற்றுக் குண்டேயால்
நேரம் அறிந்துசெயும் நீயறிவாய் – சேர்திங்கள்
தேம்பத் துகில் வழங்கித் தெவ்வரெனத் தான் கலைத்து
வாங்கும் நிலையூன்றிப் பார்!

- பொ. கணேசமூர்த்தி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிகளுக்கு 'விழியொட்டு வில்லைகள்'

## முட்டை உற்பத்தி அதிகரிக்க உதவும்!

கோழிகளுக்கு நல்ல சிவப்பு நிறத்திலான லென்ஸ் கொண்ட மூக்குக் கண்ணாடியை மாட்டினால் அவற்றுக்குச் சண்டையிடும் குணம் குறைந்து, அவை நிறைய முட்டையிடும் என்பது நடைமுறையில் கண்டுபிடிக்கப்பட்ட விஷயம்.

ஆனால் கோழிக்கு மூக்குக் கண்ணாடி மாட்ட இயலாது. அதற்கு மாற்றாக கோழியின் கண்களில் விழியொட்டு வில்லைகளை (Contact Lens) பொருத்த முடியும்.

அமெரிக்காவில் இப்போது ஒரு லட்சம் பண்ணைக் கோழிகளுக்கு இவ்விதமாக சிவப்புநிற விழியொட்டு வில்லைகள் பொருத்தப்பட்டுள்ளன.

கோழிகளுக்கு இயல்பாகச் சண்டையிடும் குணம் உண்டு. பண்ணைகளில் ஆயிரக்கணக்கில் கோழிகளை வளர்க்கும் போது இது பெரிய பிரச்சினையே.

ஆனால் சுற்றியுள்ள எல்லாமே கோழிகளின் கண்களில் ரோஜா நிறத்தில், இன்னும் சொல்லப்போனால் அழுத்தமான சிவப்பு நிறத்தில் தெரியுமானால் அவற்றின் இடையே சண்டைக்



குணம் குறைகிறது. அப்போது அவை அதிகமாக முட்டை இடுகின்றன. தவிர, அவை இரை எடுப்பதும் குறைகின்றது. இது நடைமுறையில் கண்டறியப்பட்ட உண்மையாகும். இது ஏன் என்பது விஞ்ஞானிகளுக்கு இன்னும் புரியவில்லை.

மனிதருக்கு விழியொட்டு வில்லை (Contact Lens) பொருத்துவது போல, மேற்படி உண்மையின் அடிப்படையில் கோழிகளுக்குப் பொருத்துவதற்கான விழியொட்டு வில்லையை தயாரித்தால் என்ன என்று றேண்டால் இ. வைஸ் என்னும் தொழிலதிபருக்குத் தோன்றியது.

ஹார்வாட் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர், கம்பியூட்டர்களுக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை மூடிவிட்டு கோழிகளுக்கு விழியொட்டு வில்லைகளைத் தயாரிக்கும் தொழிலைத் தொடங்கினார்.

இந்த விழியொட்டு வில்லைகள் உறுதியானவை. கோழியின் கழுத்தை நன்றாகப் பிடித்துக் கொண்டு சில விநாடிகளில் இவற்றைப் பொருத்திவிடலாம். இந்த விழியொட்டு வில்லைகள் கோழியின் ஆயுள் முழுவதும் உழைக்கும் என்று கூறப்படுகிறது. ★




# அற்பமானதில் கூட அற்புதம் காட்டும் இறைவனின் சிருஷ்டி!

ஒரு மனிதன் மலத்தை உருட்டிச் செல்லும் வண்டு ஒன்றைக் கண்டான். அப்பொழுது அவன் 'அல்லாஹ் இதையும் படைத்திருக்கிறானே! இதனால் என்ன பயன்?' எனக் கூறினான்.

அதன் பின் இறைவன் அவனைச் சோதனை செய்வதற்காக அவனது உடம்பில் ஒரு கட்டியை வளரச் செய்தான். அந்தக் கட்டி உடையவோ கரையவோ இல்லை. எவ்வித மாற்றமும் தென்படாதது கண்டு, வைத்தியர்களும் கைவிட்டனர். அவனும் அயர்ந்து விட்டான்.

இந் நிலையில் ஒரு நாள் அம்மனிதன் வசிக்கும் வீதி வழியாக ஒரு நாட்டு வைத்தியர், சில வியாதிகளைக் குறிப்பிட்டு, அவற்றிற்கு தம்மிடம் சிகிச்சை இருப்பதாகவும் கூறிக்கொண்டே சென்றார்.

உடனே, கட்டியின் வேதனையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அவன் வெளியே வந்து அந்த நாட்டு வைத்தியரை அழைத்தான்.

அவரிடம் தனது உடம்பிலுள்ள கட்டியைக் காட்டி அதற்கு என்ன சிகிச்சை எனக் கேட்டான்.

வைத்தியர் கட்டியை நன்றாகச் சோதித்த பின் மலத்தை உருட்டிச் செல்லும் ஒரு வண்டு வேண்டும். யாராவது கொண்டு வந்தால் சிகிச்சை செய்யலாம் எனக் கூறியதும், பக்கத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிலர் சிரித்தனர்.

நோயாளியோ, எப்படி சிகிச்சை செய்கிறார் பார்க்கலாம் என்று எண்ணி அதில் ஒன்றிரண்டைப் பிடித்து வருமாறு தனது பணியாட்களுக்கு உத்தரவிட்டான். அதன்படி வண்டு கொண்டு வரப்பட்டது. வைத்தியர் அவ் வண்டைப் பிடித்து நெருப்பில் இட்டுப்பொசுக்கி எடுத்து அதன் சாம்பலை அந்தக் கட்டியில் வைத்து அழுத்தினார். அவ்வளவு தான்.

கொஞ்ச நேரத்தில் அதில் இருந்து சீழ் வெளிப்பட்டதோடு, கட்டி அப்படியே உலர்ந்து குணமாகிவிட்டது.

அப்பொழுதுதான் அம் மனிதன் கூறுகிறான்:– 'நிச்சயமாக, சத்தியமாக அல்லாஹ் எப்பொருளையும் வீணாகப் படைத்து விடவில்லை. உபயோகமற்றதாக ஆக்கிவிடவில்லை. ஏனெனில் அல்லாஹ்வின் படைப்புக்களில் மிக அற்பமானதில் கூட அதிக அற்புதமான மருந்தைக் காணமுடிகிறது' — என்று கூறினான்.

தான் அவ்வண்டைக் கண்ட நாளில் கூறிய கூற்றுக்கு மனம் வருந்தி, தனது கூற்று தவறு என்பதை உணர்ந்து இறைவனிடம் பாவ மன்னிப்புக் கோரினார். ★

மூலம்: தரஜாதுல் இன்ஷா
தொகுப்பு: பாத்திமா சிபாயா

### அமுதமொழி

● இறையச்சம் முதலில் உள்ளத்தில் ஏற்படுவதே. எனினும் அது அதோடு நின்று விடுவதில்லை;

மனிதனின் ஒவ்வொரு அங்கத்தையும் ஆட்கொண்டு விடும். அந்த அங்கங்களுக்குத் தீமை புரியும் ஆற்றல் இருக்காது.

இதுவே இறையச்சத்தால் எதிர்பார்க்கப்படும் நன்மை.

இப் பயன் இல்லாவிடின் இறையச்சம் இருப்பதும் இல்லாதிருப்பதும் சமமாகி விடும்.

—இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள்



### அமுதவாக்கு

● இறைவனிடம் கோபத்தைவிட அன்பு முந்தியது.

● எனது உம்மத்தில் ஒரு கூட்டம் இறைவனிடம் பாதையிலே ஈடுபட்டவர்களாக உலகுள்ள காலமெல்லாம் தோன்றிக் கொண்டே இருப்பார்கள்.

அவர்களை பொய்யர்கள் எனக் கூறுவோராலும், புறக்கணிப்போராலும் ஒன்றும் அவர்களுக்குச் செய்து விட முடியாது.

### இரண்டு அறிவுரைகள்

● நான் உங்களுக்கு இரு அறிவுரைகளை விட்டுச் செல்கிறேன்.

ஒன்று — ஊமையாய் உள்ளது.

இரண்டாவது — பேசவல்லது.


ஊமையாய் உள்ளது என்பது – மரணமும்.

பேசவல்லது என்பது– அல்குர்ஆன் ஆகும்.

—நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்


# உங்களுக்குத் தெரியுமா?

## இப்பொழுது குஷ்டரோகத்தை உடல் விகாரங்களின்றிக் குணப்படுத்தலாம்!



குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்த வல்ல மருந்துகள் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நோயின் அறிகுறிகளை வேளைக்கே இனங்கண்டு முறைப்படி சிகிச்சை அளித்தால் எவ்வித அங்க விகாரங்களுமே ஏற்படாமல் குஷ்டரோகத்தைக் குணப்படுத்தி விடலாம்.

### குஷ்டரோகம் ஒரு பரம்பரை வியாதியல்ல

குஷ்டரோகம் என்பது சருமத்தையும் சில நரம்புகளையும் பாதிக்கும் ஒருவகை பக்டீரியாக்களினால் உண்டாக்கப்படும் நோயாகும். உடலில் தோன்றும் (நமைச்சல் அளிக்காத) உணர்வற்ற தடமே இந்த நோயின் முதலாவது அறிகுறி. குஷ்டரோகம் ஒரு பரம்பரை வியாதி அல்ல. அவ்வாறே தெய்வ சாபத்தினால் அல்லது பாவத்தினால் ஏற்படும் நோயுமல்ல.

### குஷ்டரோகம் இலகுவில் தொற்றுவதில்லை

குஷ்டரோகமானது தொற்றக்கூடியது என்றும் தொற்றாதது என்றும் இருவகைப்படும். பொதுவாக, பத்து நோயாளிகளில் 2 பேருக்கே தொற்றக்கூடிய குஷ்டரோகம் ஏற்படுகிறது. அவர்கள் கூட சரியான சிகிச்சையைத் தொடர்ந்து பெற்றுவந்தால் அவர்களிடமிருந்து பிறருக்கு நோய் தொற்றாது.

ஆகவே, நோயாளர்கள் வீட்டில் குடும்பத்தினரோடு தங்கியிருந்து வழமையான அலுவல்களைக் கவனித்துக் கொண்டே சிகிச்சை பெற முடியும்.

### அநேகமானோருக்கு குஷ்டரோக எதிர்ப்புச் சக்தி உண்டு

சகல தொற்றுநோய்களுள்ளும் மிகக் குறைவாகவே தொற்றும் நோய்தான் குஷ்டரோகம். பத்துப் பேரில் ஒன்பது பேர் இயற்கையாகவே இந்த நோய்க்கு எதிரான தடுப்புச் சக்தியைக் கொண்டுள்ளனர். இவர்கள் நோயாளியுடன் நெருங்கிப் பழகினாலும் குஷ்டரோகத்தினால் பாதிக்கப்பட மாட்டார்கள்.

### குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்தலாம்.

குஷ்டரோகத்தை எவ்வித அங்க விகாரங்களுமின்றி முற்றாகக் குணப்படுத்த இப்பொழுது மருந்துகள் உள்ளன. அதற்கு மிக முக்கியமானது நோயை வேளைக்கே கண்டுபிடித்து சரியான முறையில் சிகிச்சை பெறுவதாகும். உரிய வேளைகளில் சிகிச்சை பெறவிட்டால் அல்லது சரியான முறையில் சிகிச்சை அளிக்காவிட்டால் மட்டுமே அங்க விகாரங்கள் ஏற்படும். அவ்வாறு ஏற்படும் அங்க விகாரங்களை மாற்ற முடியாதிருக்கும்.

**குஷ்டரோகத்தின் ஆரம்ப அறிகுறிகள்**

- சருமத்தில் நமைச்சல் அளிக்காத, வெளிறிய அல்லது செந்நிறத் தடங்கள் தோன்றும்.
- இந்தத் தடங்களில் உணர்வோ வலியோ இருக்காது.
- கை கால்களில் விறைப்பு ஏற்படக்கூடும்.
- தடங்களுக்குப் பதிலாகக் கட்டிகள் அல்லது கழலைகள் தோன்றக்கூடும்.

### நினைவிருக்கட்டும்.

இப்பொழுது குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்தலாம். இந்த நற்செய்தியை உங்கள் உறவினர்-நண்பர்கள்-அயலவர் அனைவர் மத்தியிலும் பரப்புங்கள்.

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு
சீபா-கெய்கி குஷ்டரோக நிதியம்

மேலதிக விபரங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல மருத்துவ மாது, பொதுச் சுகாதாரத் தாதிமார் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடம் பெறலாம்.

CGL 3437

இப்பொழுது உடல் விகாரங்களின்றிக் குஷ்டரோகத்தை முற்றாகக் குணப்படுத்தலாம். இன்றே சிகிச்சை பெறுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தான்சன் கல்வி நிலையம்**
தெல்லிப்பழை.

ஆண்டு 11, 10, 9 புதிய பிரிவுகள்
நடைபெறுகின்றன.

விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. மகேந்திரன், மதி
தமிழ் — திரு. கணேஷ்
சமூகக்கல்வி — திரு. திருக்குமார்
வர்த்தகம் — திரு. வரதன்
ஆங்கிலம் — திரு. ஹரிதாஸ்



சஞ்சீவி சஞ்சிகை

03 - 03 - 1990 சனிக்கிழமை



**தான்சன் கல்வி நிலையம்**
தெல்லிப்பழை

A/L DAY CLASS

நடைபெறுகின்றன.

பொருளியல் — திரு. சண்
வர்த்தகம் — திரு. சிவா
கணக்கியல் — திரு. யோகன்
— திரு. வாசன்
அளவையியல் — திரு. சயந்தன்
தமிழ் — திரு. கணேஷ்
இந்து நாகரீகம் — திரு. MR.


# நிக்கரகுவாவில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள்

நிக்கரகுவாவில் மீண்டும் வலதுசாரி ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஆதரவு பெற்ற திருமதி வயலெற்றா ஷாமொறா சென்ற ஞாயிறு நடந்த தேர்தலில் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இடதுசாரி ஜனாதிபதியாக இருந்து தோல்வி அடைந்த ஜெனரல் டானியல் ஒற்றேகா வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி புதிய ஜனாதிபதியிடம் அதிகாரத்தைக் கையளிக்க வேண்டும்.

இந்த நிலையில் நிக்கரகுவாவில் அன்று தொட்டு ஏற்பட்டு வந்த மாற்றங்கள் பற்றி இக்கட்டுரை விவரிக்கின்றது.

நடந்து முடிந்த தேர்தலின் பின்னர் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள் பற்றிய கண்ணோட்டம் அடுத்தவாரம் பிரசுரமாகும்.

கிழக்கு எல்லை கரிபியன் கடல், மேற்கு எல்லை பசுபிக் சமுத்திரம்.

வடக்கு எல்லை ஹொண்டுறாஸ், தெற்கு எல்லை கோஸ்டாறிக்கா ஆகிய நாடுகள்.

இவற்றின் நடுவே அமைந்துள்ள நாடு நிக்கரகுவா.

மத்திய அமெரிக்க நாடுகளில் சன அடர்த்தி குறைந்த நாடு நிக்கரகுவா ஆகும்.

ஸ்பானிஷ் மற்றும் இந்திய வம்சாவளி வந்தோரே நிக்கரகுவாவில் பெரும்பான்மையாக வாழுகின்றனர்.

கரிபியன் தீவுகள் வழியாக சென்ற கறுப்பு இனத்தவரும் நிக்ரகுவாவில் சிறுபான்மையானவர்களாக உள்ளனர்.

நிக்கரகுவாவை 1502 ஆம் ஆண்டில் கிறிஸ்தொபர் கொலம்பஸ்கண்டுபிடித்தார்.

1523 இல் பனாமாவில் இருந்து சென்ற ஸ்பானிஷ் நாட்டவர் நிக்கரகுவாவின் பசுபிக் கரையோரப் பகுதியில் முதலில் குடியேறினர்.

1821 இல் மெக்ஸிக்கோ, ஸ்பெயின் ஆகிய நாடுகளுடனான தொடர்பை நிக்கரகுவா துண்டித்துக் கொண்டது.

1838 இல் நிக்கரகுவா சுதந்திர நாடானது. இருந்தும் லியோன், கிரனடா ஆகிய நாடுகளால் நிக்கரகுவாவுக்கு நெருக்கடி இருந்து கொண்டு வந்தது.

1916 இல் அமெரிக்கா நிக்கரகுவாவுடன் உடன்பாடு ஒன்றைச் செய்துகொண்டது. அதன்மூலம் பொன்சேகா வளைகுடா, கோர்ன் தீவுகளுக்குச் செல்லக்கூடியதான கடல்பாதை ஒன்றை நிக்கரகுவா ஊடாக அமெரிக்கா பெற்றுக்கொண்டது.

பொன்சேகா வளைகுடா, கோர்ன் தீவுகள் ஆகியவற்றில் அமெரிக்கா தனது தளங்களை அப்போது வைத்து இருந்தது.

## சோமொஸா ஆட்சி

அதன் பின்னர் நிக்கரகுவாவின் சக்திமிக்க தலைவராக விளங்கிய அனஸ்ராஸியோ சோமொஸாவுடன் அமெரிக்கா தனது தொடர்பை வளர்த்துக் கொண்டது.

சோமொஸா குடும்பத்தினர் 46 ஆண்டுகள் நிக்கரகுவாவை ஆண்டு வந்தனர். அது ஒரு சர்வாதிகார ஆட்சியாக விளங்கியது.

அமெரிக்க ஆதரவு பெற்ற சோமொஸாவின் ஆட்சியைக் கவிழ்க்க சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி ஆயுதக் கிளர்ச்சியை ஆரம்பித்தது.

இதன் உச்சக்கட்டமாக சர்வாதிகார ஜெனரல் சோமொஸா 1979 இல் ஜனாதிபதிப் பதவியை ராஜினாமாச் செய்து வெளி நாட்டுக்குத் தப்பி ஓடிவிட்டார்.

## சான்டினிஸ்டா அரசாங்கம்

1979 இல் ஜெனரல் டானியல் ஒற்றேகா தலைமையில் சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணியின் அரசாங்கம் பதவிக்கு வந்தது.

மார்க்ஸீஸ - லெனினிச சார்பு அரசாங்கமாக ஒற்றேகாவின் ஆட்சி அமைந்தது.

ஒற்றேகா தலைமையிலான இடதுசாரி அரசு நிக்கரகுவாவில் அமைந்தது அமெரிக்காவுக்குப் பிடிக்கவில்லை.

வலதுசாரி கெரில்லாக்குழுவான கொன்றா அமைப்பை அமெரிக்கா உருவாக்கி அதன் மூலம் ஒற்றேகா அரசுக்கு தலையிடி கொடுக்கத் தொடங்கியது.

கொன்றா கிளர்ச்சியாளரின் ஆயுதப் போராட்டம் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்தது.

இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தது. உற்பத்தி குறைந்தது.

போதாக்குறைக்கு அமெரிக்காவும் நிக்கரகுவா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இக்கட்டத்தில்தான் சுதந்திரமான பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த 44 வயதான ஜெனரல் டானியல் ஒற்றேகா முடிவு செய்தார்.

அமெரிக்க ஆதரவுடனான 14 எதிர்க்கட்சிகள் கூட்டணி தேர்தலில் போட்டியிடவும் ஒற்றேகா அனுமதியளித்தார்.



வயலெற்றா ஷாமொறா

இத்தேர்தலைக் கண்காணிக்க ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்க நாடுகள் அமைப்பு ஆகியவற்றைச் சேர்ந்த 600 அவதானிகளையும் ஒற்றேகா அழைத்து இருந்தார்.

நிச்சயம் ஜனாதிபதி தேர்தலில் நான் வெற்றி அடைவேன்'' — என்று நம்பியே ஜெனரல் ஒற்றேகா சுதந்திரமான முறையில் தேர்தலை நடத்தினார்.


## 1990 — தேர்தல்

பதினான்கு எதிர்க் கட்சிகள் கூட்டணி சார்பில் திருமதி வயலெற்றா ஷாமொறொ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

தேர்தல் பணிக்காக அமெரிக்கா எதிர்க்கட்சிகளுக்கு பெருமளவு நிதியும் வழங்கியது.

மீண்டும் ஜனநாயகம் நிக்கரகுவாவில் ஏற்படவேண்டும் என்பதற்காகவே இந்த உதவியை அளிப்பதாக அமெரிக்கா கூறியது.

ஆனால் சுதந்திரமான பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு அமெரிக்கா முன் வரும் என்ற திடமான நம்பிக்கையுடன் ஜெனரல் ஒற்றேகா இருந்தார். ★

# நாம் கவனமாக இருந்தால்தான் கடவுளும் கைகொடுப்பார்

முன்யோசனையும் அவதானமும் உள்ளவர்களுக்குத்தான் கடவுளும் கருணை காட்டுவார் என்று சொல்லுவார்கள். சின்னமுத்து நோய் ஒரு 'தெய்வச் செயல்' என்று கடவுளின் மீது பொறுப்பை சுமத்திவிட்டு வாளாவிருக்கலாமா?......இதனுல் யாருக்கும் எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. தாய்மாரே, சின்னமுத்து பற்றிய உங்கள் நம்பிக்கை எதுவாக இருந்தாலும் இந்த நோய் பற்றி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய சில முக்கியமான விடயங்கள் உள்ளன என்பதை மறந்துவிடாதீர்கள். சின்னமுத்து ஒரு பயங்கர நோய். அதனை ஓர் ஆபத்தற்ற, சாதாரண நோய் என்று எண்ணி அசட்டையாக இருந்தால் உங்கள் குழந்தையின் உயிருக்குக்கூட ஆபத்து நேரிடலாம். சின்னமுத்து நோய் காரணமாக மூளைக்காய்ச்சல், கண்குருடாதல், நியூமோனியா, வயிற்றோட்டம், போஷாக்கின்மை முதலிய பாரதூரமான விளைவுகளும் ஏற்படலாம்.

இந்தக் கொடிய சின்னமுத்து நோயிலிருந்து உங்கள் அன்புக் குழந்தையைக் காப்பாற்ற நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்: குழந்தைக்கு 9 மாதங்கள் நிரம்பியதும் தாமதிக்காமல் அண்மையிலுள்ள அரசாங்கத் தாய் சேய் நலப் பராமரிப்பு நிலையத்திற்குக் கொண்டுசெல்லுங்கள். அங்கே இலவசமாக வழங்கப்படும் சின்னமுத்து நோய்த் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொடுங்கள். ஒரே தடவையில் செலுத்தப்படும் இந்தத் தடுப்பு மருந்து உங்கள் குழந்தைக்குச் சின்னமுத்து நோயிலிருந்து வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பளிக்கும்.

உங்கள் குழந்தைக்குப் பாதுகாப்பளிக்க வேண்டியது தாயாகிய உங்கள் தலையாய கடமை!

சுகாதார, மகளிர் விவகார அமைச்சு
யுனிசெப்

**துரித தடுப்பு மருந்தேற்றல் தேசிய இயக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org